பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 03 வியாழக்கிழமை (20.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 328



09 நாட்டில் துப்பாக்கி காலாச்சாரம்




14 தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு



21 காங்கிரஸ் தோல்வி எழுதப்பட்ட முடிவு

# சட்டத்தின் மீது மக்கள் நம்பிக்கை வைக்க முடியாத பாரதூர நிலைமை

## கொலன்னாவை சம்பவம் குறித்து அமைச்சரிடம் விசாரிப்பது கேலிக் கூத்து என்கிறார் ரணில்



கொழும்பு, ஒக்ரோபர் 20

**17 ஆவது அரசமைப்பை அரசு நடைமுறைப்படுத்தாவிட்டாலும் சட்டம், அரசு மீது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பச் சுயாதீனமான பொறிமுறையொன்றை அரசு ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

**நாட்டில் சட்டம் சீர்குலைந்துள்ளது தொடர்பில் எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை நேற்று நாடாளுமன்றில் முன்வைத்தார். இதனை வழிமொழிந்து பேசியபோது எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

குறிப்பாக இன்று நாட்டில் மக்களும், பொலிஸாரும் சட்டத்தைக் கையில் எடுப்பதன் மூலம் ஜனநாயகத்துக்குச் சவால் ஏற்பட்டுள்ளது. சட்ட வரையறைகள் இன்று சீராக அமுல்படுத்தாததினால் மக்கள் சட்டத்தை கையில் எடுத்து தீர்வு காண முயற்சிக்கின்றனர்.

சோமாலியாவில் ஆட்சியிலிருந்த அரசு சட்டத்தை சீராக அமுல்படுத்தாமையால் அங்கு குழப்பம் ஏற்பட்டது. ஆனால், இலங்கையில் அரசு ஆட்சியில் இருந்தபோதிலும், சட்டம் மற்றும் சட்ட வரையறைகள் அமுலில் இல்லை. 17 ஆவது அரசமைப்பு இரத்து செய்யப்பட்டுள்ள போதிலும் சட்டத்துக்குத் தேவையானவைகள் நிறைவேற்றப்படவில்லை.

பக் 27

### ஆஸி.செல்வோர் எண்ணிக்கை குறைந்தது

சிட்டி, ஒக். 20

இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியா செல்லும் அகதிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

ஆஸ்திரேலிய குடிவரவுத் துறை அமைச்சர் கிரிஸ் பவன் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து அங்குள்ள அகதிகள் மலேசியாவுக்கு மாற்றும் வேலைத்திட்டத்தின் காரணமாகவே இந்த வீழ்ச்சி இடம்பெற்றதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கான அகதி விண்ணப்பங்கள் 17 சதவீதமாகக் குறைவடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

எனினும், ஆஸ்திரேலியாவுக்கான அகதி விண்ணப்பங்கள், 19 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-323)

## யாழ். மாணவத் தலைவர் தாக்குதலை கண்டித்து நாடுமுழுவதும் உள்ள பல்கலைகளில் ஆர்ப்பாட்டம்

### அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியம் முஸ்தீபு

கொழும்பு, ஒக். 20

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை கண்டித்து அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நாடு முழுவதும் உள்ள பல்கலைக் கழகங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க முஸ்தீபு செய்துள்ளது.

அதேவேளை, இனந்தெரியாத கும்பலொன்றின் கண்மூடித் தனமான தாக்குதலால் படுகாய

பக் 28

## சர்வதேசப் பிடிக்குள் இலங்கையை சிக்கவைக்க கூட்டமைப்பு முயற்சி

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, ஒக். 20

இலங்கை அரசை சர்வதேச பிடிக்குள் சிக்கவைப்பதற்கும், இலங்கைக்கு எதிரான நாடுகளுக்கு விஜயம் செய்யும்போது தமக்கு உள்நாட்டில் பாரிய பிரச்சினை உள்ளது போன்றதொரு மாயையைத் தோற்றுவிப்பதற்குமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வவுனியாவில்

பக் 25

## கூட்டமைப்பின் உண்ணாவிரதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

### காணி அமைச்சர் தென்னக்கோன்

வடக்கு, கிழக்கில் காணிப் பிரச்சினை உள்ளதாகக் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வவுனியாவில் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

-இவ்வாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

30 வருட யுத்தத்தால் துன்பங்களை அனுபவித்து

25

## அமெ. காங்கிரஸ் எம்.பிக்கள் நேற்று யாழ்ப்பாணம் வருகை



யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ். குடாநாட்டுக்கு நேற்று வருகை தந்த அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இங்குள்ள நிலைமைகள் குறித்து யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விரிவாக விளக்கினார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 3 பேர் உட்பட 9 பேர் கொண்ட குழு வினருடன் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவும் வருகை தந்திருந்தார்.

விமானம் மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த தூதுக்குழு

28

## ஆஸி. தொலைக்காட்சியில் வன்னி அவலம் ஒளிபரப்பு

வன்னில் இடம்பெற்ற இறுதிகட்ட யுத்தம் தொடர்பாக ஆஸ்திரேலிய தமிழ்ப் பிரஜையான மீனா கிருஷ்ணமூர்த்தி தனது நேரடிச் சாட்சியத்தைப் பதிவு செய்துள்ளார். அவருடன் டாக்டர் சாம்பவியும் இணைந்து ஆஸ்திரேலியாவில் 3 பேருக்கு எதிராக வழக்கு தொடுக்க முனைப்புகளைக் காட்டியுள்ளனர்.

இதனை ஆஸ்திரேலியாவின் முன்னணி தேசிய தொலைக்காட்சியான எ.பி.சி ஒளிபரப்பியுள்ளது. சுமார் 9 நிமிடம் ஒளிபரப்பப்பட்ட இந்தக் காணொளியால் ஆஸ்திரேலிய மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீனா தனது அனுபவத்தை விவரிக்கையில், தாம் முள்ளிவாய்க்கால் வரை சென்று எவ்வாறு உயிர்பிழைத்தேன் எனக் கூறியுள்ளார். **வைத்தியசாலைகளை நோக்கி இலங்கை**

27

## சாத்வீகப் போராட்டங்களுக்கு குந்தகம் தொடர்ந்தால் விளைவு விபரீதமாகிவிடும்

### சபையில் கூட்டமைப்பு எம்.பி எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.20

நாம் தமிழீழத்தை மறந்து விட்டாலும் அரசும் பாதுகாப்புப்படையினரும் தமிழீழத்தை மறக்க மாட்டார்கள் போல் தெரிகிறது.

நாம் அகிம்சை வழியில் நடத்தும் சாத்வீகப் போராட்டங்களுக்குத் தொடர்ந்தும் குந்தகம் ஏற்படுத்த முயன்றால் அதன் விளைவு விபரீதமாகவே இருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

சட்டம் ஒழுங்கு சீரழிவு தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய வினோ தொடர்ந்து உரையாற்றும்

25

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் தெளிவான வானிலையும் பிற மாவட்டங்களில் இடியுடன் கூடிய மின்னல் நிலவும் சாத்தியம்.

## யாழ். மாவட்ட செயலகத்தில் நாளை கூட்டம்

நாவற்குழி, ஒக்.20

யாழ்.மாவட்டச் செயலகத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாதாந்த வேலைத்திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கை தொடர்பாக ஆராயப் படவுள்ளதால் உரிய உத்தியோகத்தர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-121)

# பேசாலையில் எரிபொருள்! தேர்தல் குண்டு இது!!

ஆகக்குறைந்த சமுர்த்தி நிவாரணம் ஆயிரம் ரூபா. ஆனால் அது எப்போது கிடைக்கும் என்று கூறமுடியாது. ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்கவின் கேள்விக்கே இந்த பதில் அளிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாக சமுர்த்தி நிவாரண முத்திரைகளைப் பெறுபவர்களுக்கு அந்தத் தொகை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டுள்ளது. இதனை அதிகரித்து விட்டீர்களா? எத்தனை பேருக்கு வழங்கி உள்ளீர்கள் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க. பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன பதில் அளித்தார்.

### குறைந்த சமுர்த்தி நிவாரனம் 1000 ரூபா! கிடைப்பது எப்போது என்பது தெரியாது!

ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த சமுர்த்தி முத்திரை பெறுப்பவர்கள் எல்லோருக்கும் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க சிபார்சு செய்துள்ளோம். இன்னும் கூடுதலாக ஆயிரத்து ஐநூறு ரூபா வரை அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் பிரதி அமைச்சர்.

மிகவும் சந்தோஷம் அப்படியானால் இதனை எப்போது வழங்கப் போகின்றீர்கள் என்று மடக்கினார் ரவி கருணாநாயக்க.

இப்போது முன் மொழிந்துள்ளோம் நிதி கிடைத்தவுடன் நடைமுறைப்படுத்துவோம். எப்போது கிடைக்கும் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது என்று சமாளித்த பிரதி அமைச்சர், மஹிந்த சிந்தனை பத்து வருடத் திட்டம் சற்று பொறுத்திருப்போம் என்றும் கூறினார்.

என்ன ஐயா உங்களுடைய பதில். பத்து வருடத்திட்டம் பொறுத்து இருப்போம் என்கின்றீர்கள். மூன்று வயதுக்குக் குறைந்த குழந்தைகள் இருக்கும் குடும்பங்களுக்கு மாதாந்தம் ஆயிரத்தி ஐநூறு ரூபா மேலதிகமாக வழங்கப்படும் என்றீர்கள். பத்து வருடங்கள் செல்லும் போது இந்தக் குழந்தைகள் பெரியவர்களாகிவிடமாட்டார்களா? ரவிகருணாநாயக்க கேட்ட கேள்விக்கு அமைச்சரிடமிருந்து பதில் எதும் இல்லை.

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் 15 கேள்விகளுக்கான முன் அறிவித்தல்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் சில கேள்விகளுக்கு மட்டுமே பதில் அளிக்கப்பட்டன. இதனால் வழமையான கேள்வி நேரத்தில் காணப்படும் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறவில்லை.

### இரண்டு சட்டத்திருத்தங்கள் ஒரேவேளையில் விவாதம்

நேற்று நாடாளுமன்றத்தில் -

* இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி திருத்தச்சட்டமூலம்.
* மது வரி கட்டளைகள் திருத்தச்சட்டம் ஆகிய இரு சட்ட வரைவுகளும் ஒரே நேரத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

### பேசாலையில் எரிபொருள்! இது தேர்தல் குண்டு!!

எதிர்க்கட்சி உறுப்பினரான ரவி கருணாநாயக்க இந்த அரசின் அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக விமர்சித்தார். ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் மக்களை திசைதிருப்ப ஏதாவது ஒன்றைக் கூறி மக்களைத்திசை திருப்புவது வழமை.

இந்த முறை மன்னார் பேசாலையில் எரிபொருள்கள் கிடைக்கும் என்று ஆய்வாளர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். நாம் கோடீஸ்வர நாடகப் போகிறோம் என்று தேர்தல் குண்டு ஒன்றைப் போட்டு மக்களைத் தம் பக்கம் திருப்ப முயன்றனர். ஆனால் கொழும்பில் அது ஈடுபடவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

### அடிக்கல்லோடு நின்றுவிட்ட வீடமைப்புத்திட்டம்

ரவி கருணாநாயக்க மற்றும் ஒரு விடயத்தையும் புட்டுக் காட்டினார். அதாவது அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் கொழும்பைச் சொர்க்க போகமாக மாற்றப் போகிறோம் என்று கூறிக் கொண்டு கொழும்பின் பல பாகங்களிலும் வீடமைப்புத் திட்டங்களுக்கான அடிக்கற்களை நட்டனர். ஆனால் அவை அப்படியே இருக்கின்றன. வீடுகளைக் காணவில்லை. அதனால் தான் மக்கள் நல்ல தீர்ப்பு வழங்கிவிட்டனர் என்றார்.

### கொழும்பில் நேர்மையான தேர்தல்

அப்போது குறுக்கீடு செய்த ஆளும்கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் கொழும்பில் நீதியான முறையில் தேர்தல் நடத்தப்பட்டது. அதனால் தான் வெற்றியடைந்தீர்கள் என்றார்.

கௌரவ அஸ்வர் கூறுவதும் சரிதான் இந்த அரசாங்கம் மக்களுக்கு பல்வேறு விதமான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றிவிட்டது. பல ஆயிரம் வீடுகளை இடித்து மக்களை கொழும்பில் இருந்து விரட்டப் பார்க்கின்றது. பெறுமதிமிக்க காணிகளை வெளிநாட்டவர்களுக்கு விற்று வருகின்றது என்றும் குற்றம் சாட்டினார்.


### ரவியை கோவணத்துடன் பார்த்தார்....!

தேர்தல் காலங்களில் கொடுக்கும் எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றிவிட முடியாது. இது சகஜகம். இன்று நாட்டில் மிகவும் பெறுமதியான காணிகள் கொழும்பில் தான் இருக்கின்றன. அங்கே குப்பை கொட்டவும் சாக்கடை அடைக்கவும் பயன்படுத்த முடியுமா?

இந்தக் குடிசைகளையும் சேரிகளையும் அகற்றி நவீன மயப்படுத்த வேண்டும். இதற்கு எதிர்க்கட்சியினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதனால் தான் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

தம்பனையில் உள்ள காட்டில் வெளிநாட்டவர்களுக்கு காணிகள் வழங்க முடியுமா?

நாளுக்கு நாள் நாமும் முன்னேற வேண்டும். முன்பு வேடுவர்களாகக் கோவணக் கட்டிக் கொண்டு இருந்தோம். படிப்படியாக முன்னேறி 'கோட் சூட்' போட்டுக் கொண்டு வருகின்றோம். இன்று நண்பர் ரவி கருணாநாயக்காவை கோவணத்துடன் பார்த்தால் சகிக்கமுடியுமா? என்று கிண்டல் அடித்தார். அப்போது சபையில் பலத்த சிரிப்பு ஏற்பட்டது. பார்வையாளர் சபையில் இருந்த பாடசாலை மாணவர்களும் சிரித்து விட்டனர்.




சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

### அஸ்வர் வக்காலத்து வங்கினாலும் அமைச்சராக முடியாது

கூட்டமைப்பு உறுப்பினர் அரியநேத்திரன் உரையாற்றும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் வீடுகள் இன்றி கஷ்டப்படுகின்றனர். வெள்ளத்தால் அடிக்கப்பட்ட வீடுகளுக்கு நஷ்டஈடாகவும் மீளக்கட்டி எழுப்பவும் தலா ஒன்றரை லட்சம் ரூபா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்தப் பணம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக வழங்கப் படாததினால் அது பாதிக்கப்பட்ட மக்களுக்குகிடைக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

அதேவேளை பெருமளவிலான பட்டதாரிகள் தொழில் வாய்ப்பு இன்றி இருக்கின்றனர். இவர்களுள் பலர் 40 வயதையும் தாண்டி விட்டனர். இவர்களுக்கு அரசுநியமனம் வழங்கநடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அப்போது ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் அரியநேத்திரனுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது ஆளும்கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் அடிக்கடி இடையூறு செய்தார். இதனைப் பொறுக்க முடியாத அரியநேத்திரன் ஐயா! அஸ்வர் நீங்கள் எவ்வளவுதான் துள்ளிக் குதித்தாலும் வக்காளத்து வாங்கினாலும் உங்களால் அமைச்சராக முடியாது என்றார். அதோடு அஸ்வர் 'கப்சிப்'. இரண்டு சட்டவரைபுகளும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

### சட்டமும் ஒழுங்கும் சீர் கெட்டுவிட்டது

சரியாக பிற்பகல் 4.30 மணிக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்க்கட்சியினரின் சார்பில் ஐ.தே.க. உறுப்பினரும் எதிர்க்கட்சிக் கொறடாவுமான ஜோன் அமரதுங்க நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர் கெட்டுள்ளமை தொடர்பான பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இன்று பாதாள உலக கும்பல்களும் சட்டவிரோத ஆயுத கோஷ்டியினரும் அரசியல் வாதிகளின் அனுசரணையுடன் அவர்களின் நிழல்களாக நடமாடுகின்றனர். இதனால் நடவடிக்கை எடுக்க வேண்டிய காவல் துறையினர் கையாலாகாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்துவிட்டது.

இதனால் ஏற்படும் விபரீதங்களுக்கும் உயிர் இழப்புகளுக்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறிய ஜோன் அமரதுங்க 17 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

### சோமாலியாவுடன் ஒப்பிட வேண்டாம்

இந்தப் பிரேரணையை வழிமொழிந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. சோமாலியாவில் ஆயுதக் குழுக்களின் மோதல் அந்த நாட்டையே சீரழித்துவிட்டது. சோமாலியாவில் அரசு ஒன்று செயல் இழந்த பின்னரே ஆயுதக் குழுக்கள் மோதிக் கொண்டன.

ஆனால் இங்கு உறுதியான ஓர் அரசு இருக்கின்றது. அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இருக்கின்றார். இப்படியான நிலையில்தான் இங்கே ஆயுதம் தாங்கிய போட்டிக் குழுக்கள் மோதிக் கொள்கின்றன. சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டுவிட்டது. இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்கக்கூடாது.

(26 ஆம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகள்

**கைதடி நவீல்ட் பாடசாலை பரிசளிப்பு**

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார். (ஒ-313)

**நெல்லியடி ம.வியில் கலந்துரையாடல்**

வடமராட்சி வலய மட்ட பரிசளிப்பு விழா நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களை கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-313)

**கட்டுரைப் போட்டி**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் கட்டுரைப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**விழிப்புணர்வுக் கண்காட்சி**

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் "சுகாதாரம் மற்றும் போஷாக்கு" விழிப்புணர்வு கண்காட்சி இன்று காலை 8.30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**பரிசில் நாள் நிகழ்வு**

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய பரசில் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் வ. நடராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டத் துரித மீட்சித் திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் சண்முகநாதன் குகதாஸ் கலந்து கொள்வார். (த-207)

**பரிசில் நாள்**

கைதடி நவீல்ட் பாடசாலை பரிசில் நாள் விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரும் மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலா ளருமான இ. இளங்கோவனும், சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சமூக சேவைகள் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் ஆகியோரும் கலந்து கொள்வர். (த-207)

**கடன் வழங்கும் நிகழ்வு**

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பைச் சேர்ந்த 120 நெற் செய்கையாளர்களுக்கு இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையினால் நெற் செய்கைக்கடன் வழங்கப்படவுள்ளது. கடன் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியேகத்தர் முன்னிலையில் இடம் பெறும். (த-207)

# மாணவத் தலைவர் தாக்கப்பட்டமை பொறுப்பான பதில் எமக்குத் தேவை

## மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் அரச அதிபர் ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும். சம்பவம் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்பான பதிலை அளிக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. அங்கு மேலும் தெரிவிக்கப் பட்டவை வருமாறு:-

ஒன்றியத் தலைவர் தாக்கப் பட்ட சம்பவத்தை கண்டித்து நடத்தப்பட்ட கண்டன ஆர்ப் பாட்டத்தை, முன்நின்று நடத் தியவர்கள் யார் என்பது தொடர் பில் சில மாணவர்களை இனந் தெரியாதவர்கள் விசாரித்துள்ள னர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற நாள் தொடக்கம் மாணவர்கள் விசாரிக்கப்படுவது தொடர் வதுடன் பல்கலைக்கழக வளா கத்துக்கு வெளியே இனந்தெரி யாதவர்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத் துடன் தொடர்புபட்ட சூத்திர தாரிகள் இன்று வரை கண்டு பிடிக்கப்படவில்லை. அது பற்றி நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும் தெரியவில்லை தாக்குதல் சம்பவம் நடை பெற்ற இடத்துக்கு அருகில் இராணுவ காவலரண் அமைந் துள்ளது.

இராணுவத்தினரோ, பொலி ஸாரோ இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபடவில்லை யெனின், வேறு ஏதாவது ஆயு தக்குழு இங்கு உள்ளதா? என் பது பற்றி தெரிவிக்கப்பட வேண் டும்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர். பொலிஸார் மற்றும் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். யாழ். பல் கலைக்கழக நிர்வாகமும் இது வரை நடவடிக்கை எடுக்க வில்லை. இனிமேலாது பல் கலைக்கழக நிர்வாகம் பொறுப் புக் கூறும் என எதிர்பார்க் கிறோம்.

அடிப்படை மனித உரிமைக் கருத்தைக் கூட வெளியில் சொல்ல முடியாத அளவுக்கு இங்கு நிலைமை காணப்படு கிறது. கண்டன ஆர்ப்பாட்டம் நடந்த தினத்தன்று இனந் தெரியாத இருவர் மோட்டார் சைக்கிள் முன்புறம் இலக்கத் தகடு இல்லாமல் பல் கலைக் கழக வளாகத்தினுள் நுழைந்து விட்டனர். அவர்களை வழி மறித்து மாணவர்கள் யார் என வினவிய போது சிரேஷ்ட மாணவர்களைச் சந்திக்க வந்த தாகவும் பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கைக்குப் பொறுப்பான ஆசிரியர்களைச் சந்திக்க வந்த னர் எனவும் கூறினர். ஒழுக் காற்று நடவடிக்கைக்குப் பொறுப் பானவர்கள் வந்து நீங்களா எனக் கேட்டுவிட்டு இனந் தெரியாத இருவரையும் பல் கலைக்கழகத்துக்கு வெளியே செல்ல விட்டனர். அவர்கள் யாரென மாணவர்கள் கேட்ட போது தமக்கு தெரியாதென அவர்கள் கைவிரித்துவிட்டனர் இதிலிருந்து ஒழுக்காற்று நட வடிக்கைக்கு பொறுப்பான வர்கள் இரண்டு வேறுபட்ட நிலைப்பாட்டில் செயற்படு கின்றனரா எனச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

கண்டன ஆர்ப்பாட்டம்நடை பெற்ற போது மாணவர்களை இனந்தெரியாதவர்கள் மறை முகமாக வீடியோ படம்பிடித் தனர். எது எவ்வாறாயினும் தாக்குதல் சூத்திரதாரிகள் இனங் காணப்படும் வரை மாணவர் வகுப்புப் பகிஷ்கரிப்பு தொட ரும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

# கண்டனம்

யாழ்ப்பாணம் , ஒக் . 20

யாழ்.பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத் தலைவர் தாக்கப்பட் டதற்குப் பல்வேறு அரசியல் கட்சிகள் கண்டித்துள்ளன.

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

இந்தத் தக்குதல் சம்பவத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி வன்மையாகக் கண்டிக் கிறது. இது ஒரு கபடத்தனமான தாக்குதல். நாகரிகம் அடைந்த ஒரு சமுதாயம் விடுக்கின்ற ஜன நாயக பண்புகளை கேலிக் கூத் தாக்குகின்ற வகையில் இது இடம் பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் நடைபெற்ற பாணி, நேரம், இடம் என்பவற்றை நோக்கும் போது இது இலங்கை இராணுவத்தின் ஆதரவும் பங்களிப்பும் இல்லா மல் இடம்பெற்றிருக்க முடியாது.

### யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

யாழ்.பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத் தலைவர் எஸ் தவபாலசிங்கம் (வயது-25) கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இனந்தெரியாத நபர்களி னால் மிக மோசமாகத் தாக்கப் பட்டுள்ளதை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங் கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

### புதிய- ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி

வடக்குக் கிழக்கில் கடந்த முப்பத் தைந்து ஆண்டுகளாக இருந்து வந்த ஆயுதக் கலா சாரமும் அராஜக தாக்குதல்களும் தற்போதும் நீடித்து வருவதையே யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.தவ பாலசிங்கம் (வயது-25) மீதான பட்டப்பகல் தாக்குதல் எடுத் துக் காட்டுகின்றது. இந்தத் தாக் குதலை எந்த வகையிலும் நியா யப்படுத்தவோ மறைக்வோ முடியாது. அரசியலில் மாற்றுக் கருத்தைக் கொண்டிருந்தமை காக பல்கலைக் கழக மாணவத் தலைவர் மீது மேற் கொள்ளப் பட்டுள்ள மேற்படித் தாக்கு தலை எமது புதிய- ஜனநாயக மாக்சிச -லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

### யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம்

கருத்துக்களைக் கருத்துக் களால் எதிர் கொள்ளும் பக்குவம் எமது சமுகத்தில் வளர்த்தெடுக் கப்படல் வேண்டும். வன்முறை எந்த ஒரு பிரசினைக்கும் தீர்வா கத்தராது. யாழ்.பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத் தலைவர் எஸ்.தவபாலசிங்கம் (வயது -25) தாக்கப்பட்ட சம்பவத்தை யாழ்.பல்கலைக்கழக விஞ் ஞான ஆசிரியர் சங்கம் வன்மை யாகக் கண்டிக்கிறது. (த-எ)

# கட்டாக்காலிக் கால்நடைகள் இன்று முதல் பிடிக்கப்படும்

யாழ்ப்பாணம் , ஒக் . 20

காரைநகர் பிரதேசத்தில் காட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கும் பணிகள் இன்று வியாழக்கிழமை முதல் நடைமுறைப் படுத்தப்படும் எனக் காரைநகர் பிரதேச சபையின் உப தலைவர் சந்திரசேகரம் துர்க்கேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த பிரதேசத்தில் விவசாயில் மேற்கொள்ளப்படும் விவசாயப் பயிர்களை இந்தக் கட்டாக்காலிக் கால்நடைகள் அழித்து வருகின்றன.

எனவே கால்நடைகளை மக்கள் இன்று தொடக்கம் வீட்டில் கட்டி வைக்கவேண்டும்.

இந்தக் கட்டாக்காலிக் கால்நடைகளை பிடிப்பதற்கு காரைநகர் பிரதேசத்தில் 09 கிராமசேவையாளர் பிரிவிலும் 27 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட இந்த 27 பேரும் இன்று வியாழக்கிழமை முதல் கிராமசேவையாளரின் உதவியுடன் கட்டாக்காலிக் கால் நடைகளை பிடிக்கும் பணியில் ஈடுபடுவார்கள்.

பிடிக்கப்படும் கால்நடைகள் பத்து நாள்களுக்குள் உரிமை யாளர்களினால் உரிமை கோரப்படாது விட்டால் ஏலத்தில் விற்கப் படும் என்றார்-அவர் (த-26)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு இனிமேல் கொடுப்பனவு இல்லை

## அடித்துக் கூறினார் பிரதிக் கல்வி அமைச்சர்

கொழும்பு, ஒக்.20

தொண்டர் ஆசிரியர் முறை மைக்கு முற்றுப்புள்ளி. ஆசிரியர் சேவைக்குத் தேவையான அடிப் படை தகைமைகள் இல்லாதவர் களை தொண்டர் ஆசிரியர் களாக இணைத்துக்கொண்டது பாடசாலை அதிபர்கள் செய்த பெரும் தவறு. இவ்வாறான தொண்டர் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான கொடுப்பனவு களும் வழங்கப்படமாட்டாது என்று பிரதிக் கல்வி அமைச்சர் விஜித்தமுனி சொய்ஸா நேற்று நாடாளுமன்றத்தில் திட்டவட்ட மாக அறிவித்து விட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பி னர் புத்திக்க பத்திரண எழுப் பிய கேள்விக்குப் பதில் அளிக் கும்போதே பிரதிக் கல்வி அமைச் சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்று நாடாளுமன்றம் சபா நாயகர் ஷமல் ராஜபக்ஷ தலை மையில் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது புத்திக்க பத் திரண கல்வி அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

தென்பகுதியில் உள்ள பாட சாலைகளில் பத்து ஆண்டு களுக்கு மேலாகப் பெரும் எண்ணிக்கையான தொண்டர் ஆசிரியர்கள் பணியாற்றுகின்ற னர். ஆனால் அவர்களுக்கு எந்தவிதமான கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. இவர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்வாங் கப்படவேண்டும். கல்வி அமைச்சர் இதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டார் புத் திக்க பத்திரண.

இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார் பிரதிக் கல்வி அமைச் சர் விஜித்தமுனி சொய்ஸா.

ஆசிரியர் சேவைக்கு ஆள் சேர்ப்பு மேற்கொள்ளப்பட்ட போது பெருமளவிலான தொண் டர் ஆசிரியர்கள் உள்வாங்கப் பட்டுள்ளனர். ஆசிரியர் சேவைக் குத் தேவையான அடிப்படைத் தகுதிகள் இல்லாதவர்களை அசிரி யர்களாக நியமிக்க முடியாது.

பாடசாலை மாணவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டே தகுதியற்ற தொண்டர் ஆசிரியர் முறைமைக்கு முற்றாகத் தடை செய்துள்ளோம். ஆரம்ப காலத் தில் இந்தத் தொண்டர் ஆசிரி யர்களுக்கு சிறு கொடுப்பனவு வழங்கப்பட்டது. ஆனால் தொடர்ந்தும் இப்படி வழங்க முடியாது.

தகுதியற்றவர்ளைத் தொண் டர் ஆசிரியர்களாக இணைத் துக் கொண்டது பாடசாலை அதிபர்கள் செய்த பெரும் தவறு. தொடர்ந்தும் இப்படியான தவறுகளுக்கு இடமளிக்க முடி யாது என்று அடித்துக் கூறினார் பிரதிக் கல்வி அமைச்சர் விஜித்த முனி சொய்ஸா. (த-சி)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணின் மடியில்
02 * 11 * 1948



ஐயப்பன் மடியில்
21 * 09 * 2011

### அமரர் அருளம்பலம் இந்துதாசன்

(18ம் படி குருசாமி யாழ்.மாவட்டம்)

கடந்த [21.09.2011] எம்மை ஆறாத் துயரில் விட்டுச் சென்று ஐயப்பன் அடி சேர்ந்த எமது பாசமிகு குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை [21.10.2011] வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் எமது தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மேலும் பல வழிகளிலும் உடனிருந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.
(ஸ்ரீ சட கோபராமானுஜ, ஐயப்ப மக்கள் சபை,
இலங்கைக் கிளை)

மனைவி, பிள்ளைகள்



## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
23 02 1966



உதிர்வு
06 09 2011

### அமரர் திருமதி ஹெஜிதா தனபாலசிங்கம்

கடந்த 06.09.2011 இல் இறைபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 20.10.2011 இன்று வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளிலும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.)

விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை மனோன்மணி



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 36 1/3E.S பெர்னாண்டோ மாவத்தையை வதிவிட மாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை மனோன்மணி 18.10.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாதசுந்தரம் அவர்களின் அன்புத் தாயும் காலஞ்சென்ற உமையம்மை அவர்களின் அன்பு மாமியும் ரமேஷ் ராதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2011) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் கல்கிசையி லுள்ள மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தெகிவளை பொதுமயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.சிவபாதசுந்தரம் (மகன்)




குருநகர், ஒக்.20

யாழ்.பேராலய பங்கைச் சேர்ந்த மாணவர்களுக்கு உறுதிப் பூசுதல் வழங்கு சடங்கு எதிர்வரும் 26 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சுமார் 125 மாணவர்களுக்கு யாழ். ஆயரால் உறுதிப் பூசுதல் வழங்கப் படவுள்ளது. இவர்களுக்கான வேதாகம வகுப்புக்கள் தினமும் பி.ப 4 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றுவருவதுடன் வேதாகமப் பரீட்சைகளும் இடம்பெற்று வருகின்றன.

(ச-51)

* * *

குருநகர், ஒக்.20

யாழ்.அகவொளி நிலையத்தின் ஏற்பாட்டில் குடும்பங்களுக்கான ஞான வொடுக்கம் தலவில்லு புனித அன்னம்மாள் ஆலயத்தில் எதிர் வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 30 ஆம் திகதி ஞாயிற் றுக் கிழமை வரை நடைபெற உள்ளது.

இந்த ஞான வொடுக்கத்தில் பங்கு கொள்ள விரும்பு பவர்கள் யாழ் அக வொளி நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று இதன் இயக்குநர் வண. பிதா எஸ்.ஜே. இராஜநாயகம் அடிகளார் அறிவித்துள்ளார்.

(ச-51)

## கண்ணீர் அஞ்சலி

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை **திருமதி சிவகாமசுந்தரி பாலசுப்பிரமணியம்** (16.10.2011) காலமாகிய செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி.

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. கடமை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை, மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரை. கொடுப்பனவுகள் **Shift** அடிப்படையில் வழங்கப்படும்.

ஒரு **Shift** க்கான கொடுப்பனவு பகலுக்கு 450 ரூபா. இரவிற்கு 550 ரூபா. இரவும் பகலும் கடமைகள் புரியக் கூடியவராக இருத்தல் வேண்டும். ஒருவாரம் இரவும் மறுவாரம் பகலும் கடமைபுரிய வேண்டும். வெள்ளவத்தைப் பகுதியில் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். தங்குமிடத்திலிருந்து கிராண்ட்பாஸ் வரைக்கும் வந்துசெல்வதற்கான போக்குவரத்துச் செலவு வழங்கப்படும்.

**குறிப்பு :**

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஏற்கனவே பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

க.பொ.த சாதாரண தரம் வரை படித்தவர்கள் எவரும் இணைந்துகொள்ளலாம். வெளிமாவட்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை தொலைபேசிஊடாக இடம்பெறும்.விரும்புவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொ. இல : 0714273035 / 071 4220024.**

## ROSA BUS விற்பனைக்கு



**தொடர்பு:**
A.V.M.
மரியநாயகம்,
வெளிச்ச வீட்டு
ஒழுங்கை,

T.P. 0775799488



## மரண அறிவித்தல்

### திருமதி காந்திமதி நாகராஜா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காந்திமதி நாகராஜா 18.10.2011 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான இரத்தினசபாபதி - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் நாகராஜாவின் (ஒய்வு பெற்ற கணக்காய்வாளர்) அன்பு மனைவியும், ஸ்ரீரங்கனின் (முகாமைத்துவ உதவியாளர் - வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்) அன்புத் தாயும், ஜெனனியின் அன்பு மாமியும், ஹரிணியின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற மகேந்திரா மற்றும் கமலபூசணி (கனடா), நாகேந்திரா (மலேசியா), தெய்வேந்திரா (இந்தியா), புஷ்பராணி (கனடா), ராஜேந்திரா (லண்டன்), ஜெயராணி (கொழும்பு), இந்திராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகரத்தினம்(கண்டி), நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு திரு நெல்வேலி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஸ்ரீ ரங்கம்'
111, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இ. நாகராஜா (கணவர்)
நா. ஸ்ரீரங்கன் (மகன்)

## வாகனச் சாரதிகள் தேவை

வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள அலுவலகம் ஒன்றில் கடமை புரிவதற்கு மோட்டார்சைக்கிள், ஆட்டோ, வான் ஆகியன ஓட்டுவதற்கு அனுமதிப் பத்திரம் உள்ள சாரதிகள் தேவை.

**குறிப்பு :**

தங்குமிட வசதி அலுவலகத்திலேயே வழங்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம் பேசித்தீர்மானிக் கப்படும். மேலதிகநேரக் கொடுப்பனவுகளும் உண்டு. கொழும்பு வீதிகளில் பரீட்சயம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும், பரீட்சையம் இல்லாதவர்களும் ஒரு வருட அனுபவம் இருப்பின் இணைந்துகொள்ளலாம். விரும்புவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**தொ. இல : 071 8691691 / 0714273035.**

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு டச்சு றோட்டில் 4 பரப்பு காணியில் உள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:077913164

## விற்பனைக்கு

5 சிறீ ஐயாயிரம் தொடரிலக்க நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0774047536

## பணிப்பெண் தேவை

குழந்தையைப் பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை. (சுண்டுக்குளி, யாழ்ப் பாணம்) தொடர்பு:0776752865

## தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் பெற்றோர்களுக்கு ஓர் நற்செய்தி!

தற்போது திங்கள் தோறும் வெளிவருகின்றது

# புலமைச்சுடர் 2012 - 2013

ஒரு வார ஆக்கங்களைத் தாங்கி திங்கள் தோறும் வெளிவரும் முன்னோடிக் கையேடு

**2012 (தரம் 04), 2013 (தரம் 03) ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களை தயார்படுத்துவதற்கான சிறப்பு வழிகாட்டி**

தொடர்புகளுக்கு:
புலமைச்சுடர் ஆசிரியபீடம் - 011 5738855 / 071 6850005
விநியோகப்பிரிவு - கொழும்பு 011 5737599 / 071 6850006
யாழ்ப்பாணம் 021 5677222 / 071 6182182

இவையனைத்தும் 15 ரூபா முதலீட்டில்...

**தேசிய ரீதியில் புகழ்பெற்ற கல்விச்சுடர் வளவாளர்களின் அரிய படைப்பு**

### இக்கையேட்டை அலங்கரிப்பவை

- சுற்றல் குறிப்புகள்
  - தமிழ் மொழி
  - கணிதம்
  - சுற்றாடல்
  - ஆங்கிலம்
  - சிங்களம்
- தரம் 3, 4 படிமுறை மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
- கட்டுரைக்களம், பொது அறிவு
- மூளைக்கு வேலை விஞ்ஞான விளையாட்டு
- வாரம் ஐந்து வினா – விடை விளக்கம்
- சங்கமம்
- முதல்நிலை மாணவர்களின் அனுபவப் பகிர்வு

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள பத்திரிகை முகவரிடம் முற்பதிவு செய்துகொள்ளவும்.

குறிப்பு: இலவச வினாத்தாள் திருத்தற்சேவையுடன் கூடிய ஆண்டுக்கான சந்தாப் பிரதிகளை பெறவிரும்புவோர் 071 6850006 / 071 4273035 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்க.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அம்பலப்படுத்த நல்ல தருணம்

நாடாளுமன்றம், நாட்டில் வாழும் மக்களினால், வாக்காளர்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது. மக்கள் நலன் நாடிய, நாட்டு நலன் நாடிய சட்ட திட்டங்களைக் கொண்டுவந்து விவாதித்து, உறுப்பினர்களின் வாக்குப் பலத்தினால் அவற்றை நிறைவேற்றி, நடைமுறைப்படுத்த வழி செய்வது நாடாளுமன்றின் பிரதான பணிகளில் முதன்மையானது.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த ஒரு சில வருடங்களிலேயே, தமிழ் மக்களின் பூர்விகப் பிரதேசங்களை, காணிகளை, வளம் நிறைந்த பூமியை, அரசு கையகப்படுத்தி அவற்றில் சிங்கள மக்களை குடியேற்றும் நச்சுத் திட்டம் ஒன்றை அப்போதைய ஆளுந்தரப்பு தொடங்கியது. வருடங்கள் வளர வளர, அரசுகளால் கபளீகரம் செய்யப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் சிங்களக் குடியேற்றத் திட்டங்களாக மாறின.

சிங்கள மக்கள் பெரும்பான்மையினர் என்பதால், அரசும் ஆட்சி அதிகாரமும் அவர்களுக்கு மட்டுமே உரியதென்ற வீறாப்புடன், வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்கள் குடியேற்றத் திட்டங்களாகின; அபிவிருத்தித் திட்டங்களாகிவிட்டன.

ஜனநாயகம் என்ற பெயர்ப்பலகையுடன் இந்த நிலப்பறிப்பு அசுர வேகத்தில் நடைபெற்ற போதிலும், அதனை நிறுத்தவேண்டும் என்ற உணர்வோ, நியாய உள்ளமோ தெற்கின் எந்தக் கட்சி அரசாங்கத்திடமும் துளிர்விட்டதாக, துளிர்விடுவதாக இதுவரை இல்லை.

மொத்தத்தில், எந்தெந்த வகையில் தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை தொடர்ந்து நடத்தி, வடக்கும் கிழக்கும் தமது சொந்த மண் என்று தமிழர்கள் சொந்தம் கொண்டாட இடம் கொடுக்கலாகாது என்பதில் தெற்கின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் அண்ணன், தம்பி என்ற நிலையே அறுபத்துமூன்று வருடங்களின் பின்னரும் இடைவெளி இன்றித் தொடர்கிறது.

இவை யாவும் வாசகர்களில் மூத்தவர்களுக்குத் தெரியாதவை அல்ல. இக்கால இளைஞர்களில் ஒரு சாராருக்கு இதன் தாற்பரியம் தெரியாதிருக்கவும் வாய்ப்புண்டு.

இவை என்ன முழு நீளக் கிரந்தமாக அமைந்துள்ளதே என்று நினைக்காதீர்கள். தமிழர் பிரதேசங்களில் பெரும்பான்மை இனத்தவரின் குடியேற்றம் மூலமான நிலப்பறிப்பும், அது போதாதென்று எந்தக் காலத்திலும் நடைபெறாத மண்ணின் மகிமை (பிம் சவிய) என்ற பெயரில், உரிய முறையில் பல ஆண்டு காலத்துக்கு முன்னர் உரிய முறையில் காணிப்பதிவு செய்யப்பட்ட தமிழ் மக்களின் நிலங்களையும் மறைமுகமாகப் பறித்தெடுப்பதற்கான புதிய திட்டம் ஒன்றும் அவசர அவசரமாக வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

இவை இரண்டுமே தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை வேரறுக்கும் செயற்பாடுகள்; இன்றைய அரசின் திட்டமிட்ட சூழ்ச்சிகள். இவற்றைத் தெரியப்படுத்தி, வெளிப்படுத்தவும், இவை இந்நாட்டில் சுகவாழ்வைக் குழிதோண்டிப் பறித்து தமிழர்களை நிலமற்றவர்களாக்கிவிடும் என்பதை ஓங்கி ஒலிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரியதே.

இந்தக் கொடுமைகள் குறித்து, நாளைய தினம் நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கு ஆளுங்கட்சியின் கூட்டத்தில் மிகப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

திங்கட்கிழமை நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், தமிழர் பிரதேசங்களில் வெளிப்படையாகவும் சில இடங்களில் இரகசியமாகவும் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் ''நச்சடிக்கும்'' நோக்கத்துடன் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ''பிம்சவிய'' திட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க இடம்கொடுக்கக்கூடாது. கூட்டமைப்புக் கோரியுள்ள கவனயீர்ப்புப் பிரேரணையை சபையில் அனுமதிக்கக் கூடாது என்று அரச தரப்பின் பெரும் எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கர்ச்சித்திருக்கிறார்கள். அவை இரண்டும் சர்ச்சைக்குரியவை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவற்றை நாடாளுமன்றில் விவாதிக்க இடம்கொடுக்கக் கூடாது என்று துள்ளிக் குதித்திருக்கிறார்கள்!

தம்மை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்த மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை, உண்டாகும் ஆபத்துக்களை சபையில் எடுத்துச் சொல்லும் முழு உரிமையும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. அவ்வாறிருக்க, ஜனநாயக, நாடாளுமன்ற விதிமுறைகளையும் பாரம்பரியங்களையும் தூக்கி வீச வேண்டும் என்று கேட்பது, தமிழ் மக்களின் உரிமைகளை மட்டுமன்றி சர்வதேச நாடாளுமன்ற விதிகளையும் ஜனநாயகத்தையும் செல்லாக் காசாக்கும் சர்வாதிகாரப் போக்காகும்.

ஏதோ, மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் என்பதால், பிரதமர் டி.எம். ஜயரத்னா நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமை எவை என்பதனை மிக விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துரைத்து இலங்கை நாடாளுமன்றத்தின் மரியாதையைக் காப்பாற்றிவிட்டார்.

மக்களின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அவற்றுக்கு பரிகாரம், தீர்வு காண வேண்டிய இடம் நாடாளுமன்றமே என்று சுட்டிக்காட்டி தமிழ் மக்களின் உடனடியான பிரச்சினைகளான நிலப்பறிப்பு மற்றும் கபட நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் மண்ணின் மகிமை சம்பந்தமான உள்ளாந்தரங்களையும் நாடாளுமன்றில் பதியவும், சர்வதேசம் அரசாங்கத்தின் சூழ்ச்சியான செயற்பாடுகளை அதனூடு அறிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்த வாய்ப்பைக் கையிலெடுத்து, தமிழர் மண் பறிப்பு வெளியே தெரியாத வகையில் நடைபெறுவதனால் உண்டாகக் கூடிய பாதிப்புகளை, புள்ளிவிவரங்கள் மற்றும் ஆதாரங்களுடன் நாடாளுமன்றில் வெளியிட வேண்டிய பெரும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. அரசின் மற்றொரு தமிழர் உரிமைப் பறிப்பு குறித்து அம்பலப்படுத்த நல்லதோர் சந்தர்ப்பம் இது.

ஒருவர் தெரிவித்த விவரங்களை, பாதிப்புகளை மற்றவர் திரும்பக் கூறிக்கொண்டு, கிடைக்கும் நேரத்தை வீணாக்காமல், பேசுவோரின் தகவல்களும் கருத்துக்களும் மண் பறிப்பின் முழு விவரங்களையும் அவற்றுக்குரிய ஆவணங்களையும் கொண்ட தகவல் பெட்டகமாக அமைவது மிக மிக அவசியம். அப்போதுதான் சர்வதேசம் பாதிப்புகளை முழுமையாகச் சீரணித்துக் கொண்டு ஏதோ ஒரு வகையிலேனும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வாய்ப்பு உண்டாகும்.

# அன்பு வாரத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.20

வட பிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்பு குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை இடம்பெறும் அன்பு வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, சித்திரம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கட்டுரைப் போட்டிக்கு முதலாம் பிரிவில் தரம் 1,2,3 வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களும், இரண்டாம் பிரிவில் தரம் 8,9,10 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களும் மூன்றாம் பிரிவுகளில் 5,6,7 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களும் பங்குபற்றலாம்.

அத்துடன் முதலாம், இரண்டாம் பிரிவு மாணவர்கள் ''அன்பு ஓர் மகாசக்தி'' ''எனது வாழ்வில் அன்பின் அனுபவம்'', ''அன்பே மனித இயல்பு'', ''இயற்கையில் அன்பு'' ஆகிய தலைப்புகளிலும் மூன்றாம் பிரிவு மாணவர்கள் ''அம்மாவின் அன்பு'' அல்லது குழுவின் அன்பு'' எனும் தலைப்புகளிலும் கட்டுரை எழுதுதல் வேண்டும்.

கவிதைப் போட்டியில் முதலாம் பிரிவு மாணவர்கள் மட்டும் ''அன்பு'' எனும் தலைப்பில் கவிதை எழுதலாம்.

சித்திரப் போட்டிக்கு அன்பை வெளிப்படுத்தக்கூடிய சித்திரங்களை முதலாம் பிரிவு மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

ஆர்வமுடைய மாணவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக பாடசாலை அதிபர் ஊடாக கே.வி.சிவனேசன் சத்திய சாயி மனித மேம்பாட்டு கல்வி இணைப்பாளர், சாயிதர்சன் கொக்குவில் எனும் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-313)

# மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளில் மாதர் சங்கங்கள் அவசியம்

யாழ்ப்பாணம், ஒக்.20

புதிதாக மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் மாதர் சங்கங்கள் உருவாக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ''அரசியலில் பெண்களின் பிரவேசம்'' தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்ட தெல்லிப்பழை பிரதேச சபை உறுப்பினர் அன்னபூரணம் ஞானேஸ்வரன் இதனை வலியுறுத்தினார்

கிராமங்கள் தோறும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பெண்களுக்கென ஓர் குழு இல்லாவிடில் அவர்களின் பிரச்சினைகள் வெளிப்படுத்த முடியாமல்போய்விடும்.

புதிதாக மீள்குடியமர்வு இடம்பெற்ற பிரதேசங்களில் இத்தகைய பிரச்சினைகள் எழுந்துள்ளன. இவற்றுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் உடனடியாக அப்பகுதிகளில் மகளீர் குழுக்களை அமைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

குறிப்பாக பெண்கள் பாலியல் ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள், விதவைப் பெண்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதில் சந்திக்கும் இடர்பாடுகள் இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு மகளிர் குழுக்கள் பிரதேசங்கள் தோறும் தேவை எனவும் தெரிவித்தார். (ம-313)

# பெண்களுக்கு ஏற்படும் 'முள்ளந்தண்டு பாதிப்பு' ஆண்களையும் தாக்கும் அபாயம்

கொழும்பு, ஒக்.20

பெண்களுக்குப் போன்றே ஆண்களுக்கும் முள்ளந்தண்டைப் பாதிக்கும் " ஒஸ்ரியோ பிறோஸிஸ்" நோய் அபாயம் நிலவுவதாக காலி கராப்பிட்டிய மருத்துவப் பீடத்தின் மருத்துவ நிபுணரான கலாநிதி சரத்லேக் கம்வசம் தெரிவித்துள்ளார்.

வயதான ஆண்களுக்கு இந்த நோய் பெருமளவில் ஏற்படக் கூடும். ஆனால் உலகில் இந்த நோய்க்கு ஆளாகியுள்ள நோயாளர்களுள் பெரும் எண்ணிக்கையானோர் பெண்களே யாவார் எனவும் கொழும்பு சுகாதார ஆய்வுப் பிரிவில் அண்மையில் இடம் பெற்ற ஊடகவியலாளருடனான சந்திப்பில் மருத்துவ நிபுணர் கலாநிதி சரத்லேக்கம்வசம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மது பாவனை மற்றும் புகைப்பிடித்தல் காரணமாகவும் ஒஸ்ரியோ பொறோஸிஸ் ஏற்படக் கூடும் எனவும், அத்தகைய நோயாளர்களுக்கு முள்ளந்தண்டு குறுகி வளைந்து போகும் அபாயம், நீண்டகாலம் நிலைத்து நிற்கும். நாரி நோவு, நேரான உடலின் தன்மை மாற்றமுறுதல், நடமாடும் மற்றும் அமரும் தன்மையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றலாம் என்றும் அவர் கூறினார்.

அத்தகைய நோயாளர்கள் பெரும்பாலும் இடுப்பொலும்பு உடைந்து போகும் நிலைக்குத் தள்ளப்படுவதோடு சில வேளை இந்தப் பாதிப்பினால் மரணம் கூடச் சம்பவிக்கக் கூடும். கலாநிதி சரத் லோக்கம்வசம் தெரிவித்துள்ளார்.

மேலும் எந்தவொரு நபரதும் உடல் வளர்ச்சியுறும் வயதில் போதியளவிலான புரோட்டீன் மற்றும் விற்றமின் 'சீயை' பெற்றுக் கொள்வதன் மூலம் அவரது எலும்புகளைப் பலப்படுத்திக் கொள்ள இயலும் என்றும் மருத்துவ நிபுணர் அறிவுரை கூறுகின்றார்.

(ஒ-22)

## மனிதனுக்கு ஏன் பயம் ஏற்படுகின்றது

மனிதனிடத்தில் தோன்றும் வியாபகமான பயப்பாட்டுக்குக் காரணம் அவனது சிந்தையில் தூய, புனிதமான எண்ணங்கள் இல்லாமையாகும்.

இன்று உலகம் முழுவதுமே பயத்தினால் திகைத்துப்போய் இருக்கின்றது. வீட்டிலும்சரி, வீதியிலும் சரி, அன்றிப் புகைவண்டி, ஊர்தி, ஆகாய விமானம ஆகியவற்றில் பயணம் செய்யும்போது மக்கள் பயத்தினால் பீதியுற்றிருக்கின்றார்கள். இந்த முழு உலகமுமே, எல்லாத் திருப்பு முனைகளிலும் கூட பயத்தினால் நிரம்பியிருக்கும் நிலை காணப்படுகின்றது.

மகாபாரதப் போரின் கதாநாயகனும், அருச்சுனனின் மகனுமாகிய அபிமன்யுவின் துக்ககரமான முடிவுக்குக் காரணம் என்னவென்றால் அவனுக்கு பத்மவியூகம் என்ற பிரமைக்குள் பிரவேசிக்கத் தெரிந்ததே யொழிய அதனினின்றும் வெளியேறும் முறையை அறியாதிருந்தமையேயாகும்.

நாம் எமது எண்ணங்களை அறிவு- புத்தியின் நுண்பார்வைக்கு அர்ப்பணித்துக் கொண்டால்தான் உலகியல் இன்பங்களிலிருந்தும் விடுபட்டுக் கொள்ளும் முறையை அறிவோம்.

(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)



சாயி சிந்தனை

# யாழ். புல்லுக்குளத்தில் நீச்சல் தடாகம் அமைக்கும் பணிகள் கைவிடப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ். புல்லுக் குளத்தினுள் நீச்சல் தடாகம் அமைப்பது தொடர்பில் பல தடவைகள் ஆலோசிக்கப்பட்ட போதும் அது சாத்தியப்படாத நிலையில் இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ தெரிவித்துள்ளார்.

புல்லுக்குளப் புனரமைப்புத் தொடர்பாகக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். புல்லுக்குளம் கனரக வாகனங்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் அதிலிருந்து அகழப்படும் சேறுகள் மற்றும் கழிவுகள் அருகில் உள்ள வெற்றுக் காணிகளில் கொட்டப்படுகின்றன.

இதன்போது வீதிகளிலும் சேறு சிந்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அப்பகுதிகளால் பயணிப்போர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியால் செல்வோர் இந்தச் சேற்றில் சறுக்கி விழ வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது குறித்த வீதியில் பயணித்த டாக்டர் ஒருவர் சறுக்கி வீழ்ந்தமையும் மாணவர்கள் ஆசிரியர்கள் வீழ்ந்து காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பாக இத் திட்டத்துக்குப் பொறுப்பாக உள்ள நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது தெரிவிக்கப்பட்டதாவது:

புல்லுக் குளத்துக்கும் குறித்த கழிவுகளைக் கொட்டும் காணிக்கும் இடையில் இந்த வீதி அமைந்துள்ளது. இதனால் சேறு வீதியில் சிந்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன.



வீதியில் உள்ள சேற்றை அகற்றுவதாயின் 'பைக்கோ' இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் 'பைக்கோ' இயந்திரம் குளத்தில் சேறு அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் இதில் தாமதம் நிலவுகிறது. அத்துடன் இதனால் வீதி சேதமடையவும் வாய்ப்பு உள்ளது. - என்று கூறப்பட்டது.

யாழ். மாநகர சபையின் கண்காணிப்பில் இந்தக் குளம் உள்ளபோதும் சேறு அகற்றி ஆழமாக்கும் பணிகளை வடக்கு மாகாண ஆளுநர் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-86-26-4)

# இளைஞன் மரணம்; சாரதிக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஒக்.20

மிருசுவில் வடக்குப் பகுதியில் வீட்டின் முன்னால் உள்ள ஒழுங்கையில் படுத்திருந்த இளைஞன் மீது வாகனத்தை செலுத்தியதால் இளைஞன் மரணம் அடைந்தது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் உழவு இயந்திரச் சாரதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏழாம் திகதி அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில் வரணி, நாவற்காட்டைச் சேர்ந்த சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரை நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது சாரதியை நவம்பர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார். (ம-207)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி புதிய விடுதிக்கு உபகரணம்

தென்மராட்சி, ஒக்.20

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட விடுதிக்கான உபகரணங்களின் ஒரு தொகுதி கடந்த திங்கட்கிழமை கொண்டுவரப்பட்டுள்ளன.

விடுதிக்குப் பயன்படுத்தப்படும் கட்டில்கள், குளிர்சாதனப் பெட்டிகள், சிலிண்டர்கள் போன்றவை முதற் கட்டமாக கொண்டு வரப்பட்டுள்ளன.

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தால் இரு மாடிகளைக் கொண்ட பொது மருத்துவம், சத்திர சிகிச்சைப் பிரிவு ஆகிய இரு கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியடையும் நிலையில் உள்ளதால் அவற்றுக்குரிய வைத்திய உபகரணங்கள், தளபாடங்கள் போன்றவற்றை அண்மைக்காலமாக வழங்கிவருகின்றனர்.

இதேவேளை, வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளுக்கென நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி கட்டடத்தில் நான்கு வைத்திய அதிகாரிகளுக்கான வதிவிடங்களுக்குரிய அனைத்துத் தளபாடங்களும் கொண்டு வரப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. (ம-207)




மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற மாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவில் சிறந்த நூல்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. 'நெடுந்தீவு சிதையும் சின்னங்கள்' நூலுக்கான விருதை கைத்தொழில் வாணிப அமைச்சர் றிசாட் பதியுதீன், நூலாசிரியரும் உதயனின் மூத்த ஊடகவியலாளருமான நெடுந்தீவு லக்ஸ்மனுக்கு வழங்குகிறார். அருகில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் காணப்படுகின்றார். (உ-7)

# சிறு குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்.நகரப்பகுதியில் வெவ்வேறு இடங்களில் சுற்றாடலை அசுத்தப்படுத்தும் வகையில் பொலித்தீன்களை விற்பனை செய்து வந்த மூன்று பேர் யாழ்.நீதிமன்றில் 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினர்.

நகரில் போக்குவரத்து நெருக்கடியுள்ள இரு இடங்கள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை என்பவற்றுக்கு முன்பாக இவ்வாறு விற்பனையில் ஈடுபட்ட போதே யாழ்.பொலிஸார் இந்த மூவருக்கும் எதிராக வழக்குப் பதிவு செய்து நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

விசாரணையை மேற்கொண்ட நீதிவான் மூவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும், இன்னொருவருக்கு இரண்டாயிரம் ரூபாவும், மற்றயவருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ம-4)

* * *

தென்மராட்சி, ஒக்.20

மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய வரணி வாசிக்கே 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 2 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இதே வேளை, சாவகச்சேரி நகர்ப் பகுதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் தரும் வகையில் வாகனத்தை நிறுத்தி வைத்தமைக்காக வாகனச் சாரதி ஒருவருக்கும் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-207)

# யாழ். வலயத்தில் 478 பேருக்கு புலமைப்பரிசில்

அச்சுவேலி, ஒக்.20

யாழ். கல்வி வலயத்தில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 478 மாணவர்கள் புலமைப் பரிசில் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் உள்ள நல்லூர் கல்விக் கோட்டம், யாழ்ப்பாணம் கல்விக் கோட்டம், கோப்பாய் கல்விக் கோட்டம் மூன்றிலும் இருந்து 3 ஆயிரத்து 44 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி இருந்தனர். இதில் 478 மாணவர்கள் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்று புலமைப் பரிசில் பெறுவதற்கான தகுதி நிலையில் சித்தியடைந்துள்ளனர்.

கல்விக் கோட்ட ரீதியில் நல்லூர்க் கோட்டத்தில் இருந்து தோற்றிய 1069 மாணவர்களில் 225 பேர் புலமைப் பரிசில் பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 1062 மாணவர்களில் 196 பேர் புலமைப்பரிசில் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கோப்பாய் கல்விக் கோட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 913 மாணவர்களில் 57 பேர் புலமைப்பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

மூன்று கல்விக் கோட்டங்களிலும் நல்லூர் கல்விக் கோட்டம் முன்னிலையில் உள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் யாழ். கல்வி வலயம் தரம் 5 புலமைப்பரிசில் பெறு பேற்றில் முன்னிலையில் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-11)

# நீதிமன்றில் பொய் கூறியவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஒக்.20

நீதிமன்றை அவமதிக்கும் வகையில் பொய் கூறிய வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்தியதாகக் குற்றஞ் சாட்டி லொறி சாரதிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதியை அனுமதிப் பத்திரம் உள்ளதா என நீதிவான் கேட்டார். இதன் போது "ஆம்" என எதிரி தெரிவித்தார். மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக இவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வழக்கின் பின்னர் நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் பதிவு செய்வதற்குச் சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குமாறு வாகன சாரதியிடம் கேட்டுள்ளார். அப்போது அவர் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லையெனக் கூறியுள்ளார்.

இதனை நீதிவானின் கவனத்துக்கு நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் கொண்டுவந்தார். நீதிவானின் உத்தவின் பேரில் இந்த சாரதிக்கு எதிராக சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, நீதிமன்றில் பொய் கூறி நீதிமன்றை அவமதித்தது ஆகிய குற்றஞ் சாட்டப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா நீதிமன்றில் பொய் கூறிய குற்றத்துக்காக ஆயிரம் ரூபாவும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமைக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதித்தார். (ம-207)

# தீபாவளி வியாபாரத்துக்கு படையெடுக்கும் தென்பகுதியினர்

யாழ்ப்பாணம், ஒக்.20

தீபாவளியை முன்னிட்டு தென்பகுதி நடைபாதை வியாபாரிகள் யாழ்ப்பாணம் நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

வாகனங்கள் மூலம் உடுபுடைவைகளை எடுத்து வந்து இவர்கள் தமது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்.நகரில் தமது நடைபாதை வியாபாரத்தை மேற்கொள்வதற்கு இடவசதியை ஒதுக்கியும் வருகின்றனர்.

முற்றவெளியில் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள சுற்றாடல் மற்றும் முனீஸ்வரர் கோயில் சுற்றாடல் பகுதிகளிலும் நடைபாதை வியாபாரங்களுக்கான இடவசதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் யாழ்.மாநகர சபையால் அமைக்கப்பட்ட புல்லுக் குளத்துக்கு முன்பாக உள்ள நடைபாதை கொட்டகைகளின் சுற்றாடல் துப்புரவு செய்யப்படாத நிலையில் பற்றைகள் அடர்ந்து வளர்ந்து காணப்படுகின்றது.

இந்த கொட்டகைகள் கால்நடைகளின் தங்குமிடமாகவும் காணப்படுகின்றன.

இந்தக் கொட்டகைகளிலும் தீபாவளி நடைபாதைக்கான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடைபாதை வியாபாரிகள் அந்த பிரதேசத்தை நேற்று துப்புரவு செய்தனர்.

கடந்த காலங்களை விட இம்முறை தீபாவளிப் பண்டிகைகளை கட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம-26)

# 30 ஆண்டுகளாக கவனிப்பாரில்லை

யாழ்ப்பாணம், ஒக்.20

நாரந்தனை வடக்கு செட்டியா தோட்ட வீதி, கடந்த 30 ஆண்டுகளாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் அந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் குறிப்பாக அந்தப் பகுதி மக்கள் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் எம்.ஜெயகாந்தனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

செட்டியா தோட்ட வீதி, முகாம் வீதி, நாரந்தனை சூரியாவத்தை வீதி ஆகிய மூன்று வீதிகளையும் புனரமைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புனரமைப்புப் பணியைத் தொடங்குவதற்கு வடக்கின் வசந்தம் திட்டத்திலிருந்து இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

அடுத்தவாரம் அதற்கான அனுமதி கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

இந்த மூன்று வீதிகளும் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. செட்டியா தோட்டவீதி புனரமைப்புக்கு 60 லட்சத்து 79 ஆயிரம் ரூபாவும், முகாம் வீதிபுனரமைப்புக்கு 61 லட்சத்து 16 ஆயிரம் ரூபாவும் நாரந்தனை சூரியாவத்தை வீதிப்புனரமைப்புக்கு 89 லட்சத்து 78 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

(ம-4)

# உலக வங்கி பொறுப்பேற்றுள்ள வீதிப் புனரமைப்புப் பணி தாமதம்

யாழ்ப்பாணம், ஒக்.20

கோப்பாய், இராசபாதை மற்றும் டச்சுவீதி என்பவற்றை புனரமைப்புச் செய்யும் பணிகளை உலகவங்கி பொறுப்பேற்றுள்ளது.

இதன் காரணமாக இந்த வீதிகளில் எம்மால் திருத்தங்கள் மேற்கொள்ள முடியாது என்று வீதி அபிவிருத்தி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கோப்பாய் இராசபாதை வீதி மற்றும் டச்சுவீதி என்பவற்றில் தற்போது மக்கள் பாவனை அதிகரித்துள்ளது.

பருத்தித்துறை பிரதான வீதியின் அகலிப்புப் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. இதன் காரணமாக மக்கள் இராச பாதை வீதி மற்றும் டச்சு வீதி என்பனவற்றையே பயன்படுத்தி வருகின்றனர்.


தொடர்ச்சியான வாகனப் பாவனையால் கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட இந்த வீதிகள் மிகக் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. தற்போது வீதியின் நடுவே பெரிய குழிகள் தோன்றியுள்ளன.

பருவமழை ஆரம்பித்திருப்பதால் வீதிகளில் வெள்ளம் தேங்கி போக்கு வரத்து இடையூறுகள் ஏற்படுகின்றன. அத்துடன் இரவு நேரங்களில் குறித்த வீதியில் பயணம் செய்யும் போது மின் விளக்குகளும் இல்லாத நிலையில் மக்கள்பெரும் சிரமம் அடைகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களத் திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, மேற்படி இரு வீதிகளும் உலக வங்கியிடம் புனரமைப்புப் பணிக்காக கையளிக்கப்பட்டுள்ளன. எனவே வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் குறித்த வீதிகளைப் புனரமைக்க முடியாது. இருப்பினும் மக்களிடமிருந்து கிடைத்த தொடர்சியான முறைப்பாடு காரணமாகக் குறித்த வீதிச் சேதங்களுக்கு மண் போடும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். இருப்பினும் இவற்றுக்கு தார் இடப்படமாட்டாது.

உலக வங்கி இந்த வருட இறுதியில் இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உலக வங்கியால் மேற்படி இரு வீதிகளும் புனரமைப்புக்காக தென்னிலங்கை தனியார் ஒப்பந்தகாரரிடமே வழங்கப்பட்டுள்ளது. (ம-15-302)



கால்நடைகளின் தங்குமிடமாக யாழ். புல்லுக் குளம் பகுதியில் உள்ள வியாபாரக் கொட்டகைகள். (ம-26)

# விழிப்புக் குழுவிடம் சிக்கிய நால்வர்; அடையாள அணிவகுப்பு இன்று

தென்மராட்சி, ஒக்.20

மிருசுவில் உசன் பகுதியில் விழிப்புக் குழுவினரிடம் வசமாக மாட்டிக் கொண்ட நான்கு பேரையும் இன்றுவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் இன்று அடையாள அணிவகுப்பை நடத்தவும் ஏற்பாடு மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு உசன் விடத்தற்பளை வீதியில் புலனாய்வு உத்தியோகத்தர்கள் போல் நடித்து அங்கிருந்தவர்களை பயமுறுத்தி நகைகள் கொள்ளையடித்துத் தப்பிய வேளையில் விழிப்புக் குழுவிடம் அகப்பட்டுக் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நால்வரும் மறுநாள் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த நால்வருமே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-207)

# மதுவரித் திணைக்கள அதிகாரிகள் திடீர் பாய்ச்சல்

யாழ்ப்பாணம்,ஒக்.20

வேலணைப் பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் 21 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு புகையிலை விற்பனை செய்த கடை உரிமையாளர்கள் மீது மதுவரித் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண் டனர்.

குறிப்பாக வேலணை துறையூர், வங்களாவடி ஆகிய பகுதிகளில் உள்ள 5 கடைகளில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் 21 வயதுக்குட்பட்ட இளைஞனிடம் கடைக்குச் சென்று புகையிலை வாங்கித் தருமாறு கூறியுள்ளனர்.

அந்த இளைஞன் கடைக்குச் சென்று புகையிலை வாங்கும் போது கடையின் உரிமையாளர்கள் மதுவரித் திணைக்கள அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டனர்.

இவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம)

# பெண்கள் உரிமைகளை மறுப்பவர்களுக்கு எதிராகக் கேள்வி எழுப்ப வேண்டும்

## யாழ். பல்கலைக்கழகப் பொருளியற்றுறை பேராசிரியர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.19

பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு அதனை மறுப்பவர்களுக்கு எதிராக எதிர்த்துக் கேள்விகளை எழுப்ப முன்வர வேண்டும்.

இதன் மூலம் தான் உரிமைகளை மறுப்பவர்கள் பெண் தைரியமுடையவள் என்னும் துணிவுடன் தாமாகவே விட்டுக் கொடுக்கும் தன்மையுடன் செயற்படுவார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத்தின் பொருளியற்துறை பேராசிரியர் வி.சிவநாதன்.

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை நாச்சிமார் கோயிலடி சரஸ்வதி மண்டபத்தில் ''பெண்களின் அரசியல் பங்கேற்பை ஊக்குவித்தல்'' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு '' தேர்தல் கொள்கை பிரசாரத்தை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தலும் பிரசார யுத்திகளும்'' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துரை நிகழ்த்தும் போது:

பெண்கள் சகலதுறைகளிலும் கிராமம், பிரதேசம் எனும் வேறுபாடுகள் இன்றி விரிவுபடுத்தி அவர்களது ஆளுமையை வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

பெண்களின் பங்களிப்புக்களால் கிழக்காசிய நாடுகள் பெரிதும் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. ஏனெனில் 52 வீதமானவர்கள் பெண்களாக உள்ளார்கள். அரசியலில் பெண்கள் கட்டாயம் உள்வாங்கப்பட வேண்டும்.

மாறாக அவை மறுக்கப்படுமானால் அது ஆணாதிக்கத்தின் செயலாக அமைந்து விடுகின்றது. பெண்களின் நலன்கள், உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு கிராமங்கள் தோறும் குழுக்களை அமைத்து பெண்கள் தம்மை அறிமுகப் படுத்த வேண்டும்.

கிராமங்களில் உள்ள சங்கங்கள் ஆலய பரிபாலன சபைகள், கழகங்கள், மன்றங்கள் போன்ற சிறு குழுக்கள் பெண்களுக்கும் உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும்.

பெண்கள் ஒவ்வொரு குழுக்களிலும் அங்கத்தவர்களாக தம்மை இணைத்துக் கொண்டு தவறுகளைத் தட்டிக் கேட்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அரசியல்வாதிகளின் அதிகமான பலம் கீழ் மட்ட மக்களிடம்தான் தங்கியுள்ளது.

பெண்கள் அரசியல் கட்சிகளில் உள்வாங்கப்பட்டால் பெண்களுக்கான ஒவ்வொரு பிரச்சினைகளையும் தட்டிக் கேட்பதுடன், கட்சிகளில் ஓர் வெளிப்படு தன்மையும் உருவாகும்.

காணாமற் போன பிள்ளைகளைத் தேடித் தருமாறு பெண்கள் தான் அதிகமான முறைப்பாடுகளை வழங்குகின்றார்கள்.

ஆனால் அரசியல் ரீதியாக இதற்கு எந்தவித தீர்வுகளும் காணப்படவில்லை.

இது போன்ற பல்வேறு பிரச்சினைகளை, குறிப்பாக பாலியல் வன்முறைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டுமானால் பெண்கள் அதிகமாக அரசியலில் உள்வாங்கப்பட வேண்டும். - என்றார். (வ-313)



சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தினரால் வலி மேற்கு பிரதேச மாணவர்களுக்கு இலவச பண்ணிசை வகுப்புக்கள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் ஆரம்ப நிகழ்வு சித்தன்கேணி சிவாலய மண்டபத்தில் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ.ந. சர்வேஸ்வரக்குருக்கள் கலந்து கொண்டு உரையாற்றுகிறார். அருகில் மூத்த இசைக்கலைஞர் கலா பூசணம் கணபதிப்பிள்ளை அமர்ந்திருக்கிறார். கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரும் அமர்ந்திருக்கின்றனர்.

# 50 வருடங்களாக புனரமைக்கப்படாத வரணி - மாசேரி வாழைத் தோட்டவீதி

## அப்பகுதி மக்கள் பிரதேச சபை கவனத்துக்கு

வரணி, ஒக்.20

வரணி-மாசேரி வாழைத் தோட்டம் வீதி சுமார் 50 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் உள்ளது. கடந்த 2 வருடங்களுக்கு முன்பு சுமார் அரைக் கிலோமீற்றர் வரையான பகுதி மக்கி போடப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. எனினும் ஏனைய ஒன்றரைக் கிலோ மீற்றர் வரையான வீதியில் ஒரு பகுதி பாதையை மூடி முள்ளுப் பற்றைகள் வளர்ந்து போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. இதனால் மக்கள் பாதையின் அருகில் உள்ள வயல் நிலங்களினூடாகப் பயணிக் கின்றனர். உணவுக்கான வேலைத் திட்டத்தின் போதும் இந்த வீதியை திருத்தக் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் சம்மந்தப்பட்டவர்கள் முன்வரவில்லை.

இந்தவருடமாவது சாவகச்சேரி பிரதேசசபை கவன மெடுத்து மேற்படி வீதியை திருத்தி மக்களின் பாவனைக்கு உதவுமாறு அந்தப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-22)

# பிரபா எம்.பியின் சகாக்கள் கொலை மிரட்டல்; ஊடகவியலாளர் மனோ ஐ.ஜி.பியிடம் முறைப்பாடு

சுயாதீன ஊடகவியலாளர் தர்மலிங்கம் மனோகரனுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசனின் ஆள்கள் கொலை மிரட்டல் விடுத்தனர் என்று மனோகரன் பொலிஸ் மா அதிபரிடம் (ஐ.ஜி.பியிடம்) முறைப்பாடு செய்துள்ளார். பிரபா கணேசனை விமர்சித்து எழுதுவதை நிறுத்தாவிட்டால் கொலை செய்வோம் என அவர்கள் தன்னை மிரட்டினர் என்று மனோகரன் அவரது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தெஹிவளையில் அமைந்துள்ள எனது வீட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை 8.30 மணியளவில் என்னைத் தேடி மூன்று இளைஞர்கள் வந்தனர். நாடாளு மன்ற உறுப்பினர் பிரபா கணேசனை விமர்சித்து எழுதுவதை நிறுத்தவேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் பாரிய விளைவைச் சந்திக்கவேண்டிவரும். அதற்காக உம்மைக் கொலைசெய்யவும் தயங்கமாட்டோம் என்று அவர்கள் என்னை மிரட்டினர்.

எனது வீட்டை விட்டுச் சென்ற அவர்கள் மீண்டும் எனது தொலை பேசிக்கு அழைப்பு எடுத்து மிரட்டினர். தாம் கூறியதை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டு செயற்படுமாறு கூறினர்.

ஓய்வுபெற்ற அரச ஊழிய ரான நான் 41 வருடங்களாகத் தமிழ் செய்திப் பத்திரிகை களில் செய்திகளை எழுதி வரும் சுதந்திர ஊடக வியலாளரா வேன்.

எனக்கு விடுக்கப்பட்டிருக்கும் கொலை மிரட்டல் தொடர்பில் உரிய விசாரணையை மேற் கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன் - என்று அந்த முறைப்பாட் டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உண்மை நிலையை அறிவதற்காக நாடாளு மன்ற உறுப் பினர் பிரபா கணேசனை நாம் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது அவர் இந் தியா சென்று விட்டார் என்று அவரது செயலாளர் எம்மிடம் கூறினார். .(ம)

# லஞ்சம் கொடுக்க முயன்றோர் கைது

கொழும்பு, ஒக்.20

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவரைக் கைது செய்யவந்த மஹரகம பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த மூன்று கொன்ஸ்ட பிள்களுக்கு 50 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகக் கொடுக்கமுயன்ற இருவரும், அந்தப் பெண்ணும் கைது செய்யப்பட்டனர்.

மஹரகம, பெரகும்மாவத்தையில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் வீதி யில் நின்றிருந்த நபரொருவரைச் சோதித்த போது அவரிடம் 40 கிராம் ஹெரோயின் இருந்தது. அதனை யடுத்து மேற்கொண்ட விசாரணையின்போது ஹெரோயினை தனக்கு விற்ற பெண்ணை அவர் காட்டிக்கொடுத்தார்.

அந்தச்சமயம் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நபரும், இன்னொருவரும் கொன்ஸ்டபிள்களுக்கு 50 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகக் கொடுக்க முனைந்ததையடுத்து அவர்களும், குறிப்பிட்ட பெண்ணும் கைதுசெய்யப்பட்டனர்.

# இளைஞர் ,யுவதிகளுக்கு அரச வங்கிகள் மூலம் கடன் வசதி

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச்சங்கத்தின் நிஸ்கோ பிரிவினால் யாழ்.மாவட்டத்தில் வசிக்கின்ற 30 வயதுக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளின் சுயதொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு அரச வங்கிகளி னூடாக கடன்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பயனாளிகளுக்கு ஆகக் கூடிய கடன்தொகையாக இரண்டரை லட்சம் வரையில் கடன் பெறக்கூடிய வசதிகள் உண்டு.

தகுதியான விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரங்களை எழுதி 30 ஆம் திகுதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். (வ-311)


இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வட மாகாண சபை

## கேள்விகளுக்கான கோரல்

| | |
|---|---|
| கடன் இலக்கமும் தலைப்பும் | கடன் - 2626 SRI - முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசரகால செயற்றிட்டம். (CAREP) |
| நிதி மூலம் | இலங்கை அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் மூலம் |
| கேள்வி சமர்ப்பிக்கும் திகதி | இறுதி திகதி 14.11.2011 பி.ப 2.00 மணி |

| இல. | ஒப்பந்த இல. | மாவட்டம் | கேள்வியின் பெயர் | கட்டுமானக்காலம் (மாதம்) |
|---|---|---|---|---|
| 1 | CAREP/NPRDD/NCB/PL5-A | முல்லைத்தீவு | Construction of Causeways in Kokavil - Thunukai Road (11-12 Km) | 09 |
| 2 | CAREP/NPRDD/NCB/PL5-B | முல்லைத்தீவு | Construction of Causeways in Kokavil - Thunukai Road (17-18 Km) | 09 |
| 3 | CAREP/NPRDD/NCB/PL5-C | முல்லைத்தீவு | Rehabilitation of Culverts in Kokavil - Thunukai Road (10-22 Km) | 09 |

1. வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பாக முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசரகால செயற்றிட்டம் (CAREP), பிரதம செயலாளர், வ.மா/ தலைவர், கருத்திட்ட பெறுகைக்குழு அவர்கள் 03 கட்டுமான வேலைகளுக்கான மூடிய கேள்விகளைக் கோருகிறார். வீதிகளின் பெயர்கள், கட்டுமானக் காலம் என்பன மேலே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

2.கேள்வியாளர்களுக்கான முதன்மை தகுதிகாண் காரணிகள், கேள்விப்பத்திரத்தை ஆங்கிலத்தில் பெற்றுக்கொள்வதற்கு கேள்வியாளர்கள் செய்ய வேண்டியவை, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல், திறத்தல், கேள்விப்பிணை, கேள்வி விளக்கக்கூட்டம் என்பன தொடர்பான மேலதிக விவரங்களை கேள்வியாளர்கள் 18.10.2011 ஆம் திகதி வெளியிடப்பட்ட Daily News பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்வியாளர்களுக்கான கோரலைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ளலாம். அல்லது பின்வரும் முகவரியுடன் தொடர்வு கொள்வதன் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

எந்திரி.த.சிவராஜலிங்கம்,
திட்டப் பணிப்பாளர்,
முரண் பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசர கால செயற்றிட்டம் (CARE Project)
61/6, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 0213202535.
தொலை நகல் இல: 0212220685
மின் அஞ்சல்: nproad.care@gmail.com



ACCA ஆனது இலங்கை உட்பட 150 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உலகின் முதற்தர நிதி, கணக்கீடு, முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச கற்கைநெறியாகும். நம்பிக்கையை கட்டியெழுப்பவும், மாணவர்களை உலகத்தரமான கல்வியில் உள்வாங்கவும் ACCA, ACCA பிராந்திய நிலையம்,யாழ்ப்பாணம் ஆகியன துணை புரிகின்றன. நாம் எமது கல்விச் செயற்பாடுகளை விஸ்தரித்து அதிகரிக்கும் மாணவர்களுக்கு நிர்வாக ரீதியில் உதவக்கூடிய ஆர்வமும் திறமையும் உள்ளவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

பதவி வெற்றிடம்

**நிர்வாக உதவியாளர்கள்**(Administrative Assistants)

ACCA கற்கைநெறி பயிலும் மாண்வர்கள் உலகில் உயரிய சொத்துக்கள். நிறுவனத்தின் முக்கிய இடத்தை வகிக்கும் நிர்வாக உதவியாளர்களுக்கு உயரிய பொறுப்புக்கள் உள்ளன. மாணவர்களை நிர்வகிக்கும் அதேவேளை நிறுவன நிர்வாகத்தை சிறப்பாக கையாளவேண்டியுள்ளது.

விண்ணப்பதாரி க.பொ.த (உ/த) தகைமையுடன் 25 வயதுக்குட்பட்டவராகவும் கணினி அறிவு, ஆங்கில அறிவு உடையவராக இருப்பதுடன் சிறந்த நிர்வாகத் திறனும், அர்ப்பணிப்பான சேவையும் விரும்பப்படுகின்றது.

உங்கள் சுயவிவரக்கோவையுடன் உறவினர் அல்லாத இருவரின் பெயர் விவரங்களுடன் எதிர்வரும் 22.10.2011 , சனிக்கிழமை காலை 9.00-11.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

ACCA

இயக்குநர்,
யாழ்ப்பாணம் தொழில் நுட்ப நிறுவனம்,
இல. 45, மணிக்கூட்டு வீதி,
(Becon கல்வி நிறுவனம், பெருமாள் கோயில் அருகில்) யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்

## ஞானமுத்து சிறில்



பலாலி தெற்கு, சென் ஜேம்ஸ், வசாவிளானைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து சிறில் 18.10.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமுத்து-புஸ்பம் தம்பதியரின் அன்பு மகனும், அமல இருதயம் (டென்மார்க்), விவேகதாசன், மகிழ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயராணி (டென்மார்க்), அன்ரனீற்றா, சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20.10.2011) வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

41/4, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சகோதரி - மகிழ்வதி.

# நாட்டில் துப்பாக்கிக் கலாசாரம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்

## எரான் விக்ரமரட்ன கூறுகிறார்



கொழும்பு,ஒக்.20

நாட்டில் துப்பாக்கிக் கலாசாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:


முல்லேரியாப் பிரதேசத்தில் அண்மையில் தேர்தல் தினமன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு அரசே பொறுப்புச் சொல்ல வேண்டும்.

இராணுவ மயமாக்கலுக்கும், சட்டவிரோத ஆயுத பயன்பாட்டுக்கும் எதிராக போராட வேண்டும். பொலிஸாரும் இராணுவத்தினரும் மட்டுமே ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் .

18ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் பொலிஸ்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் நடைபெற்றதாக கருதக் கூடாது.

2012ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பத்து வீதம் பாதுகாப்புச் செலவுகளுக்காகவும், கல்வி மற்றும் சுகாதாரத்துக்காக மூன்று வீதத்துக்கும் குறைவான நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.வறுமையிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமாயின் கல்விக்கு அதிகளவு முதலீடு செய்ய முனைப்பு காட்ட வேண்டும்- என்றார்.(ச)



திருகோணமலை ஒன்றிணைந்த அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட உப்பாறு பாலம் நேற்று புதன்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் திறந்துவைக்கப் பட்டது. இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல, மீன்பிடி வளத்துறை பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# கிழக்கின் சித்த மருத்துவத்துறையை கொழும்பு பல்கலையுடன் இணைக்க முயற்சி

## நிறுத்தக்கோரி அமைச்சருக்கு மகஜர்

கொழும்பு,ஒக்.20

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையை கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் நடவடிக்கையினை உடனடியாக நிறுத்துமாறு கோரி கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணத்தினால் உயர் கல்வியமைச்சர் எஸ். பி.திஸாநாயக்கவுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறை கடந்த 3 வருடங்களாக இயங்கி வருகிறது. ஒவ்வொரு பிரிவிலும் 20 மாணவர்கள் வீதம் தெரிவுசெய்யப் பட்டு தற்போது மொத்தமாக 58 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

ஒவ்வொரு வருடத்திலும் சித்த மருத்துவத்துறைக்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு 20 மாணவர்களைத் தெரிவு செய்கிறது.

இப்படியிருக்க கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இந்த சித்த மருத்துவத்துறையை இணைப்பதற்கு ஏற்பாடுகள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக நடைபெற்று வருகின்றது.

கிழக்கு மாகாணத்துக்கென இருக்கும் ஒரு கொடை போன்ற சித்த மருத்துவத் துறையினை கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்க முயற்சிப்பது தவறான செயற்பாடாக அமையும்.

கிழக்கு மாகாணத்துக்குள்ள பாரம்பரிய மருத்துவத்துறைக்கான ஒரேயொரு பீடமாக திகழ்வது கிழக்குப் பல்கலைக் கழக சித்த மருத்துவ பீடமாகும்.

கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையில் ஆங்கில மொழிமூலம் நடைபெற்று வருகின்ற கற்கை நெறியின் மூலம் பல்வேறு மேம்பாடுகள் சித்த மருத்துவத் துறைக்கு ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கொரிய நாட்டுப் பிரஜைக்கு அபராதம்

கொழும்பு,ஒக்.20

12 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தையும், 27 லட்சம் ரூபா பணத்தையும் நாட்டிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டு செல்லமுயன்ற கொரிய நாட்டுப் பிரஜைக்கு சுங்கத் திணைக்களம் 37 லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

27 லட்சம் ரூபா பணம் அரசுடைமையாக்கப்பட்டது. கொரியப் பிரஜைகளான தாயிடமும் மகனிடமும் இருந்த தங்கக் காசுகள் பற்றி அவர்கள் கூறியிருந்ததனால் அதற்கு அபராதம் விதிக்கப்படவில்லை. இந்தத் தங்கக் கட்டிகள் சுங்கத் திணைக்களத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டு, அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதியை இவர்கள் பெற்றுக்கொண்ட பின்னர் இவைகள் விடுவிக்கப்படும் என்று சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மலேசியாவின் கோலாலம்பூர் நகருக்குச் செல்லவிருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ச-5)

# திருக்கேதீஸ்வரம் ஆலயப் புனரமைப்புக்கு இந்திய அரசால் 32 கோடி ரூபா நிதியுதவி

## இந்தியத் தூதரகம் தகவல்



கொழும்பு,ஒக்.20

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் புனரமைப்புப் பணிக்காக 32 கோடி இலங்கை ரூபாய் அளிக்க, இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இலங்கையின் வடபகுதியின், மன்னார் மாவட்டத்தில் உள்ள பழைமையான திருக்கேதீஸ்வரம் ஆலயம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலமாகும்.

இந்த ஆலயத்தின் புனருத்தாரண பணி, இந்திய தொல்பொருள் துறை மற்றும் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியால் இணைந்து நடத்தப்படுவதாக, இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியா-இலங்கை நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கையின்படி, இந்த ஆலயப் பணிக்கு இந்திய அரசு, 32 கோடி, 60 லட்சம் இலங்கை ரூபாவை அளிப்பதாக ஒப்புதல் அளித்துள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடபகுதியில் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்காக, அந்த நாட்டில் இந்திய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நலத்திட்டங்களில் இதுவும் ஒன்று என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

(ச)

# வன்னியில் தமிழரை சிறுபான்மையினராக மாற்றும் கைங்கரியத்தில் அரசு முனைப்பு

## மனோ கணேசன் குற்றச்சாட்டு



கொழும்பு,ஒக்.20

கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்களை நடத்தி தமிழ், முஸ்லிம் மக்களை சிறுபான்மையினராக மாற்றி வருவதற்கு இணையான திட்டத்தை வடக்கிலும் அரசு ஆரம்பித்துள்ளது.வடமாகாணத்தில் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழர்களை சிறுபான்மையினராக மாற்றிவிடும் கைங்கரியத்தில் அரசு முனைப்புடன் செயற்படுகின்றது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசுக்கு இரண்டு முகங்கள் இருக்கின்றன. ஒரு முகத்தை வைத்துக்கொண்டு கூட்டமைப்புடன் பேச்சு நடத்துகின்றனர். அடுத்த முகத்தை வைத்துக்கொண்டு தமிழர் தாயகம் என்ற தளத்தை தகர்க்கும் விடயங்களைச் செய்கின்றனர்.

இந்த இரண்டாம் முகத்தை அம்பலப்படுத்தும் சாத்விகப் போராட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய தமிழ் கட்சிகளும் இவ்வாரம் வவுனியா நகரில் ஆரம்பித்திருக்கின்றன. இந்த சாத்விக செயற்பாட்டுக்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் முழுமையான ஆதரவை உறுதியுடன் வழங்குகின்றது.

தமிழ் மக்களின் நியாயமான தேசிய அபிலாசைகளை வென்றெடுக்கவும், அரசின் இரண்டாவது முகத்தை அம்பலப்படுத்தவும் வடகிழக்கின் தமிழ் தலைமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போராட்டங்களுக்கும் நாம் உறுதியுடன் துணை நிற்போம்.

உரிமைக்கு குரல் கொடுக்கவும், உறவுக்கு கைக்கொடுக்கவும் ஜனநாயக மக்கள் முன்னணி ஒருபோதும் தயங்காது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய தமிழ் கட்சிகளும் ஒன்றுப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றன. தமிழர்களின் நிலங்களும், வீடுகளும் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். உள்நோக்கம் கொண்ட காணிப்பதிவு நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும் ஆகிய தமிழர்களின் கோரிக்கைகளுக்கு அரசு பதில் கூறியே ஆகவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெருவாரியாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் காணி நிலங்களை சிறுகச் சிறுக அரித்து அபகரித்துக்கொள்வது பெரும்பான்மைவாத அரசின் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கும் கொள்கையாகும்.

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டம் அல்லது மாகாணம் எஞ்சியிருந்தால் தானே தமிழர்களும், முஸ்லிம்களும் தேசிய உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பார்கள். அந்த நிலைமையை மாற்றிவிட்டால் உரிமைக் கோரிக்கைகளுக்கு இடமிருக்கவே முடியாது என்பதுவே இனவாதிகளின் திட்டமாகும்- என்றார். (ச)

# தற்கொலைக்கு முயல்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு; தடுப்பதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்

## மன்னார் வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவிப்பு



மன்னார், ஒக்.20

மன்னார் மாவட்டத்தில் தற்கொலைக்கு முயற்சி செய்வோரின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்துச் செல்வதாக மன்னார் வைத்தியசாலை அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத் தெரிவித்தார்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது தற்போது தற்கொலைக்கு முயற்சி செய்வோரின் தொகையில் பெரிய வேறுபாடு காணப்படுகின்றது.

2003 ஆம் ஆண்டு 93 பேர் தற்கொலைக்கு முயற்சி செய்தனர். இவர்களில் 24 பேர் இறந்தனர். 2008 ஆம் ஆண்டு 103 தற்கொலை முயற்சிகளில் 15 பேர் மரணமடைந்தனர். நடப்பு ஆண்டில் ஒக்டோபர் மாதம் வரை தற்கொலைக்கு முயன்ற 166 பேரில் 20 பேர் மரணமடைந்துள்ளனர்.

தற்கொலைக்கு முயல்பவர்களில் அநேகர் 14 வயதிலிருந்து 20 வயதுக்குட்பட்டவர்களாவார்கள். மேலும் இவர்களுள் அநேகர் திருமணமான பெண்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தற்கொலை முயற்சிக்கான காரணங்களைக் கண்டறிய வேண்டுமெனத் தெரிவித்த வைத்திய அத்தியட்சகர் இதனைத் தடுப்பதற்கு அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் மதப் பெரியார்கள் என அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

மேலும் தற்கொலைக்கு முயல்பவர்களுக்கு மன்னார் பொது வைத்தியசாலையில் உளநலம் சார்ந்த சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (க-601)

# விவாதப் போட்டியில் முதலிடம்

வவுனியா சைவப்பிரகாச மகளிர் பாடசாலை மாணவிகள் 89 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி நடத்தப்பட்ட தேசிய மட்ட விவாதப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்கள்.

இதற்கான வெற்றிக் கேடயமும், பணப்பரிசும் தேசிய கூட்டுறவு தின வைபவத்தின் போது ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

பின்னர் பாடசாலை அதிபர் செல்வி உமா இராசையா மாணவர்கள் முன்னிலையில் இவற்றை வழங்கி வைத்தார்.



கு.நிதர்சனா, ஆ.ஜெசிகா, அ.நிரோஜியா, ஞா.யூ. சுபோதினி ஆகிய மாணவிகளே மேற்படி விவாதப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளனர்.(க-43)

# சிறந்த அதிபராகத் தெரிவு

வவுனியா, ஒக்.20

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் சிறந்த அதிபராக வவுனியா பெரிய கோமரசன் குளம் மகாவித்தியாலய அதிபர் ப.தனபாலசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர்.

இவர் நீண்ட காலமாக இந்தப் பாடசாலையில் அதிபராகப் பணியாற்றி வருகின்றார். அத்துடன் பாடசாலையின் முன்னேற்றத்துக்குப் பல்வேறு வகையிலும் முன்னின்று உழைத்து வருகிறார். (க-421)

# பொலிஸாரிடம் சிக்கிய பனங் கள்ளு

மன்னார், ஒக்.20

தலைமன்னார் பகுதியில் சட்டவிரோதமான முறையில் விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி பனங்கள்ளை தலைமன்னார் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.


தலைமன்னார் ஸ்ரேசன் பகுதியூடாக உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றிக்கொண்டு வரப்பட்ட போது மேற்படி பனங்கள் கைப்பற்றப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த 15 ஆம் திகதி மதியம் இடம் பெற்றுள்ளது.

40 பெட்டிகளைக்கொண்ட 954 போத்தல்களுடன் கள் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தப் பொருள்களைக் கொண்டு வந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை இன்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதோடு பொருள்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் தலைமன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.சி.எம்.ஜமீன் தெரிவித்தார்.

இவ்வாறு பெருந்தொகையான பனங்கள்ளைப் பொலிஸார் மன்னாரில் கைப்பற்றியமை இதுவே முதற்தடவையாகும். (க-601)

## அபிவிருத்தியை நோக்கி...



தேவை துரிதமான சேவை: மன்னாரில் அடையாளம் காணப்பட்ட இடங்களினூடாக ரயில் பாதைகளும் ரயில் தரிப்பிடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. (601)

# கோம்பாவிலில் மீள்குடியமர்வு

முல்லைத்தீவு, ஒக்.20

முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களைக் குடியமர்த்துவதற்கான மீளாய்வுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் இந்த மக்களைக் குடியமர்த்துவதற்கென கோம்பாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டது.

இங்கு உரையாற்றிய மீள்குடியேற்ற அமைச்சர் வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலுள்ள 2 ஆயிரத்து 306 குடும்பங்களும் விரைவில் மீள் குடியமர்த்தப்படுவர் என்று கூறினார்.

கோம்பாவில் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக வீடுகள், மலசல கூட வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் குறித்தும் அமைச்சர் ஆராய்ந்துள்ளார்.

பின்னர் கோம்பாவில் பிரதேசத்தில் நடைபெற்றுவரும் வேலைத்திட்டங்களையும் அமைச்சர் நேரில் பார்வையிட்டார். (க)

# காணி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையிலும் தனியார் கட்டடத்தில் இயங்கும் அஞ்சல் நிலையம்

துணுக்காய் உப அஞ்சல் நிலையம் பெரும் வசதியீனங்களுக்கு மத்தியில் தனியார் கட்டடமொன்றில் இயங்கி வருவதால் மக்களின் அஞ்சல் தேவைகளைத் திறம்பட நிறைவேற்றுவதில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

இந்த அஞ்சல் அலுவலகத்துக்கென நிரந்தரமானதொரு கட்டடம் இல்லாமையால் நீண்ட காலமாகத் தனியார் ஒருவரின் கட்டடத்திலேயே இயங்கி வருகினறது. மாதாந்தம் ஆயிரம் ரூபா வாடகையும் செலுத்தப்படுகின்றது.

இந்த நிலையில் அஞ்சல் நிலையத்திற்கென நிரந்தரமானதொரு கட்டடம் அமைக்கும் பொருட்டு துணுக்காயில் உதவி அரச அதிபர் கால் ஏக்கர் காணித்துண்டொன்றை ஒதுக்கியுள்ளார். ஆனால் கட்டட வேலைகள் எதுவும் ஆரம்பமாகவில்லை.

இதுதொடர்பாகத் துணுக்காய் உதவி அரச அதிபருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அஞ்சல் அலுவலகம் அமைப்பதற்கென எமது அலுவலகத்தால் கால் ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இனிமேல் அஞ்சல் திணைக் களத்தினர் இதற்கான அனுமதியை ஆளுநரிடமிருந்து பெற்றுக் கொண்டால் காணிக்குரிய அனுமதிப் பத்திரத்தை எம்மால் வழங்க முடியும். அதற்குப் பிறகு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் கட்டடத்தை அமைக்கலாமென்றார்.

ஆகவே இனிமேல் அஞ்சல் திணைக்களத்தினரின் நடவடிக்கையைப் பொறுத்தே கட்டட வேலைகள் அமையும். இது இவ்வாறிருக்க துணுக்காய் அஞ்சல் நிலையத்துக்கென நிரந்தரமானதொரு கட்டம் அமைப்பது தொடர்பாக இங்குள்ள மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்; போர்ச்சூழலிலும் துணுக்காய் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இயங்கி வந்த இந்த அஞ்சல் நிலையம் சிறப்பான சேவையை வழங்கியது. தற்போது மல்லாவியில் அமைக்கப்பட்டுள்ள அஞ்சல் அலுவலகக் கட்டடம் போலத் துணுக்காயிலும் அமைய வேண்டும் என்பதே எமது பெருவிருப்பாக உள்ளது என்றனர்.(க-415)

# 'ஆட்டக்காரியை' நாடாதீர்கள்! மேலதிக அரச அதிபர் அறிவுரை

அக்கராயன், ஒக்.20

விவசாய திணைக்களத்தினரால் சிபார்சு செய்யப்படாத நெல்லினங்களைப் பயிரிட்டு நட்டமடைய வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அக்கராயனில் இடம்பெற்ற காலபோக நெற்செய்கைக் கூட்டத்திலேயே கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

குறிப்பாக ஆட்டக்காரி நெல்லினம் சிபார்சு செய்யப்படாத ஒன்று. இதனை விவசாயிகள் பயன்படுத்தக் கூடாது. மேலும் இதுபோன்ற நெல்லினங்களைப் பயன்படுத்துவதால் அவற்றில் நோய்த் தாக்கம் ஏற்பட்டு விவசாயிகள் நட்டமடைய வேண்டிய நிலை ஏற்படும். எனவே இவை தொடர்பாக விவசாயிகள் விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த காலங்களில் ஆட்டக்காரி நெல்லினத்தைப் பயிரிட்ட பல விவசாயிகள் அவற்றில் நோய்த் தாக்கம் ஏற்பட்டதால் உரிய விளைச்சளைப் பெறமுடியாது நட்டமடைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இதனைக்கருத்தில் கொண்டே மேலதிக அரச அதிபர் இவ்வாறு கூறியிருக்கலாமென விவசாயிகள் கூறுகின்றனர். (க-410)

# கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி, ஒக்.20

கிளிநொச்சி, மாயவனூர்ப் பகுதியில் கசிப்பு,கோடா, கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்கள் என்பவற்றை வைத்திருந்த நபரொருவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூர்ப் பகுதியில் 170 போத்தல் கோடா 28 போத்தல் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கான உபகரணம் என்பவற்றை வைத்திருந்த ஒருவரைக் கடந்த 15 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து 17 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினார்.

குறித்த நபரின் மூன்று குற்றச் செயல்களுக்கும் 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் தண்டம் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒருவருடம் நான்கு மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

170 போத்தல் கோடா வைத்திருந்தமைக்கு ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபாவும் 27 போத்தல் கசிப்பு வைத்திருந்தமைக்கு ஒரு லட்சம் ரூபாவும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களை வைத்திருந்தமைக்கு 10 ஆயிரம் ரூபாவும் எனத் தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் அனுமதியின்றிச் சாராயம் விற்பனை செய்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் நடைபெறும் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# அதிகரித்துச் செல்லும் விபத்துச் சம்பவங்கள் உயிர்ப் பலிக்காக காத்திருக்கும் ரெய்லர் பாலம்

கிளிநொச்சி,ஒக்.20

கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் இருந்து கரடிப் போக்குக்குச் செல்லும் ரெய்லர் வீதியில் கரடிப்போக்குக்கு அண்மையில் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதுள்ள பாலத்தினுள் உழவு இயந்திரம் வீழ்ந்ததில் அதன் சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார். கடந்த 13 ஆம் திகதி இந்தப் பாலத்தின் ஊடாக வந்த உழவு இயந்திரமே இந்தப் பாலத்தினுள் வீழ்ந்தது.

இதன்போது அதன் சாரதியான 55 வயதுடைய வி.பாலசுப்பிரமணியம் என்பவர் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். அவரின் மேல் உழவு இயந்திரம் வீழ்ந்திருப்பின் அதன் விளைவு பாரதூரமாக மாறியிருக்கும்.

இந்தப் பாலம் மனித உயிர்களைக் காவு கொள்ளும் நிலையில் இருப்பது தொடர்பாக பல தடவைகள் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன.

இதனால் தினமும் பாதிக்கப்பட்டு வரும் பொது மக்களும் பலமுறை கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் எல்லாமே செவிடன் காதில் ஒலித்த சங்கின் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளன.

சிலவேளை மனித உயிர்களைப் பலி கொடுத்தபின் இதனைப் புனரமைப்பதற்கு அதிகாரிகள் காத்திருக்கிறார்களோவென இந்தப் பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.(க-405)

# முறையற்ற வகையில் வாகனம் செலுத்திய இருவருக்கு 22 ஆயிரம் ரூபா அபராதம்

கிளிநொச்சி, ஒக்.20

கிளிநொச்சியில் மது போதையில் வாகனம் செலுத்தியவருக்கும் சாரதி அனுமதிப்பத்திரமின்றியும் காப்புறுதிப் பத்திரமின்றியும் வாகனம் செலுத்தியவருக்கும் 22 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் மது போதையில் முச்சக்கர வண்டியைச் செலுத்திச் சென்ற ஒருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். இவருக்கு 8 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஒருமாத காலத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரமும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ் என்பன இன்றி வாகனம் செலுத்திய மற்றுமொருவருக்கு 14 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-6)

# தொழிற்பயிற்சி கற்கை நெறி

மல்லாவி,ஒக்.20

தொழிற் பயிற்சிக் கற்கை நெறியொன்று சர்வதேச நிறுவனமொன்றினால் மாங்குளத்தில் நடத்தப்படவிருக்கின்றது.

இதில் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் ஆகிய வகுப்புகளில் கல்வி கற்ற மாணவர்கள் பங்கு பற்ற முடியும்.

இந்த பயிற்சி நெறியில் ஒட்டு வேலை, மேசன், தையல், குழாய் பொருத்துதல் ஆகிய தொழில்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஆண், பெண் இருபாலாரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். ஒரு பயிற்சி நெறிக்கு 30 பேர் மட்டுமே இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வெளியேறியவர்கள் தமது விண்ணப்பங்களை நாளைய தினம் 21 ஆம் திகதிக்கு முன்னர் மாங்குளம் மகா வித்தியாலய அதிபரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தத் தொழிற்பயிற்சிக் கற்கை நெறியின் மூலம் இந்தப் பிரதேசத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் பயனடைவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் அவர்களின் பொருளாதார நிலையிலும் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியம் உண்டு. (க-425)

# கிளிநொச்சியில் கைதான மூவருக்கும் விளக்கமறியல்

கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரணை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் சந்தேகநபர் மூவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றைய தினம் அடையாள அணிவகுப்பை மேற்கொள்ளுமாறும் கிளிநொச்சி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஓ-323-6)

# மின்சார சபை நட்ட மின்கம்பங்களால் ஆலய செயற்பாடுகளுக்கு இடையூறு

கிளிநொச்சி, ஒக்.20

கிளிநொச்சியில் வட்டக்கச்சி முருகன்ஆலயத்தின் மதில் அருகே மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினரால் கிளிநொச்சி மின் அத்தியட்சகருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சிப் பகுதியில் மின்சாரம் வழங்குவதற்காகத் தற்போது மின் கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன.

இவ்வாறு நடப்படும் கம்பங்களில் மூன்று கம்பங்கள் ஆலயத்தின் வெளி வீதியில் மதில் அருகே நடப்பட்டுள்ளன. இந்த ஆலயத்துக்கு அருகே வீதியோரமாகப் பெரிய அரச மரம் ஒன்று உள்ளது. அதனைவிட்டு விலத்தி மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளதாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மின்கம்பங்கள் உள்ளதால் சுவாமி வெளி வீதியுலா மற்றும் தேர் உற்சவ காலங்களில் பல இடையூறுகள் ஏற்படும் எனவும் ஆலயத்தின் அருகே உள்ள பாரம்பரியம் மிக்க வில்வமரம் தறிக்கப்படும் நிலை ஏற்படும் எனவும் ஆலய நிர்வாகத்தினரால் மின் அத்தியட்சகருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான இடையூறுகளில் இருந்து நீங்கக் கூடியவாறான மாற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலய நிர்வாக சபையினர் கோரியுள்ளனர். (க-405)

## பெருமதிப்பு...



அயராத சேவை:கிளிநொச்சி கனகபுரத்தில் இயங்கிவரும் ஆதவன் முன்பள்ளி ஆசிரியர்கள் சர்வதேச ஆசிரியர் தினத்தில் மதிப்பளிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர். (6)

# பசுப்பால் கிடைக்காத நிலையில் கிளிநொச்சி முன்பள்ளிச் சிறார்கள்

கிளிநொச்சி, ஒக்.20

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வரும் முன்பள்ளிகளில் சிறார்களுக்குப் பசுப்பாலை வழங்குவதில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த முன்பள்ளிகளில் கல்வி கற்கும் சிறார்களுக்கு மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி செயலக ஒழுங்கு படுத்தலில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் பசுப்பாலை வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது கிளிநொச்சிப் பகுதியில் தனியார் போட்டி போட்டுப் பாலைக் கொள்வனவு செய்து வருவதால் இந்த முன்பள்ளிகளுக்கான பால் வழங்கும் செயற்பாடு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் கவனம் எடுத்து சிறார்களுக்குப் பால் வழங்கும் செயற்பாட்டை தடையின்றி நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர் கோருகின்றனர். (405)

# கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் பித்தளைப் பொருள்கள் பல திருட்டு

கிளிநொச்சி,ஒக்.20

கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதிக்கு அருகே உள்ள கந்தசுவாமி ஆலயத்தில் கடந்த 13 ஆம் திகதி இரவு பெறுமதி வாய்ந்த பித்தளைப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

ஆலயத்தின் கூரையில் உள்ள ஓட்டினைக் கழற்றி உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பித்தளைப் பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

பஞ்சாராத்தி, பஞ்ச பாத்திரம், தீபக்கால், கற்பூரக்கால், காளாஞ்சி, சரவிளக்கு, அஷ்ட தேவர், பஞ்ச மணி, கைமணி, விபூதிமடல் சந்தனக் கிண்ணம் உட்பட பல்வேறு பித்தளைப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக கிளிநொச்சி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினர்.

இதுவரை அமோகமாக நடைபெற்று வந்த இரும்பு வியாபாரம் முடிவுற்ற நிலையில் திருடர்களின் பார்வை ஆலயங்களின் பக்கம் சாய்ந்துள்ளது.

இதனால் ஆலயத்தில் உள்ள வாகனங்கள், தெய்வ விக்கிரகங்கள், பெறுமதி வாய்ந்த பித்தளைப் பொருள்கள் என்பன தற்போது களவாடப்பட்டு வருகின்றன. (க-405)

# புதிய கட்டடம் திறந்து வைப்பு

அக்கராயன், ஒக்.20

கிளிநொச்சி அக்கராயன் அ.த.க.பாடசாலையில் புதிய கட்டடமொன்று கடந்த 14 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

40 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் திறந்து வைத்தார்.

பாடசாலை அதிபர் இதய சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்துரைகளை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி வலய பதில் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோர் நிகழ்த்தினர். (க-410)

# கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் மாணவரிடையே வணிக விழாப் போட்டி

கிளிநொச்சி, ஒக்.20

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே கடந்த 11, 12 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வணிக விழாப் போட்டிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

இந்தப் போட்டிகள் பாடசாலை மணவரிடையே வணிகத்துறை சார் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் நடத்தப்பட்டன.

முதல்நாளான 11 ஆம் திகதி குறு வினாவிடை, கட்டுரை ஆகிய போட்டிகள் நடைபெற்றன. இதில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர்.

இரண்டாம் நாளான 12ஆம் திகதி பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் 40 வரையான மாணவர்கள் பங்குபற்றினர்.

கிளிநொச்சி கல்வி வலய வர்த்தகப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டி நிகழ்வுகளில் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் வணிகத்துறை ஆசிரியர்கள் 25பேர் நடுவர்களாகக் கலந்து கொண்டனர். (க-405)

உதயன்
20 ஒக்ரோபர் 2011 வியாழக்கிழமை




# ஆலயங்களில் மிருக பலியிடுதல்

## ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றே

மிருகபலியிடுதல் என்பது என்ன காரணத்துக்காக செய்யப்பட்டு வந்தது என்பதை மறந்து விட்டார்கள். முன்னைய காலத்து எமது மூதாதையர்கள் காரண மின்றி எந்தக்காரியத்திலும் இறங்கியது கிடையாது.

உண்மையில் எமது யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களில் வாழ்கின்ற முன்னோர் களைக் கேட்டால் இது தொடர்பாகச் சொல்வார்கள். பேய்கள், ஆவிகளுக்குப் பயந்த மக்கள் அவைகளின் கோபத்துக்கு ஆளாகாமல் இருப்பதற்காக இவ்வாறான மிருக பலியிடுதல்களை மேற்கொண்டிருந்தார்கள்.

அன்றைய காலகட்டத்துக்கு இவ்வாறான நடவடிக்கைகள் ஏற்புடையனவாகவே இருந்தன. இருப்பினும் தற்போது அதே மரபுமுறைகளை பின்பற்ற முனை கின்றபோதே இவ்வா றான சிக்கல்கள் எழுகின்றன.

இந்தக்காலத்தில் இவ்வாறான மிருகபலியிடுதல்கள் தொடர்பில் கதைக் கின்றனர். இவர்களில் எத்தனை பேர் தமது வீடுகளில் விலங்குகளைக் கட்டி அவற் றைச் சித்திரவதை செய்கின்றனர். இதனைத் தடுப்பவர்கள் எவருமில்லை. ஆனால் எமது பரம்பரையான மிருக பலியிடுதலை தடுப்பது எந்த வகையில் நியாயம்?

**க.தாபேஸ்** - கட்டைப்பிராய்.

## ஏற்றுக்கொள்ள முடியாது

ஆலயங்களிலே மிருக பலியிடுதல் என்பது ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்றாகும். ஆலயங்களிலே மிருக பலியிடுதல் என்பது மக்களின் அறியாமையாகும். காலங்காலமாகப் பின் பற்றி வந்த ஒரு மூட நம்பிக்கை என்றே கூறலாம். ஆலயம் எனப்படுவது ஆன்மாக்கள் லயப்படும் இடமாகும். நாம் மன அமைதி பெற நாடிச் செல்லும் ஒரு பரிசுத்தமான இடமாகும். அந்த ஆலயத்தின் புனிதத்தை மிருக பலியிடல் என்னும் கொடூர சம்பவத்தினால் அசுத்தமடையச் செய்கின்றார்கள்.

பாமரமக்களின் அறியாமையினை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சில ஜோதிடர்கள் இந்தவகையான செயல்களுக்கு மக்களைத் தூண்டிவிடுகின்றனர். மக்களும் தங்கள் எதிர்காலம் பற்றி ஜோதிடர்கள் கூறவல்லவர்கள் என்ற மூடநம்பிக்கையால் இவ்வாறான தவறான செயல்களில் ஈடுபட்டு ஆலயத்தின் புனிதத்தைக் கெடுத்துவிடுகிறார்கள்.

குறிப்பாக மக்களுக்கு நோய் ஏற்பட்டாலோ அல்லது ஏதாவது தடை ஏற் பட்டாலோ அதைச் சரிசெய்வதற்காக இறைவனிடம் கோரிக்கை முன்வைத்துப் பலியிடல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இவையெல்லாம் பகுத்தறிவுள்ள மனிதனைக் கேலிசெய்யும் செயல்களாக உள்ளன. எனவே இவ்வாறான பலியிடல் பரிகாரங்களைத் தவிர்த்து கிரியைகள், யாகங்கள் மூலம் இறைவனைக் குளிர்த்திப்படுத்தலாம். ஆகவே ஆலயங்களில் மிருகபலியிடுதல் என்பது தேவை யற்ற ஒரு செயலே என்று கூறுவதோடு இது முற்றிலும் தவறான ஒன்றாகும்.

**தேவிகா** - குமரப்புலம், மூளாய்.

## மாற்றம் வேண்டும்!

மாற்றம் வேண்டும்! மாற்றம்
வேண்டும்!
மண்ணுலகில் மாற்றம்
வேண்டும்.
பிறர் போற்ற வாழும் எண்ணம்
வேண்டும்.
எண்ணம் என்றும்
கைவண்ணமாக வேண்டும்.
வெல்லும் எண்ணம் உனக்கு வேண்டும்.
வெற்றி வேங்கையாய் மாற
வேண்டும்.

கல்லாயுத யுகத்தில் வாழ்ந்த
மானிடனே!
கணினி யுகத்தைக்
கண்டபோதும்
அறிவியலில் ஆர்ப்பரித்த போது
-எனினும்
உன் உள்ளத்தில் மட்டும்
மாற்றமில்லை.
கல்வியில் மாற்றம் கண்டாய்.
நற்கருத்தினில் மாற்றம்
கொண்டாய்
உலகையே மாற்றியமைத்தாய் - ஏன்
கல்லாயுத உடையை மட்டும்
மாற்றவில்லை.

பாலையை சோலையாக்கினாய்- ஆனால்
சேலையை என்னவாக்கினாய்
மலைச் சிகரம் நீயடைந்தாய்- ஆனால்
மனிதத்துவத்தில் எங்கு
சென்றாய்
விஞ்ஞான அறிவாலே
விந்தைகள் எல்லாம்
நிகழ்த்திவிட்டு
உன் தந்தையை மட்டும் தானோ
தரணியில் தவிக்கவிட்டாய்
பிறகோள்கள் நீ கடந்தாய்
பிறரை மட்டும் நேசிக்காமல்
அந்தாட்டிக்காவில் ஆராய்ச்சிக்கு
சென்றாய் - ஆனால்
அயலவரிடத்தில் அன்பு இல்லை.

அடிமை இனம் நம் இனமா?
அன்பு கொள்ள இனம் நம்
இனமா?
அரசியலில் பழிவாங்கல்தானா?
மண்ணுலகில் இது
தேவைதானா?

பழிவாங்கும் எண்ணம்
வேண்டாம்.
பார் உலகில் நித்தம் சண்டை
வேண்டாம்.
துதிசெய்வோம் அன்புடனே
துயர்களைவோம் மண்மீது
வலிதந்த காலம் எல்லாம்
கலியுகத்தின் வடிவம் தானே!
பலி இனி மண்ணில் வேண்டாம்.
பார் உலகில் அமைதி
வேண்டும்.

ஆறறிவு மானிடனே - உன்
ஆற்றல் எல்லாம் நன்மைக்கே!
பள்ளமெல்லாம் நிரவிடவே!
நல் உள்ளம் மண்ணில்
பெருகிடவே!
ஆன்மிகம் முதல் அரசியல் வரை,
அன்பு முதல் அறிவு வரை
கலை முதல் கலாசாரம் வரை,
களங்கமற்ற மாற்றம் வேண்டும்
சமூக சமத்துவம் கிடைக்க வேண்டும்
சமயவெறி மாறவேண்டும்.
சரித்திரத்தில் உன் வாழ்க்கை
சரிந்திடாமல் வாழ வேண்டும்.
மனிதத்துவம் வளர வேண்டும்.
மண்ணில் நல்வாழ்வு வேண்டும்.

கவியாக்கம்
இனியவை இனியவன்

## கலங்காதிரு மனமே

அன்புக்குத் தாயுண்டு அறிவுக்குத் தந்தையுண்டு
ஆற்றுதற்கு தெய்வமுண்டு- என்றும்
இனிமைக்குத் தமிழுண்டு ஈசனின் துணையுண்டு
கலங்காதிரு மனமே!
நயவஞ்சக நினைப்புக்களும் நாகரிகக் காய்ச்சலும்
தோற்றிவிட்ட சமூகத்திலே- நாளை
பண்பாடு மலரும் நம் பயணம் சிறக்கும்
கலங்காதிரு மனமே!
இன்ப, துன்பங்கள் சுழலும் சில்லென்பது
படைப்பின் சாராம்சமே- இதை
உணர்ந்து வாழ்வதே மானிடர்க்கு அழகு
கலங்காதிரு மனமே!
நடப்பது எல்லாம் நன்றாகவே நடக்கும்
கீதையின் உபதேசமே- என்று
துணிவே துணையாக வருவதை எதிர் கொள்வோம்
கலங்காதிரு மனமே!
சமாதான தீர்வுகள் கேள்விக் குறியாக
உருப்பெருத்த இலங்கையிலே- நாளை
சமாதானம் மலர்ந்திடும் விடியல் துலங்கிடும்
கலங்காதிரு மனமே!

ஜி.போல் அன்ரன்,
இணுவில் மேற்கு

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை

ஆரோக்கியமானதா ☐ ஆரோக்கியமற்றதா ☐

பெயர்: ..............................
முகவரி: ..............................
அடையாள அட்டை இல..
..............................

உங்கள் தீர்ப்புக்களை 24.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இன்றைய மொழி

- ★ அடிமை வாழ்க்கை வாழாதே!
- ★ ஆலயங்களில் மிருக பலி கொடுக்காதே!
- ★ இரவில் ஆலயங்களில் " இன்னிசைக் கச்சேரி நடத்தாதே"
- ★ ... பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்க்காதே!
- ★ உடைகளை அநாகரிகமாக அணியாதே!
- ★ ஊருக்கு ஊர் கோஷ்டி மோதலை உருவாக்காதே!
- ★ எண்ணியவை யாவையும் செயற்படுத்த எண்ணாதே!
- ★ ஐயம் கொண்டு சந்தோஷ வாழ்வை வீணாக்கதே!
- ★ ஒருவனுக்கு ஒருத்தி எனும் கோட்பாட்டை மறக்காதே!
- ★ ஓயாமல் "செல்போனில் பேசி" காசைக் கரியாக்காதே!
- ★ ஒளடதம் செய்து வாழ்வைக் குறைக்காதே!

வந்தனா,
கரவெட்டி.

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்கும் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக் கின்றது. எனவே

**இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை**

**ஆரோக்கியமானதா**
**ஆரோக்கியமற்றதா**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன் வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றி பெறும் என்று நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

### இளைஞர், யுவதிகளே!


உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-..............................
முகவரி :- ..............................
..............................
.................... திகதி
.................... கையொப்பம்

# நேர்மையான விமர்சனங்கள் எப்போதும் ஏற்றுக்கொள்ளப்படும்

## செல்வராசா எம்.பி.கூறுகிறார்



அம்பாறை, ஒக்.20

நேர்மையான விமர்சனங்களை, நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளோம். ஆனால் மக்களைத் திசைதிருப்பும் வகையிலான விமர்சனங்களை ஒரு போதும் ஏற்கமாட்டோம்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபைக்குத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள நான்கு உறுப்பினர்களது சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபையான மாநகர சபை மூலம் சட்டம் ஆக்கமுடியாது. மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட கிராமங்களின் அபிவிருத்திக்காகச் சேவையாற்றுவதே இந்த உள்ளூராட்சி சபையின் முக்கிய இலக்காகும்.

எனவே கல்முனை மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள நமது உறுப்பினர்கள் நமது தமிழ்க் கிராமங்களின் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

அத்தோடு கட்சிப்பற்றுறுதியோடும், தமிழ்த்தேசியத்துக்கு உரமூட்டுபவர்களாகவும் நீதி, நேர்மையுடன், மக்களின் நம்பிக்கையை வெல்லும் வகையிலும் உறுப்பினர்கள் திகழவேண்டும்.

2009 ஆம் ஆண்டில் யுத்தம் மெளனித்த பின் தமிழர்களின் பிரதிநிதிகள் யார் என்ற கேள்வியை எழுப்பி, அரசு எக்காளமிட்டு சிரித்துக்கொண்டிருந்த போது இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் 14 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்து அரசுக்கு தக்க பதிலடியை வழங்கினார்கள்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர்தான் தமிழர்களைக் காக்கும் தலைவர்களென்பதை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் இதன்மூலம் எமது மக்கள் வெளிப்படுத்தினர்.

இதன் பின்னர் முதலாம் கட்டம், இரண்டாம் கட்டமாக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமிழத் தேசியக்கூட்டமைப்பை அமோக வெற்றி பெறச் செய்துவலுப்படுத்தினர்.

ஏன் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு, நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு, திருக்கோயில் பிரதேச சபைகளின் ஆட்சிப் பொறுப்பு எமது மக்களின் ஜனநாயகத் தீர்ப்பின் மூலம் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசமேயுள்ளது.

அதேவேளை கல்முனை மாநகர சபைத்தேர்தலில் சிறு சறுக்கல் ஏற்பட்டுள்ளது. கடந்த முறைகூட்டமைப்பு சார்பில் ஆறு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தும், இம்முறை நான்கு உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது சிறுபின்னடைவுதானெனினும் இந்த மாநகர சபையில் எதிர்க்கட்சியாக இருந்த இடத்தைப் பறிகொடுக்கவில்லை. இரு அங்கத்துவத்தை நாம் இழந்துள்ளோமே தவிர அன்றும், இன்றும் நாம் தான் இந்த சபையில் எதிர்க்கட்சியினர் என்பதில் திருப்தி காண்போம்.

நாம் அரசியல் உரிமையுள்ளவர்களாக மாறவேண்டும், தமிழ்த் தேசியப் பற்றுள்ளவர்களாகத் திகழவேண்டுமென்றால் நமது வாக்குரிமையைப் பயன்படுத்தாது விட்டிருக்கமாட்டோம்.

ஆனால் கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்களிப்புவீதம் குறைந்தமை கவலை தரும் விடயமாகும் - என்றார்.(ச-30)

# மீனவரிடம் கடலுணவுகளை கொள்ளையிடும் கும்பல்!

## மூதூர் பொலிஸ் முறைப்பாடு

மூதூர், ஒக்.20

இரவு நேரங்களில் கடலுக்குச் சென்று வரும் மூதூர் மீனவர்களின் மீன்களையும் கடல் உணவுகளையும் கடந்த மூன்று நாள்களாக இனந்தெரியாத கும்பலொன்று பறித்துச் செல்கின்றது என்று மூதூர் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மீனவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு மீனவர்களால் மூன்று வள்ளங்களில் கொண்டுவரப்பட்ட சுமார் ஆயிரத்து 500 கிலோ நிறையுடைய கணவாயை அந்தக் குழு கத்தியைக்காட்டி மிரட்டி அபகரித்துச்சென்றுள்ளது என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறேமறுநாள் ஞாயிற்றுக் கிழமை இரவும் ஒரு வள்ளத்தில் கொண்டுவரப்பட்ட சுமார் 11 கிலோ அறக்குளா மீன்களையும் மற்றுமொரு வள்ளத்தில் கொண்டுவரப்பட்ட சுமார் 50 கிலோ பாரை மீன்களையும் இன்னுமொருவள்ளத்தில் கொண்டுவரப்பட்ட 30 கிலோ கணவாய்களையும் இனந்தெரியாத கும்பல் அபகரித்துள்ளது என்று மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் 119 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச)

# மாத்தளை மாவட்ட அபிவிருத்திக்கு சுமார் 62 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

மஸ்கெலியா, ஒக்.20

மாத்தளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இந்த வருடம் மேற்கொள்ளப் படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக சுமார் 62 கோடி 30 லட்சம் ரூபா நிதி கிடைத்துள்ளது என்று பிரதேச செயலாளர் அஜித் பிரேமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கிடைக்கும் இந்தநிதியின் ஊடாக வீதிகளுக்கு காப்பெற் இடுவதற்கு சுமார் 53 கோடி 70 லட்சம் ரூபாவும், விவசாய உற்பத்திகளைப் பெருக்குவதற்கு 2 கோடி 48 லட்சமும், சமுர்த்தி நிவாரண நிதிக்காக ஒரு கோடி 58 லட்சமும், கிராம அபிவிருத்திக்காக 4 கோடி 40 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தின்படி மேலும் 49 கோடி ரூபா நிதி மாத்தளை மாவட்டத்திற்கு கிடைக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, மாவட்ட அபிவிருத்திக் குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட வேலைத் திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# மொனராகலையிலிருந்து தென்னம் கன்றுகள்

பதுளை, ஒக்.20

பதுளை மாவட்டத்தில் பயிரிடுவதற்காக மொனராகலை விவசாய திணைக்களத்தின் நாற்று மேடையிலிருந்து 47 ஆயிரத்து 126 தென்னம் பிள்ளைகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது.

இதனடிப்படையில் பதுளை மாவட்டத்தின் எல்ல, ஹாலி எல, ரிதிமாலியத்த, கொவுன தோட்ட, மஹியங்கனை, பசறை, பதுளை, கந்தகெடி, மீஹாவுல, லுணுகலை, ஹல்துமுல்ல, ஊவா பறணகம போன்ற பிர தேச செயலாளர் பிரிவுக்கு தென்னம்பிள்ளைகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. (ச)



கல்முனை மாநகர சபையின் புதிய மேயர் எம். சிராஷ் மீராசாகிப் நேற்று உத்தியோக பூர்வ மாக மாநகர சபை அலுவலகத்தில் கடமைப்பொறுப்பை ஏற்று சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் குறிப்பு எழுதுகின்றார்.

# தலவாக்கலை சம்பவத்தில் நால்வருக்குப் பிணை; ஒருவர் விளக்கமறியலில்

தலவாக்கலை, ஒக்.20

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் உணவு ஒவ்வாமையால் மாணவர்கள் சுகவீனமுற்ற சம்பவம் தொடர்பில் மற்றொரு பாடசாலை அதிபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த நிகழ்வில் தமது பாடசாலை மாணவர்களையும் பங்கேற்கச்செய்த பாமஸ்டன் வித்தியாலயத்தின் அதிபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட ஐவர் கடந்த திங்கட்கிழமை நுவரெலியா நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டு நால்வர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதோடு ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தீபாவளி முற்பணமாக 10 ஆயிரம் ரூபா வழங்கக் கோரிக்கை

நுவரெலியா, ஒக்.20

தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக பத்தாயிரம் ரூபாவை வழங்க வேண்டும் என்று பெருந்தோட்டத்துறை அமைச்சின் தொழிலாளர்களுக்கான கண்காணிப்புக் குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மத்தியமாகாணசபை உறுப் பினரும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளருமான முரளி ரகுநாதன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தான் பெருந்தோட்டத்துறை தொழில் அமைச்சின் தொழிலாளர்களுக்கான கண்காணிப்புக்குழுவின் தலைவர் ராஜா பிரேமதாசவின் நேரடி கவனத்திற்கு கொண்டு சென்று பேச்சு நடத்தியுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# ஊவா கலவரத்தினால் கைவிடப்பட்ட தரிசான நிலங்களை பசுமையாக்க ஏற்பாடு

தியத்தலாவை, ஒக்.20

1818 ஆம் ஆண்டு ஊவா கலவரத்தின்போது கைவிடப்பட்டு தரிசாகிப் போய்க் கிடக்கும் நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கு மொனராகலை கமநலசேவைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக வெல்லவாய, பிபிலை, மொனராகலை போன்ற பிரதேசங்களிலுள்ள சுமார் 200 ஹெக்ரேயர் விஸ்தீரணம் கொண்ட தரிசு நிலங்களை செப்பனிட்டு மீண்டும் வயல் நிலங்களாக மாற்றியமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, கஹம்பாகே, ஆராவ, உடுமுல்லகுளம், ரன்கொக்குளம் போன்ற குளங்களை திருத்தியமைப்பதற்கு சுமார் ஒருகோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எம்.பீ.அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ச)

# பரிந்துரையின்றிய இடமாற்றங்கள் செல்லுபடியாகா

இரத்தினபுர, ஒக். 20

சப்ரகமுவ மாகாண கல்வியமைச்சு செயலாளரின் பரிந்துரை இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட சகல இடமாற்றங்களும் செல்லுபடியாகா - என்று மாகாணசபையின் பிரதம செயலாளர் ஹேரத் பீ.குலரத்ன தெரிவித்துள்ளார்.

சில வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரியர்களுக்கு இடமாற்றக் கடிதங்களை அனுப்பியுள்ளனர். அத்தகைய கடிதங்களில் மாகாணசபைக் கல்வி அமைச்சு செயலாளரது பரிந்துரை இல்லாவிட்டால் அவற்றை சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
எண்ணிய விடயங்கள் எண்ணம் போல் நிறைவேறும் நாள். அயலவர்களுக்கு உதவி செய்ய முற்படுவீர்கள். பிள்ளைகளின் பிடிவாதத்தை மாற்ற அவர்களுக்கு நல்ல அறிவுரைகள் சொல்வீர்கள். விருந்து, விசேஷங்களால் சந்தோஷம் உண்டு.

**இடபம்:**
சுறுசுறுப்பாகத் துவங்கிய சில வேலைகள் பாதியில் நின்றுவிடலாம். தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். மறதியால் அவதிகளுக்கு ஆள்படலாம். சிலரிடம் சாதுவாகப் பேசி வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். நேரம், காலம் பார்த்து சில விடயங்களைச் செய்வீர்கள். சிலர் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள்.

**மிதுனம்:**
பணவரவுகள் திருப்தி தரும் நாள். உறவினர்களுடன் ஏற்பட்ட பகை மாறும். நண்பர்களால் சுபச் செலவுகள் உண்டு. சொந்தங்களுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத் தீர்த்து வைக்க முற்படுவீர்கள். அதிக நாள்களாகச் செல்ல நினைத்த ஒரு இடத்திற்குச் செல்லலாம். சிலர் உங்களிடம் தங்களின் இரகசியங்களைச் சொல்லலாம்.

**கடகம்:**
காலை நேரத்தில் அதிக அலைச்சல்களைச் சந்திக்கலாம். வீடு, நிலம் தொடர்பான விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள். பொதுவாழ்வில் உள்ளோருக்கு செல்வாக்கு அதிகரிக்கும். தொழில் ரீதியாகச் சிலருக்கு உதவி செய்யும் சூழ்நிலை உருவாகும். மனதிற்குப் பிடித்த வகையில் சில விடயங்கள் நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம்.

**சிங்கம்:**
கலகலப்பான அனுபவங்களால் கவலைகளை மறக்கும் நாள். வீண் பழிகளால் ஏற்பட்ட தொல்லைகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். எதிர்பார்த்த கடனுதவிகள், நிதியுதவிகள் கிடைக்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். இதுவரை உங்கள் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம்.

**கன்னி:**
தைரியமான செயல்பாடுகளால் சாதனை படைக்கும் நாள். தொல்லை கொடுத்த சிலர் தோள் கொடுக்க முன்வருவர். அலைச்சல் இல்லாமல் இருந்த இடத் தில் இருந்தே சில வேலைகளை முடித்துக் கொள்வீர் கள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்க நேரிடலாம். தொழில் ரீதியாக புதிய விடயங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**துலாம்:**
நினைத்த விடயம் வெற்றி பெற புத்திசாலித்தனமாகவும், பொறுமையாகவும் செயல்பட வேண்டும். குடும்பப் பெரியவர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் விலகி பாசம் அதிகரிக்கும். எதிர்பாராத வகையில் முக்கிய நபர் ஒருவரைச் சந்திக்கலாம். சிலர் உங்களின் செயல்பாடுகளில் சந்தேகம் கொள்ளலாம். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**விருச்சிகம்:**
கோபம், வேகத்தைக் குறைக்க வேண்டிய நாள். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். சில விடயங்களில் தெரியாமல் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். கடனாக வாங்கிய பணம் ஒன்றை உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். மன ரீதியான உளைச்சல்களுக்கு ஆட்படலாம். மறதியால் அவதியுண்டு.

**தனுசு:**
தொலை பேசி வழியில் உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காக காத்திருக்கலாம். மதிப்பு, கௌரவம் பார்த்து சில விடயங்களைச் செய்வீர்கள். பிள்ளைகளுக்காக, குடும்பத்தினருக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். உறவினர்களிடம் உங்களின் பெருமைகளைப் பேசுவீர்கள்.


**மகரம்:**
குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் சிலரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று கைக்குக் கிடைக்கும். அதிக செலவாகும் என நினைத்த வேலை ஒன்று குறைந்த செலவில் முடியலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

**கும்பம்:**
சகோதரிகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். பிள்ளைகள் வழியில் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உங்களைச் சிலர் தங்களின் வழிக்கு இழுக்க முற்படுவார்கள். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம். சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களுக்கு ஆட்படலாம். வீண் பயம் உண்டாகும்.

**மீனம்:**
மனக்குழப்பங்களை உருவாக்கிய விவகாரங்கள் முடிவுக்கு வரும். சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். முக்கியமான விடயங்களில் உறவினர்கள் சிலரின் யோசனை கேட்டு நடப்பீர்கள். தப்பான காரியம் ஒன்றைச் செய்ய முற்பட்டு, அதனால் குழப்பம் அடையலாம். வீண் செலவு உண்டு.

# ஈழம் சிறையில் வெளியே

**அருட்தந்தை சூ.ம.ஜெயசீலன் தமிழ் நாட்டைச்சேர்ந்தவர். கடந்த 13.07.2011 தொடக்கம் 15 நாள்கள் ஈழத்தில் தங்கி இருந்தார். அருட்தந்தை அவர்கள் ஏற்கனவே பல்வேறு புத்தகங்களை வெளியிட்டுள்ளார். அத்துடன் தமிழ் நாட்டில் தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழ் அகதிகளின் நல்வாழ்வுக்காகப் பல ஆண்டுகள் களப்பணி செய்துள்ளார். அவரது பயண அனுபவத்தை இங்கே பதிவுசெய்கின்றார். குரலடக்கப்பட்டுப்போன தேசத்தின் உணர்வுகளை கொட்டிவிடும் வரிகள் இனி........**



கைவிடப்பட்ட நிலையில் காங்கேச

கடந்த ஜூலையில் உள்ளூராட்சித் தேர்தலை அறிவித்ததில் அரசுக்கு ஓர் உள்நோக்கம் இருந்தது.

இந்தத் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற வெறியுடன் அரசு செயற்பட்டது. தமிழர்கள் எப்படியும் தம்மையும் தம் கொலைக்கும்பலையும் சர்வதேசத்தின் கழுகுப்பார்வையில் இருந்து பிணை எடுப்பார்கள் என்ற கற்பனைக் கனவுகளுடனும் டக்ளஸ் தேவானந்தாவும் ராஜபக்ஷவும் சுற்றிச் சுற்றிச் செயலாற்றினார்கள். அபிவிருத்திக்காக இணைந்த கரங்கள் என்ற சுவரொட்டிகள் எங்கும் இருந்தன. உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுகின்றோம், சாலைகளை மேம்பாடு செய்கின்றோம், சாலைகளைத் திறந்து விடுகின்றோம், மீள் குடியமர்த்துகின்றோம் என்று சொல்லி பிரசாரத்தை ஆரம்பித்தவர்கள் ஒவ்வொன்றுக்கும் விழா எடுக்க ஆரம்பித்தார்கள்.

புதிது புதிதாகக் கட்டடங்களையும் திறக்க ஆரம்பித்தார்கள். கட்டடம் திறப்பதில் எந்த அளவுக்கு ஆர்வமாக இருந்தார்கள் என்றால். ஒரே கட்டடத்தை ஒரே நாளில் மூன்று பேர் அடுத்தடுத்து திறந்து வைத்தார்கள். நல்லூர் தமிழ் கலவன் பள்ளிக்கூடத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா ஜூலை 16ஆம் திகதி நடைபெற்றது. மு.ப 10.30 மணிக்கு அரச நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

பின்னர் ஒருமணிநேர இடைவெளியில் அங்கு அமைச்சர் ஹிஸ்புல்லா வந்தார். அமைச்சரின் ஆதரவாளர்கள் மீண்டும் நாடாவைக் கட்டும்படி வற்புறுத்தினர். அதன்படி அக்கட்டடத்தை நாடா வெட்டி அமைச்சர் திறந்து வைத்தார். இவை முடிந்து சிறிது நேரத்தில் பிரதி அமைச்சர் முரளிதரன் அங்கு வந்தார். மீண்டும் நாடா கட்டப்பட்டது. மூன்றாவது முறையாகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

அந்த நாள்களில் செய்தி ஆசிரியர் ஒருவர் ஒரு தினசரியில் இது தொடர்பான தனது கவலையை பதிவு செய்திருந்தார்.

எனது நண்பர் ஒருவர் புது வீடு கட்டி முடித்த பிறகு அதன் கூரையில் ஒரு பகுதியை பிரிந்து தரையில் வைத்துவிட்டார். ஏன் எனக் கேட்ட பொழுது, புதுக் கட்டடம் என இதையும் திறப்பதற்கு வந்துவிட்டால் என்ன செய்வது?

கட்டடத் திறப்பு விழா இப்படி என்றால் மீள் குடியமர்வு எப்படியானது என்பது இன்னும் சுவாரசியமானது.

1991ஆம் ஆண்டுவாக்கில் சிங்களவர்களால் வசந்தம் வீசிய கிராமங்களான வலித்தூண்டல், கீரிமலை, மாவிட்டபுரம் பகுதிகளிலிருந்து தமிழர்கள் இரத்தத்தோடும் காயங்களோடும் அடித்து விரட்டப்பட்டு 20 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இப்போது அப்பகுதியில் மீள்குடியமர்வுக்கு மக்கள் வரலாம் என அனுமதி வழங்கியிருக்கிறது அரசு.

நாங்கள் அவ்விடத்தைப் பார்ப்பதற்குப் போனோம். ஆண்டுகள் 20 ஆனபிறகும் இன்னும் தனது அழிபாடுகளை ஆதாரமாகச் சுமந்துகொண்டு பல்வேறு கட்டடங்கள் நின்று கொண்டிருப்பதையும் உயிர்களின் வேதனையைச் சுமந்திருப்பதையும் பார்த்தபடி சென்றோம். வசந்தகிராமத்தில் கடற்கரையை பார்த்தபடி மீனவர்களுக்குப் பாதுகாப்பாகவும் மீனவர்களுக்கு ஒளிவிளக்காகவும் இருந்த புனித அந்தோனியார் ஆலயம் சிதைக்கப்பட்டுள்ளது.

காயப்பட்ட அந்தோனியாரும், கரங்கள் சிதைக்கப்பட்ட சிலுவையில் அறையுண்ட இயேசுவும் இன்னும் சாட்சியாக நின்று கொண்டிருக்கின்றார்கள். கொஞ்சத் தூரம் சென்றால் வலித்தூண்டல் இருக்கின்றது. இங்கே இருக்கும் புனித அன்னாள் ஆலயம் குண்டுகள் பட்ட காயங்களுடன் அழிவுகளின் மொத்த உருவமாகக் காட்சி அளிக்கின்றது. குண்டுக் காயங்களுடன் புனித அன்னாள் இன்றும் கடற்கரையோரத்தில் வீற்றிருக்கின்றாள்.

பிறகு வருவது கீரிமலை. இங்குள்ள நகுலேஸ்வரம் கோயில் இலங்கையின் பிரசித்தி பெற்ற நான்கு ஈஸ்வரங்களில் ஒன்றாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவில் இருந்து வருகை தந்த விஜயன் என்னும் அரசனால் இது புதுப்பிக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

ஆனால் இந்த ஆலயமும் இராணுவ தாக்குதலிலிருந்து தப்பியதாகத் தெரியவில்லை. தொடர்ந்து பயணித்தால் மாவிட்டபுரம் வருகின்றது. இதன் அருகில்தான் பலாலி விமானத் தளமும் இருக்கின்றது. மாவிட்டபுரத்தில் புகழ்பெற்ற கந்தசுவாமி கோயில் இருக்கின்றது. இந்த புகழ்பெற்ற கோயிலின் தேரை சிங்களவர்கள் எரியூட்டி அழித்தார்கள். அழித்ததன் அடையாளமாக அத்தேரின் அடிப்பகுதி மட்டும் இன்னமும் இருக்கின்றது.

வழிபாட்டுத் தலங்களுக்கே இப்படியென்றால் மக்களின் வாழ்விடத்தின் கொடுமையை நாம் உணர்ந்து கொள்ளலாம். உள்ளூராட்சி வீடமைப்பு பிரதி அமைச்சரால் 1983 ஜூன் 2 ஆம் திகதி 80 வீடுகள் கொண்ட வசந்த கிராமம் திறக்கப்பட்டது. இன்று அதற்கான தகவல் கல் மட்டும் இருக்கின்றது. ஊர் அங்கு இல்லை.

இப்போதுதான் நோர்வே அரசின் நிதி உதவியுடன் சமூக வீடமைப்பு, வாழ்வாதாரம், சமூக உட்கட்டுமானம் என்ற பிரிவின் அடிப்படையில், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் நிலைமாற்றல் நிகழ்ச்சித் திட்டம் என்பதன் அடிப்படையில் ஐம்பது வீடுகள் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கியுள்ளன.


வலித்தூண்டலில் அரசு சார்பில் 15 வீடுகள் மீள்குடியேற்றம் என்ற பெயரில் கட்டி முடிக்கப்பட்டது. ஒரே வாரத்தில் இராணுவ வீரர்களால் கட்டி முடிக்கப்பட்ட இந்த வீடுகள் அனைத்தின் தரமும் இப்போதே தெரிய ஆரம்பித்து விட்டது.

இந்த வீடுகள் ஜூலை மாதம் 18ஆம் திகதி ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டன. இதற்கு முந்தைய நாள்கள் அவ்வழியே பயணித்தபோது கண்ட காட்சிகள் மிகவும் கேவலமான அரசியல் தந்திரமாகும்.

ஒரு வீட்டின் முன்பகுதி சிமெண்ட் வைத்து பூசப்பட்டிருந்தது. அதன்மேல் வர்ணமும் அடிக்கப்

# ...பிருந்து ...பறினேன்

2



...சன்துறை சீமெந்து தொழிற்சாலை

பட்டிருந்தது. ஆனால் அவ்வீட்டின் பின் பகுதியில் எந்தவித பூச்சும் பூசப்படவில்லை. ஆனால் சுண்ணாம்பு கொண்டு வர்ணம் பூசிவீட்டை அழகு படுத்தினார்கள். அதைவிட மோசமானது அப்பகுதி யில் 20 வருடங்களாக சாட்சியாக நின்று கொண்டிருக்கும் வீட்டை சுற்றி பச்சைநிற தகரங்களை வைத்து மறைத்து விட்டு வீட்டின்மேலே மரக் கிளைகளை வெட்டிப் போட்டிருந்தார்கள்.

அப்போதுதான் நிழற்படம் எடுக்கும்போது பசுமையாகத் தெரியுமாம். மேலும் 2500ரூபாய் தருகின்றோம் என டோக்கன் கொடுத்து அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி வந்ததும் நடந்தது.

மாவிட்டபுரம் அருகே மிகப்பெரிய சிமெந்து ஆலை இருக்கிறது. ஒரு காலத்தில் இலங்கை முழுமைக்குமே சிமெந்து உற்பத்தி செய்து கொடுத்த ஆலை இது. காரணம், சிமெந்து உற்பத்திக்குத் தேவையான கனிமங்கள் இப்பகுதியில் அமுத சுரபியாகக் கிடைக்கின்றன.

ஆனால் இன்று இந்த ஆலை பூட்டப்பட்டிருக்கின்றது. இங்குள்ள வளங்கள் வெட்டி எடுக்கப்பட்டு துகள்களாக்கப்பட்டு புத்தளத்திலுள்ள சிமெந்து ஆலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இடத்தை மேம்படுத்துவதற்கான எந்த முன்னெடுப்பையும் மேற்கொள்ளாமல், அடிப்படைத் தேவைகளுக்குக் கூடப் பல கிலோமீற்றர் செல்ல வேண்டிய சூழலில் மீள்குடியமர்வு நடைபெறுகின்றது.

முழங்காவில் பகுதியிலும் உலக நாடுகளின் உதவியுடன் வீடுகட்டி மீள்குடியமர்த்தும் பணி நடைபெற்று வருகின்றது. 26அடி நீளம் 23அடி அகலத்தில் 106 வீடுகள் கட்டப்படவுள்ளன. இந்த உரிமைகளைப் பெறுபவர்கள் தாங்களாகவே வீடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

மூன்று தவணைகளாக வங்கி மூலமாக பணம் கொடுக்கப்படும். ஓகஸ்ட் 3 முதல் பணம் கிடைக்கும் எனக் கருத்துத் தெரிவித்தவர்கள் சொன்ன இன்னொரு தகவல், வீடு கட்டுவதற்கு முழங்காவில் கற்களை பயன்படுத்தக் கூடாதாம். அதில் தரம் இல்லையாம். வவுனியாவிலுள்ள அவர்களது கற்களைத்தான் பயன்படுத்த வேண்டுமாம். இவ்வீடுகள் எல்லாம் ஒரே மாதத்தில் கட்டி முடிக்க வேண்டுமாம்.

இன்னும் சில இடங்களில் 6 தகரங்கள் மட்டும் கொடுத்து விட்டு அதில் வீடு கட்டி கொள்ளுங் கள் என்கின்றார்கள். சிங்களவர்களுக்கு வீடுகளின் நிலைத்தன்மை பற்றியெல்லாம் கவலையில்லை. இடையிடையே நலன்புரி முகாமிலிருந்து வெளியேறியவர்கள், கடைசிக் கட்டப் போரின் கோரத்தைக் கண்டவர்கள், உறவுகளைத் தொலைத்தவர்கள், கணவனையோ, மனைவியையோ, தாயையோ தந்தையையோ சிங்களவனின் குண்டுகள் அழித்ததை நேரிலே பார்த்து கதறித் திரிந்தவர்கள், தடுப்பு முகாமிலிருந்து வந்தவர்கள், கடைசிவரை ஆயுதம் ஏந்திவிட்டுக் காயப்பட்டு வந்தவர்கள் எனச் சிலரைப் பார்த்துப் பேசக்கிடைத்தது.

நான் தமிழ்நாட்டிலிருந்து வருகின்றேன் என்றதும் விரக்தியோடுதான் நோக்கினார்கள். உலகத் தமிழர்களின் தலைவர் எனத்தன்னைத்தானே புகழ்ந்து கொண்டு எம் இனத்தையே அழித்தொழித்தவர் கருணாநிதி என்று பொங்கினார்கள். அவர்களது உதடுகளும், கரங்களும் நடுங்கின. தனது மகனுக்கு அமைச்சர் பதவி வேண்டி விமானம் ஏறியவர் மீதான கோபத்தையும் பாதிப்புக்களையும் காட்டுவதாக அது இருந்தது. எனது பயணம் முடிந்து மீண்டும் கொழும்பு நோக்கித் திரும்பினேன். அதே ஓமந்தை சோதனைச் சாவடி. பேருந்து நிறுத்தப்பட்டது. இம்முறை உள்ளே வந்த படையினன் எங்களது அடையாள அட்டைகளை கேட்கவில்லை. மாறாக அனைவரும் கையிலுள்ள அல்லது பேருந்தின் பின்புறம் வைத்துள்ள சுமைகளுடன் வாருங்கள் என்று சொல்லிச் சென்றான்.

அனைத்தையும் எடுத்துக்கொண்டு அவன் பின்னே சென்றோம். அங்கே நின்ற மற்ற வீரர்கள் அனைத்தையும் திறந்து காட்டச் சொன்னார்கள். அனைத்துப் பைகளையும் பெட்டிகளையும் திறந்து காட்டினோம். அவனுக்கு திருப்தி ஏற்பட்டிருக்க வேண்டும் எங்களை விட்டுவிட்டான். மீண்டும் அனைத்தையும் எடுத்து கொண்டு பேருந்தை நோக்கிப் பயணித்தோம்.

ஒரே தேசத்தில் மற்றொரு பகுதி இராணுவத்தின் இரும்புப் பிடியில் இருப்பதையும், ஆனால் உலகனைத்திற்கும் இந்த உண்மை மறைக்கப்பட்டு வருவதனையும் கண்ணாரக் கண்டு வந்தேன். நலன்புரி முகாங்களும் தடுப்பு முகாம்களுமே உலகின் கவனத்துக்கு வந்துள்ள வேளையில் திறந்தவெளிச் சிறைச்சாலையில் எம் ஈழத்தமிழர்கள் ஈடு இணையற்று துயருறுவதையும் பார்த்து வந்தேன். சுதந்திரத்தின் அருமையையும் நான் உணர்ந்து வந்தேன்.



வசந்த கிராமம் புனித அந்தோனியார் ஆலயம்

# பிரச்சினை வந்தால் எப்படி அணுகலாம்



''வீட்டுக்கு வீடு வாசல்படி'' ''குடும்பம் என்றால் ஆயிரம் இருக்கும்'' என்றெல்லாம் சில அனுபவம் அறிவுரைகள் இருக்கின்றன. பிரச்சினைகள் இல்லாத வீடே இருக்க முடியாது என்பதுதான் உண்மை. ஆனால் பிரச்சினைகளை ஒரு குடும்பம் எப்படி எடுத்துக் கொள்கிறது என்பதனை பிரச்சினை வரும்போது குடும்ப உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பது முக்கியமான விஷயம்.

உதாரணமாகச் சொல்கிறேன். ஒரு குடும்பத்தில் நடக்கக் கூடாத ஒன்று நடந்துவிட்டது... அதை எப்படி எல்லோரும் அணுகிறார்கள். தவறுலாக இளம்பெண் தவறுவிட்டால் அந்தப் பிரச்சினை கத்தி ஆர்ப்பாட்டம் செய்து ஊரெல்லாம் தெரியும்படி இளம்பெண்ணை அம்பலப்படுத்தி அவளது எதிர்கால வாழ்வை முற்றிலும் சிதைப்பது சரியா?

பிரச்சினைகளை அறிவு பூர்வமாக அணுகுவது அவசியம் என்றே எனக்குத் தோன்றுகிறது.

அன்பு, பாசம், பந்தம் என்பவை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அறிவு, தெளிவு, துணிவு. உதாரணம் சொல்கிறேன். கொடிய விமான விபத்தில் பலர் காலமானார்கள். அந்த விமானத்தில் பயணம் செய்த ஆண் ஒருவர் தன் மனைவியை விதவையாக்கிவிட்டு மாண்டார். பெண் ஒருத்தி தன் கணவனைத் தவிக்க விட்டுவிட்டு மாண்டார். இரண்டு குடும்பங்களும் அழுது துடித்தபோது பூமியில் அழுதபடி துணையின்றி இருந்த மனைவியையும்,கணவனையும் இணைத்து மறுதிருமணம் செய்து புதிய குடும்பத்தை உருவாக்கினார்கள்.

இந்தத் துணிச்சல் எத்தனை குடும்பங்களுக்கு வரும்? இப்படி நடந்தால் அன்றைய பந்தம், பாசம் பொய்யாகி விடாது. கற்பு எதுவும் காலாவதியாகி விடாது! வாழ்வில் உணர்ச்சி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு அறிவும் முக்கியம். இப்படி முடிவெடுக்க எத்தனை குடும்பங்கள் தயார்?

என் நண்பன் ஒருவர்.... மகன் மரணமடைந்தபோது மருமகளை விதவையாக்க மனம் வராமல் தன் அடுத்த மகனுக்கு மணம் முடிதுவைத்து புதுவாழ்வு கொடுத்து மருமகளை மகளாகக் கருதி வாழ வைத்தார். அவரது மனைவி ஆரம்பத்தில் இதற்குச் சம்மதிக்கவில்லை. நண்பர் தன் மனைவிக்குப் பலவகையில் எடுத்துரைத்து மருமகளைத் துயர வாழ்வில் இருந்து மீட்டார். இந்த அணுகுமுறை எத்தனை குடும்பங்களில் இன்று இருக்கிறது?

ஒரு மிகப்பெரிய பணக்காரக் குடும்பத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்று. ஆறு பிள்ளைகள் உள்ள பெரிய குடும்பம் அது அம்மா உயிரோடு இருந்தார்; தந்தை இல்லை. ஆறாவது மகனுக்குத் திருமணம் முடிந்து ஒருவாரம் கூட ஆகவில்லை இறந்துவிட்டான். மருமகளோ ஏழை.

எல்லோரும் வந்தவளைச் சபித்தார்கள். அவள் எதிர்காலம் பற்றி எவரும் கவலைப்படவில்லை. அந்த ஏழைப் பெண்ணின் பெற்றோரும் மகள் விதவையானாலும் மருமகன் சொத்து வருமே என்று மகளை விதவையாக்கிப் பார்க்கத் தயாரானார்கள்.


ஆனால் அந்த ஆறு பிள்ளையைப் பெற்ற அன்னை; கணவன் அற்று வாழும் அந்தப் பெண், மகனைப் பிரிந்த சோகத்தில் அழுதாள். ஆனால் அழுகையோடு நிறுத்தவில்லை. மருமகளை அழைத்து சொன்ன வார்த்தைகள் ''இன்றைக்குப் பணத்துக்கு ஆசைப்பட்டு விதவையாகத்தான் வாழ்வேன் என்று அடம் பிடிக்காதே; பணம் முக்கியமில்லை; வாழ்க்கை தான் முக்கியம்.

''நீ சிறியவள்; உனது உறவுகள் எல்லாம் பணத்துக்காக உன் வாழ்க்கையை வீணாக்க எண்ணுகிறார்கள். நான் ஐந்து லட்சம் தருகிறேன். உனக்கும் இந்தக் குடும்பத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று எழுதிக்கொடுத்துவிட்டு போய் வேறு ஒருத்தனை திருமணம் செய்து நிம்மதியாக இரு. ஆனால் கலியாணம் செய்து விட்டு என் முன்னால் வந்து நிற்காதே. அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தி எனக்கு இல்லை. இந்த வயதிலும் புருசனில்லாமல் அவமானப்பட்டு வாழ என்னால் முடியவில்லை. நீ அப்படி மாட்டிக்கொள்ளாதே'' என்றாராம்.

அந்த அம்மா படிப்பறிவில்லாதவர்தான். ஆனால் அவர் ஒரு பல்கலைக்கழகம். பெண் விடுதலைக்காகப் போராடிய ராஜாராம், மோகன் ராய், தந்தை பெரியார், பாரதி எல்லோரையும் விட பெரிய போராட்டக்காரியாகத் தோன்றுகிறார் மகனை இழந்து உணர்ச்சிவசப்பட்டாலும் அறிவை இழந்துவிடக் கூடாது என்று கவனமாக நடந்துகொண்ட அரிய பெண்மணி அவர்.

சுகி. சிவ...

சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வகம் நிறுவனத்துக்கு வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் குமாரவேலு வாழ்வகத் தலைவர் ரவீந்திரனிடம் ஒரு தொகுதிப் பணத்தை வழங்குகிறார். (ம—86)




# பார்வையற்றவர்களுக்கும் சமூகத்தில் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்

## விழிப்புலன் அற்றோர் சங்கத்தின் முன்னாய்வுத் தலைவர்

யாழ்ப்பாணம், ஒக்.20

பார்வையற்றவர்களுக்கும் சமூகத்தில் அந்தஸ்து வழங்கப் படவேண்டும். அவர்களை வீடுகளுக்குள் வைத்து வீணே முடக்கிவிடக் கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் விழிப்புலன் அற்றோர் சங்கத்தின் முன்னாய்வுத் தலைவர் எஸ்.சிவகுமார்.

லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யுத்த அனர்த்தங்களாலும், விபத்துக்களாலும், பார்வை இழந்தவர்கள், அங்கவீனமடைந்தவர்கள் ஆகியோரை வீடுகளில் முடக்கிவிடக் கூாது.

அவர்களை விழிப்புலனற்றோர் சங்கங்களில் இணையுங்கள். இவர்களுக்கு வேண்டிய கல்வி, தொழில் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு தயாராக உள்ளோம்.

பார்வை அற்றவர்கள் கல்வி ஓரளவு போதும் என்றநிலையில் படித்துவிட்டு வீடுகளில் முடங்கி விடுகின்றனர்; சிலர் முடக்கப்பட்டு விடுகின்றனர்.

ஆரம்ப காலங்களில் எமது சங்கத்துக்குப் போதிய நிதி உதவி, கணினிப் பற்றாக்குறைகள் நிலவின. தற்போது எமது விழிப்புலன் அற்றோர் சங்கத்துக்கு லயன் கழகத்தினர் போன்ற ஏனைய கழகங்கள் மற்றும் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி களும் கிடைக்கின்றன.

பொருளாதார வசதிகள், இட வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். இவ்வாறான உதவிகள் கிடைப்பதாலும், சங்கத்தில் உள்ளவர்களின் கல்வி முயற்சியாலும், யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் 25 பேர் தெரிவாகி பட்டதாரிகளாக வெளியேறி உள்ளனர். இவற்றில் சிலர் தொழில் புரிந்தும் வருகின்றனர்.

தற்போது 9 பேர் யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கான பொதுப் பரீட்சைகள் யாவும் கொழும்பில் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் 1976 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி 18 அங்கத்தவர்களுடன் ஆரம்பித்ததுக்கப்பட்டது விழிப் புலன் அற்றோர் சங்கம். இலங்கையில் தமிழ் பேசும் மக்களுடைய விழிப்புலன் அற்றோருக்காக ஆரம்பிக்கப்பட்டது இந்தச் சங்கமாகும்.

அன்றைய காலத்தில் பல இடையூறுகளைச் சந்தித்தது. கல்வி வசதிகளைக் கூட சாதாரணதரம் வரையில் மட்டும்தான் பெறக்கூடியதாக இருந்தது.

பின்னர் சங்கத்தின் முயற்சியாலும், ஏனைய கழகங்கள், நிறுவனங்களின் உதவியாலும் ஒரு முகப்படுத்தப்பட்ட கல்வி முறை ஏற்படுத்தப்பட்டது. இன்று இயலுமானவரையில் அனைவரும் கல்வி பயிலலாம் என்ற நிலையில் உள்ளது.

வீட்டுச் சூழலில் விவேகமற்ற நிலையில் இருப்பதை விட அனைத்து விழிப்புலன் அற்றோரையும் சங்கத்தில் இணைத்து விடுவதன் மூலம் அவர்களின் எதிர்காலம் பயனுள்ளதாக அமையும்-என்றார். (ம-311)

# வரலாறுகளையும் சம்பிரதாயங்களையும் மாக்சியவாதிகள் என்றும் நிராகரிப்பதில்லை

யாழ்ப்பாணம், ஒக்.20

வரலாறுகளை ஒருவன் கைவிட்டால் அல்லது மறுத்தால் அவன் கலாசாரத்துக்கு பிச்சைக்காரன் ஆகிறான்.

மாக்சியவாதிகள் வரலாறுகளையும் சம்பிரதாயங்களையும் என்றும் நிராகரிப்பதில்லை.

இவ்வாறு தெரிவித்தார் பாணினி விஜய சிறீவர்த்தன.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைவட்டம் மற்றும் நுண் கலைத்துறையின் ஏற்பாட்டில் 'மாக்சிய வாதமும் அழிகியலும்' எனும் தொனிப்பொருளில் கருத்துரை ஒன்று யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடக் கட்டடத் தொகுதி யில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புறநிலை வரலாற்றுப் போக்கு கலை, குறிப்பிட்ட சில கலைப் படைப்புக்கள் முற்றிலும் சுயாதீனமாக அமைந்திருக்கும்.

முக்கியமான கலைகள் விதியையும் பண்பையும் அடிப்படையாகக் கொண்டவை. யுத்தமும் சமாதானமும், அதில் துக்கங்களை அம்பலப்படுத்தும் கவிதைகளும் உள்ளன.

ஒரு கலைஞனால் கலைகளை அகநிலை, புறநிலை ஆகிய 2 கலைப் படைப்பால் வெளிப் படுத்தப்படும். புறநிலையானது கருத்தியலில் வேறுபடாதது, புறநிலை உண்மை இயல்பாக வெளிப்படுவது, மாக்சியத்தில் புறநிலை 2 வகைப்படும். கலைத்துவம் சமூக விஞ்ஞானமாகும்.

கலைத்துவமானது புறநிலை உண்மையை வெளிப்படுத்துவது, நூலின் கலைத்துவம், எந்த ஒரு விடயத்தையும், பார்க்க கேட்க, சிந்தனையைத் தூண்டுகிறதோ அதுவே கலை ஆகும்.

முதலாம் உலகப்போர் முடிந்த காலப்பகுதியில் 1916 ஆம் ஆண்டு ரஷ்யாவில் உலக முதலாளித்துவத்துக்கு எதிராக மாக்சியவாதிகள் குரல் கொடுத்தனர். இளம் சந்ததி படைத்த எதிர்வாதிகள் 'நூலகராக்கைகளுக்கு தீயிடுங்கள், நூதன சாலைகளை கழிவித்தீருங்கள்'' என்று எதிர்வாதிகள் கூறுவார்கள்.

மாக்சியவாதிகள் வரலாற்றையும் சம்பிரதாயத்தையும் நிராகரிப்பதில்லை. ரஷ்யாவில் முதலாளித்துவ வர்க்கம் நில பிரபுத்துவ அமைப்பு முறை, ஆணடிமை போன்றவற்றை தமக்காக தமக்குரிய கலாசாரமாக ஆக்கிக் கொண்டவர்.

கலைகள், விஞ்ஞானம் இடையில் ஒற்றுமையானது வாழ்க்கையை கற்றுணர்வது மட்டும் இரண்டுக்குமிடையில் அதிக வேறுபாடுகள் உண்டு.

விஞ்ஞானமானது, நியூட்டனின் 3 விதிகளைக் கொண்டு தான் நகர்கிறது. அறிவை இலக்காகக் கொண்டது. சிந்திக்க வேண்டும். அத்தோடு அவற்றை விதிகளை அடிப்படையாகக் கொண்டு நிரூபிக்க வேண்டும்.

கலையானது பலவிடயங்களை ஒன்றிணைத்து நுண் உணர்வையும் இப்படி இருக்க வேண்டும் என சுட்டிக் காட்டுவதோடு மக்களுக்குத் தெரியாத பண்புகளையும் வெளிப்படுத்துவதாகும் -என்றார். (ம-311)

# சிறுவர் தின கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.20

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ''நாட்டைக் காப்பது போன்று எங்களதும் உங்களதும் சிறுவர்களையும் நாம் பாதுகாப்போம்'' என்ற கருப்பொருளில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

**கவிதைப் போட்டி**

கீழ்ப்பிரிவு - அ.அனோஜன் (கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை), மா.கீர்த்திகா (கிளி/முகாவில் அ.த. க.பாடசாலை), சமீரா சந்திரன் (கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம்).

**கவிதைப் போட்டி**

கீழ்ப்பிரிவு - சிவனேசன் சிந்துஜன் (கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை), அ.அப்யூட் (கிளி/பளை றோ.க.த.க பாடசாலை), லோஜினி கங்கேஸ்வரன் (கிளி/முருகானந்தா மகா வித்தி).

**கட்டுரைப் போட்டி**

மத்திய பிரிவு -ந.ஹோபிகா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), ச.மஜிதா (கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), வி.திசாந் (கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம்).

**கவிதைப் போட்டி**

மத்திய பிரிவு - தி.ஜெயீனா (கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை), ச.சர்வன் (கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), வி.டிசாளினி (கிளி/ முருகானந்தா மகா வித்தியாலயம்).

**கட்டுரைப் போட்டி**

மேல்பிரிவு- செ.டிலக்சனா (கிளி/வேரவில் மகா வித்தியாலயம்), மு.அனிசா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), ஆ.சுகிர்தா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்).

**கவிதைப் போட்டி**

மேல்பிரிவு- ஸ்ரீ.பாமிஷா (கிளி/ முருகானந்தா மகா வித்தியாலயம்), செ.லோஜ் (கிளி/அக்கராஜன் மகா வித்தியாலயம்), இ.தர்ஷா (கிளி /முருகானந்தா மகா வித்தியாலயம்). (ம)

## விரைவு கணிதப் போட்டியில் முதலிடம்



விரைவு கணிதப்போட்டியில் ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 3 மாணவன் ந.தனராஜ் மாகாண மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். (ம)

## கண்டாவளைக் கோட்ட வாய்பாட்டு மனனப் போட்டி முடிவு

கிளிநொச்சி, ஒக்.20

தரம் 3 - (கிளி/பிரமந்தனாறு ம.வி), க.சாருகானன் (கிளி/முருகானந்தா ஆ.வி), ற.சர்மிலன் (கிளி/தம்பிராசபுரம் அ.த.க).

தரம் 4 - சு.வனுஜா (கிளி/பிரமந்தனாறு ம.வி), ர.துவாரகன் (கிளி/பரந்தன் இ.ம.வி), இ.சாணுஜா (கிளி/முருகானந்த ஆ.வி).

தரம் 5 - மு.கனிஸ்ரன் (கிளி/தர்மபுரம் ம.வி), ச.சதுர்ஷிகன் (கிளி/பிரமந்தனாறு ம.வி), நா.சமர்வாணன் (கிளி/முரசுமோட்டை அ.த.க.), சௌ.சரணியா (கிளி/கல்மடு நகர் அ.த.க.). (ம-405)

## மாணவரிடையே கட்டுரைப் போட்டி

வடமராட்சி, ஒக்.20

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் கலாசார அமைச்சின் அனுசரணையுடன் யூ. ஆர். நண்பன் நிறுவனம் கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளது.

தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புக்களில் கற்கும் மாணவர்களிடையே கனிஷ்ட பிரிவு, இடைநிலைப் பிரிவு, சிரேஷ்ட பிரிவு என மூன்று பிரிவுகளாக இந்த போட்டி இடம்பெறும்.

''சிறுவர் மகிழ்ச்சியில் சமூகத்தின் பங்கு'' என்னும் தலைப்பிலும், சமூகத்தால் சிறுவர்களின் தன்னிலை என்ற தலைப்பிலும் யுத்தம் முடிவடைந்த நிலையில் தற்போதைய சிறுவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் என்ற தலைப்பிலும் முறையே கனிஷ்ட, இடைநிலை, சிரேஷ்ட பிரிவுப் போட்டிகளுக்கு பாடசாலை மாணவர்கள் கட்டுரை ஆக்கங்களை அனுப்பி வைக்கவும்.

கட்டுரை யாவும் சொந்த ஆக்கங்கள் என்பதை பாடசாலை அதிபர்களால் உறுதி செய்யப்பட்டு, பங்குபற்றும் மாணவர்கள் தத்தமது கல்வி விவரக்கோவையையும் இணைத்து, எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் யூ. ஆர். நண்பர் நிறுவனம் , பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு அடுத்த மாதம் 7 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் சிறுவர்தின விழாவில் பரிசில்கள் வழங்கப்படும். (ம-236)

# அரசியல் மயமற்ற தனியார் பல்கலைக்கழகம் வடக்கில் அமைய வேண்டியது அவசியம்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் தனியார் பல்கலைக்கழகங்கள் அவசியமா என்னும் தொனிப் பொருளில் கலந்துரையாடல் ஒன்று யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் மண்டபத்தில் இடம் பெற்றது.**

**அதில் வளவாளர்களாக கலாநிதி அறிவழகன், மருத்துவர் எஸ்.யமுனானந்தா, பத்மநாபா அமைப்பின் உறுப்பினர் சிறிதரன், யாழ்.பல்கலைக்கழகச் சட்டத்துறை விரிவுரையாளர் எஸ்.குமரகுருபரன் ஆகியோர்பல்வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டனர்.**

யாழ். பல்கலைக்கழக சட்டத் துறை விரிவுரையாளர் எஸ். குமரகுருபரன் கருத்துத் தெரிவிக்கையில்:

தனியார் பல்கலைக்கழகம் அமைப்பதில் சட்டரீதியாக அங்கீகாரம் உள்ளதா என்ற கேள்வி இன்று அனைவரின் மனங்களிலும் ஏற்படும் ஒரு விடயமாகும்.

1988 ஆம் 1989 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 16 ஆம் இலக்கச் சட்டத்தில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை உள்ளீர்க்க வேண்டிய தேவையும் அவர்களையும் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டிய தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

இந்த நிலையில் நாட்டில் 60 பல் கலைக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும். ஆனால், அதற்குரிய வளம் அரசிடம் உள்ளதா என்பது கேள்விக் குறியான ஒரு விடயமே.

இந்த நிலையில் நாம் ஒரு விடயத்தை அலசிப்பார்க்க வேண்டிய தேவை உள்ளது. பாதுகாப்புக்காக எத்தனையோ கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நிதியின் ஒரு பகுதியைக் கூட கல்விக்கு ஒதுக்கினால் அது போதுமா என்ற கேள்வியும் உள்ளது.

இன்றைய சூழலில் அரசு–அரசாங்கம் என்பவற்றுக்கு இடையிலான வேற்றுமை குறுகிவருகின்றது. இந்த நிலையில் அரசியல் தலையீடு இல்லாதவாறு தனியார் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கை உண்டு.

ஆனால், தனியார் பல்கலைக்கழகங்களில் தனியாரின் தலையீடு இருக்குமானால் அவர்களும் தனி யாரின் நிகழ்ச்சி நிரலில் இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

அடுத்துத் தனியார் பல்கலைக் கழகங்கள் அவசியம் என்ற சாரப்பட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.யமுனானந்தா கருத்துத் தெரிவிக்கையில்:

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகக் கல்வியை இரு மடங்காக அதிகரிக்க வசதியாக யாழ்ப்பா ணத்தில் தனியார் பல்கலைக்கழகங் கள் நிறுவப்பட வேண்டும்.

கல்வி என்பது அறிவுப் பரம்பல். தொழில் என்பவற்றுக்கு மேலாக சமூக இருப்புக்கான அத்திபாரம் அந்த வகையில் யுத்தத்தின் போதும் யுத்தத்தின் பின்னரும் பல கல்வியாளர்கள், மருத்துவர்கள் நாட்டை விட்டு புலம் பெயர்ந்து சென்றுவிட்டனர்.

இவர்கள் உலகில் மிகச் சிறந்த பேராசிரியர்களாக, விரிவுரையாளர்களாக உலகின் முன்னணிப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்பிக்கின்றனர்.

இவ்வாறு சிதறிப்போயுள்ள தமிழ் கல்வியாளர்கள், மருத்துவர்களின் சக்தியை ஒரு புள்ளியில் குறித்துப் பயன்பெறுவதற்கும் எதிர்கால சந்ததிக்குக் கல்வியூட்ட வசதியாக உறுதியான தனியார் பல்கலைக்கழகக் கட்டமைப்பு மிகவும் இன்றியமையாதது.

புலம் பெயர் தேசமெங்கும் வாழும் மக்கள் யாழ்ப்பாணத்தில் கற்க வசதியான சூழலும் இதன் மூலமாக யாழ்ப்பாணத்தில் மருத்துவ வசதிகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் சூழலும் உருவாகும்.- என்றார்.

அரசியல் கட்சிஒன்றின் உறுப்பின ரான சிறிதரன் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகங்கள் அறிவின் சின்னங்கள். அவை அறிவை வழங்கும் நிலையங்கள். அறிவை விற்பனை செய்யும் இடமாக மாறக்கூடாது. தனியார் துறையின் செல்வாக்கு காரணமாக இலங்கையில் இலவச மருத்துவமும் இலவசக் கல்வியும் ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது.

இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்கள் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகத்தில் சுயாட்சி நிறுவப்பட வேண்டும்.- என்றார்.

கலாநிதி அறிவழகன் கருத்துக் கூறும்போது:

இலங்கையில் முதலாம் இரண்டாம் நிலைக் கல்விகள் சிறப்பாக இடம் பெற்று வருகின்ற போதும் மூன்றாம் நிலைக் கல்வியான பல்கலைக்கழகக் கல்வி வெற்றிகரமாக இல்லை.

பல்கலைக் கழகத்துக்குத் தகுதி பெறும் மாணவர்களில் 10 வீதமானவர்களே அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கான வளமே இலங்கை அரசிடம் உள்ளது.

இலங்கையில் முதலாம் பட்டப் படிப்பு இலவசமாக வழங்கப்படு கின்ற போதிலும் பட்ட மேற்படிப்பு, பட்டப் பின் படிப்பு என்பன இலவசமாக வழங்கப்படுவதில்லை.

தொகுப்பு: ஹரிஸ்

இலங்கையில் வசதி கூடியவர்கள் தமது பிள்ளைகளை வெளிநாடுகளில் அனுப்பி படிக்க வைக்கின்றனர். ஆனால் வசதி குறைந்தவர்கள் அப்படிச் செய்ய முடியாதுள்ளது.

இந்த நிலையில் எங்களுக்கு இலாப நோக்கமற்ற தனியார் பல்கலைக் கழகங்கள் தேவை. வசதி குறைந்தவர்கள் இங்கு கல்வி கற்க வசதியாக கடன் வசதிகள் வழங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். கல்வியை முடித்து வேலை பெற்றதும் கடனை பகுதி பகுதியாக திருப்பி செலுத்தக் கூடிய சட்டமூலம் உருவாக்கப்படவேண்டும்.

பல்கலைக் கழகத்துக்கு தகுதி பெற்றும் அனுமதிக்கப்படாத 90 வீதமானவர்களுக்கும் உயர்கல்வி வாய்ப்பை வழங்கக் கூடிய தனியார் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும். பணமில்லை என்பதற்காக எந்தப் பிள்ளையும் கல்வி கற்க முடியாது என்றிருக்கும் சூழ்நிலை மாற்றப்படவேண்டும்.

இந்த நிலையில் எமக்கு அரச பல்கலைக் கழகங்களின் வசதிகள் மேம்படுத்தப்படுவதுடன் இலாப நோக்கமற்ற தனியார் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும்.- என்றார்.




துன்னாலை கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

## கந்தையா பூமணி

அவர்களின்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 04.05.1928

மறைவு: 20.09.2011

*உன் உயிர் தந்து*
*என் உயிர் வளர்த்த தாயே*
*தரணியில் நானும் அவதாரம் எடுத்திட*
*துணையாய் இருந்தவளே*

*ஈரைந்து மாதங்கள் எனை*
*கருவாய் வயிற்றில் சுமந்தவளே*
*பசியால் நீ வாடிடும்போதும்*
*நான் பசியறியாது செய்தவளே*

*நோயினால் நீ வாடியபோதும்*
*என் மனம் நோகாமல் பார்த்தவளே*
*உன்னை என்னவென்று நான்சொல்லுவேன்*
*நீ தெய்வம் என்று சொன்னால் கூட*
*உனக்கு அது இழுக்குதான்*
*நீ தெய்வத்துக்கும் மேலே தான் - என் மனதில்*

இன்று (20.10.2011) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது அன்புத் தெய்வம் **கந்தையா பூமணி** அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து இவ்வைபவத்தில் பங்கேற்று மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

கே.சுரேஸ்
(கனடா- மகன்)

## யாழ்.மாவட்ட செயலகத்தில் கணினி பயிற்சி நிலையமொன்றை நிறுவுதல் வேலைக்கான கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக் குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலரால் கணினி பயிற்சி நிலையமொன்றை நிறுவுதல் வேலைக்காகத் தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2. விலைக் கேள்வியாளர்கள் கணினி பயிற்சி நிலைய நிர்மாண வேலையாக 10 கணினி தொகுதிகளை பொருத்துதல், மென்பொருள், வலையமைப்பு உள்ளடங்கலாக குறித்த வேலைகள் தொடர்பில் தொழில்சார் வல்லுநர்களாக இருப்பதுடன், அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டவர்களாகவும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் விலைக்கேள்வி ஆவணத்தை பொறியிலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 20.10.2011 முதல் 03.11.2011 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூ.1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் பொறியியலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (தொலைபேசி இல 0212222233 (56)) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

4. ஆர்வமுள்ள விலைக் கேள்வியாளர்களினால் மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 03.11.2011 திகதியன்று மாலை 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாக இரு பிரதிகளில் தயாரித்து பிரதம கணக்காளர் அலுவலக அறையில் அமைந்துள்ள கேள்விப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அன்றைய தினம் கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் மாலை 2.30 மணிக்கு திறக்கப்படும்.

5. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.

6. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கேள்விப் பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும். பிணைப்பொறுப்பு காலம் கேள்வி முடிவு திகதியில் இருந்து 90 நாள்கள் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (வாரம்) | கேள்வி பிணைத் தொகை (ரு) | மீளளிக்கப்படாத தொகை(ரு) |
|---|---|---|---|---|---|
| JK/ ADM/ 02/39 | கணினி பயிற்சி நிலையமொன்றை நிறுவுதல் | 1.47 மில் | 03 வாரம் | 16.500.00 | 1000.00 |

**இமெல்டா சுகுமார்**
*அரசாங்க அதிபர்,*
*யாழ்.மாவட்டம்.*

(C/5370)

## ஆங்கில செயல் நூல்களைப் பெறலாம்

அடிப்படை ஆங்கிலக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த அதிபர்கள், பிரதி அதிபர்கள் அனைவரையும் நாளைய தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வலய ஆசிரியர் நிலையத்துக்குச் சமுகமளித்துத் தமக்குரிய செயல் நூல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(க)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் ஐந்துக்கான விரைவு கணிதப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடம் பெற்றுத் தனக்கும் பாடசாலைக்கும் பெருமை தேடித் தந்தமைக்காக யா/ ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் ஜெ. அலோஜ் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
யா/ ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆலயத்தின்
சித்திரத்தேர் திருப்பணியின்
செயலாளரான

**செல்வன் தங்கவேலு பார்த்தீபன்**

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 27 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.A (Hons) புவியியல் சிறப்பு பட்டம் பெற்றமைக்கு அவரைப் பாராட்டுவதோடு அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் என எல்லாம் வல்ல அம்பாளின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்,
சேற்றுக் கண்டி முத்துமாரியம்மன்,
முரசுமோட்டை.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி றஜிதா சிறீதரன்**
அவர்கள் நல்லாசிரியர்க்கான
"பிரதீபா பிரபா"
ஜனாதிபதி விருது
பெற்றதையிட்டு அகமகிழ்ந்து
வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
மு/நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம்,
விசுவமடு

## ஓராண்டு நினைவஞ்சலி

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
எம்மை எல்லாம் அன்பாய் அரவணைத்து
நல்வழி காட்டிய குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஆறாத் துயரத்தில் எங்களை ஆழ்த்திவிட்டு
மீளாத் துயிலில் எங்கே மறைந்தீர்கள்
பாசம் கொண்டாடி மகிழும் உங்கள்
முகம் காணவே துடிக்கின்றோம்
நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்
நாம் வாழும் காலம் வரை
உங்கள் நினைவுகள்
எம் மனதை விட்டு நீங்கா
ஓராண்டு ஆனால் என்ன
ஓராயிரம் வருடங்கள் ஓடினால் என்ன
என்றும் உங்கள் பிரிவில் துடிக்கின்றோம்

எங்கள் அன்புத் தெய்வம்
**அமரர் செல்லத்துரை சிங்கராசா**

திதி: 2011.10.20

மண்ணில்:
1932.01.28



விண்ணில்:
2010.10.30



இல.12, சுப்பிரமணியம் வீதி, அரியாலை.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# பல்வேறு சிறப்பம்சங்களுடன் விளங்கும் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆவரங்கால் கிராமத்தின் குறியீடாக அமைந்து சமூக மேம்பாட்டுக்காக பணியாற்றி வரும் சிவசத்தி மணிமண்டபமும் விஅன்ரி அறக்கட்டளையும் பரோபகாரி வேலுப்பிள்ளை சிவசுந்தரத்தின் சிந்தனை வழியில் ஏற்பட்ட செயற்பாடாகும்.

இதற்கு உறுதுணையாக இருந்து தமக்குச் சேர வேண்டிய தாய் தந்தை வழி முதுசமான காணியையும் வழங்கி முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிய மூத்த சகோதரன் வே.இளையதம்பி அறக்கட்டளையின் தலைவராகவும் அடுத்த சகோதரன் வே.கந்தசாமி அறக்கட்டளையின் செயலாளராகவும் இணைந்து அரும்பணியாற்றி வருவது சகோதரர்களின் கருத்தொருமித்த சிந்தனை ஓட்டத்தையும் ஒற்றுமையையும் புலப்படுத்தி நிற்கின்றது.

மணி மண்டபம் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் அறக்கட்டளையின் மூலதனமாகக் கொள்ளப்பட்டு பணிமுன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப் பட்டுவரும் அதே வேளையில் அறக்கட்டளையின் வரவு செலவுக் கணக்குகள் பதிவு செய்யப்பட்ட பட்டயக் கணக்காளர் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வெளிப்படுத்தப்படுவதோடு; சகல செயற்பாடுகளும் ஜனநாயக பண்புசார் நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்த ஆரோக்கியமான நடைமுறை சிவசக்தி மணி மண்டபம் மற்றும் விஅன்ரி அறக்கட்டளையின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சியான பணி



முன்னெடுப்புக்கும் உறுதிமிக்க அடித்தளமாக அமைந்துள்ளது.

கொழும்பில் வசிக்கும் அறக்கட்டளையின் செயலாளர் வே.கந்தசாமியுடன் தொடர்பு கொண்டு மணிமண்டபம் வரிஅறக்கட்டளை தொடர்பாக வினாவிய போது ''எந்த நோக்கத்துக்காக இந்த இரண்டு நிறுவனங்களும் நிறுவப்பட்டதோ அந்த நோக்கம் எந்த விதமான இடைவெளியும் இன்றி ஆரோக்கியமாக நடைபெற்று வருகின்றது. நிதி தொடர்பான பற்றாக்குறையோ அல்லது மேலதிக தேவையோ ஏற்படும் போது அதனை பொருத்தமான முறையில் குறை நிரப்பு செய்வதற்கும் மேலதிகமாக வழங்குவதற்கும் தம்பி சிவசுந்தரம் தயாராக இருக்கிறார். எல்லாம் சிவன் அருளால் நல்லபடி நடைபெறுகின்றது. காலவோட்டத்துக்கு ஏற்ப எதிர்காலத்தில் அறக்கட்டளையின் பணிகள் நவீனமயப்படுத்தப்பட்டு மேலும் விரிவுபடுத்தப்பட்ட வகையில் முன்னெடுக்கப்படும்'' என மிக அடக்கமான முறையில் கூறினார்.

சிவசக்தி மணி மண்டபத்தின் நாளாந்த பணி முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுவதற்கு முகாமையாளர் ஒருவரும் இரண்டு உதவியாளர்களும் நிரந்தரக் கடமையில் உள்ளனர். முகாமையாளராக சின்னையா இராசநாயகம் ஆரம்ப காலத்தில் இருந்து கடமையாற்றி வருகின்றார்.

பல்கனி அமைப்புடன் கூடிய மிகப் பெரிய மண்டபம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வசதியான முறையில் அமர்ந்து நிகழ்வுகளை அவதானிக்கக் கூடியது. கலை அரங்கம் அதனோடு நிகழ்வுகளை அவதானிக்க கூடியது கலை அரங்கம் அதனோடு கூடிய கட்டமைப்புக்கள் சமையல் கூடம், 300 இற்கு மேற்பட்டவர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து உணவு உண்ணக் கூடிய கூடம், சமையல் கூடம், விருந்தினர்கள் தங்கியிருந்து செல்வதற்கு வசதியான விடுதி வசதி, பூந்தோட்டம், வாகனத்தரிப்பிடம் உள்ளிட்ட கவர்ச்சியான கட்டமைப்புக் கொண்ட தோற்றம் வாசல் முகப்பில் யாழ்ப்பாணத்தின் கற்பகதருவான ''பனைமரம்'' கட்டியங் கூறி வரவேற்கும் சூழல் மண்டபத்துக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

மண்டபத்தின் அமைவிடம் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வலிகாமம் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளுக்கு மத்தியில் அமைந்திருப்பதும் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியோரத்தில் அமைந்திருப்பதும் மிக வசதியான கட்டமைப்பும், சலுகைக்கைக் கட்டணம் மற்றும் பொது மக்களுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளுக்கு கட்டணம் பெறப்படாமல் இலவசமாகப் பயன்படுத்தக் கூடிய சலுகையும் வழங்கப்படுவதால் பிரதேச, சமூக வேறுபாடுகள் இன்றி சகல தரப்பினரும் மிக விருப்பத்தோடு மண்டபத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

விஅன்ரி அறக்கட்டளை மூலம் அறநெறிப்பாடசாலையின் செயற்பாடுகளுக்கான உதவி, 46 மாணவர்களுக்கு கல்விச் செலவுக்கான மாதாந்தக் கொடுப்பனவு ஐந்து மாணவர்களுக்கு பல்கலைக் கழக கல்விக்கான கொடுப்பனவு ஆலயப் பணிக்கான நிதி உதவி

**ஞான ஆதவன்**

காலத்துக்கான இயற்கை அழிவுகள், வன்செயல் நடைபெறும் வேளையில் உலர் உணவு, சமைத்த உணவு வழங்கல் மற்றும் நிவாரண உதவிகள், சமூக அமைப்புக்களுக்கான உதவிகள் உட்பட பல்வேறு உதவிகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மண்டபத்தின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பாக மண்டப முகாமையாளர் சி.இராசநாயகம் கூறுகையில், இதுவரை 510 இற்கு மேற்பட்ட திருமண நிகழ்வுகளும் 65 இற்கு மேற்பட்ட பூப்புனித நீராட்டு நிகழ்வும் 10 இற்கு மேற்பட்ட திருமணப் பதிவும் அரங்கேற்ற நிகழ்வுகளும் நடைபெற்றிருப்பதோடு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகம், பிரதேச சபை தொடர்பான நிகழ்வுகள் இலவசமாக 50 இற்கு குறையாதன நடைபெற்றுள்ளன. மேலும், நிகழ்வுகளின் உரிமையாளர்கள் உணவு வசதி, கட்டணம், மற்றும் கள நிலை தொடர்பாக பாராட்டுத் தெரிவித்து மன நிறைவுடன் செல்வதாகவும் தெரிவித்தார்.

ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தினதும் வி அன்ரி அறக்கட்டளையினதும் பணிகள் மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.

(முற்றும்)

**தேவை**

Singapore, UKபோன்ற நாடுகளுக்கான கற்கையுடன் கூடிய வேலைவாய்ப்பு.

தொடர்பு- 0779692434

**கடை விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள கடைக் கட்டடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0774744016

**தேவை**

நவாலி, மானிப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் வயல் காணிகள் மற்றும் உரும்பிராய் பகுதிகளில் தோட்டக் காணிகள் பெருமளவில் தேவை. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு- பெயர், காணி விவரம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

Chairman,
Hanna's Relief Swedish Mission.
19/1,Beach Road,
Mount-Lavinia
T.P:2724110

**வீடு வாடகைக்கு**

யாழ்.நகரை அண்டிய பகுதியில் பாதுகாப்பான, அழகான , விசாலமான வீடு வாடகைக்கு உண்டு வெளிநாட்டு நிறுவனங்கள்/ அரச தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு:0773780585

**விற்பனை**

மன்னாரிலிருந்து வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் நிரந்தர பாதை அனுமதி உடைய Ashok layland அரை சொகுசு பஸ் ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0776122344

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



மலர்வு:
1969.09.16

உதிர்வு:
2011.09.20

**செல்லத்துரை தேவகரன்**

கடந்த 20.09.2011 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எங்கள் உயிர் சகோதரன் செல்லத்துரை தேவகரன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிசெய்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (20.10.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.19, மேட்டுத்தெரு,
தோணிக்கல், வவுனியா.

சகோதரிகள்,
செல்வமலர், அமிர்தா, நகுலா,
தவநந்தினி (கிளிநொச்சி)

Deepavali Sale



இன்றே விரையுங்கள்.......
**லேடீஸ் கோணர்**
வழங்கும் பிரமாண்டமான சிறப்புத் தள்ளுபடி
ஐப்பசி 26 ஆம் திகதி வரையுமே...
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொட்டன் சாறிஸ், பட்டு சாறிஸ், சில்க்ஸ் சாறிஸ் சல்வார் வகைகள், சல்வார் துணிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், ஆண்களுக்கான ஆடைகள் அனைத்தும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.





லேடீஸ் கோணர்
K.K.S. றோட்
மருதனார்மடம் சந்தி
(பெற்றோல் செற் அருகில்)
T.P
021 321 1238
0772887475

**45 ஆம் நாள் நினைவினில்...**



திருமதி ஜோர்ஜ் சந்திராதேவி



திருமதி வின்சென்ற் புஸ்பமலர்

இல்லத்தரசிகளாய் ஒளிபரப்பி
பாசப் பிணைப்பில் அன்பைப் பகிர்ந்து
இறை பக்தியில் நாளும் வாழ்ந்து
உள்ளங்கள் உருகிட விடை தந்தீர்

இவர்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்களுக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களும், இறை வேண்டல்களும் .

பங்குத் தந்தையும், பங்கு மக்களும் தூய செபமாலை அன்னை ஆலயம், உருவில்.

# மரண தண்டனைக் கைதிகளுடன் தூக்குமரமும் மஹர சிறைக்கு மாற்றம்

கொழும்பு,ஒக்.20

வெலிக்கடை சிறையிலிருக்கும் மரணதண்டனைக் கைதிகளையும், அங்குள்ள தூக்குமரத்தையும் மஹர சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ.டபிள்யூ.கொடிப்பிலி கடந்த திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறைச்சாலைகளை நகரங்களிலிருந்து அப்புறப்படுத்தி வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்லும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த இடமாற்றம் நடைபெறவுள்ளது. மரண தண்டனைக் கைதிகளுடன் நீண்ட கால சிறைத் தண்டனை பெற்றவர்களும் மஹர சிறைக்குமாற்றப்படுவர்.

குறுகியகாலத் தண்டனை பெற்ற கைதிகள் அனைவரும் வட்டரெக்க சிறைக்கு அனுப்பப்படுவர். இப் போது, வெலிக்கடை சிறைச்சாலையில் 250 மரணதண்டனைக் கைதிகள் உள்ளனர். இவர்களைத் தடுத்து வைப்பதற்குமஹர சிறையில் விசேட பாதுகாப்புடன் கூடிய சிறைக்கூடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது -என்றார். (ச)

# சொத்துவிவரம் வெளியிடாத வேட்பாளர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவும் வழக்குத் தொடரும்

கொழும்பு, ஒக்.20

சொத்து விவரங்களை வெளியிடத் தவறும் வேட்பாளர்களுக்கு எதிராக லஞ்சஊழல் விசாரணை ஆணைக்குழுவும் வழக்குகளைத் தொடரும் என்று ஆணைக்குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் ஜகத்பாலபட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக சொத்து விவரங்களை வெளியிடத் தவறும் வேட்பாளர்களின்பட்டியலைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தத் தீர்மானம் ஊழல், துஷ்பிரயோகம் மற்றும் மோசடிகளை ஒழிக்கும் நோக்கில் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

சொத்து விவரங்களை வெளியிடத் தவறும் வேட்பாளர்களுக்கு எதிராகத் தேர்தல்கள்செயலகமும்நடவடிக்கைகளை எடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீபாவளியை முன்னிட்டு சிகை ஒப்பனை நிலைய விடுமுறை இரத்து

வண்ணை,ஒக்.20

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் தீபாவளித் திருநாளை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை ரத்துச் செய்துள்ளதாகச் செயலர் செ.சிறீராஜன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தீபாவளி தினமான எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை விடுமுறையாக நடைமுறைப்படுத்தப்படும் அன்றைய தினம் சகல நிலையங்களையும் மூடி தீபாவளியை சிறப்பிக்கும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளது. (ஒ-160)

# மாணவர்கள் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தங்களுக்குரிய அங்கிகளை இன்று வியாழக்கிழமை நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-313)

# விளையாட்டு விபரீதமானது; மூழ்கிக் காட்டியவர் சாவு!

கொழும்பு,ஒக்.20

நான் நீரில்மூழ்கி இறக்கப் போகிறேன் என்று குடும்பத்தவர்களுக்கு வேடிக்கை காட்டிக் கொண்டிருந்த 58 வயது குடும்பஸ்தர் ஒருவர் உண்மையாகவே நீரில்மூழ்கி இறந்துள்ளார் என்று உடவளவை பொலிஸார் தெரிவித்தனர்.

தலவத்துகொட, பன்சல வீதியில் வசித்த கோலித சில்வா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றும் இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடனும் உடவளவை வாவியில் நீராடச்சென்றார்.

மனைவியும், பிள்ளைகளும் நீராடிவிட்டு கரைசேர்ந்தனர். இவரோ நான் நீரில் மூழ்கி இறக்கப் போகிறேன் என்று வேடிக்கையாகக் கூறிக்கொண்டு நீரில்மூழ்குவதும், சில நிமிடங்களில் மேலே வருவதுமாக வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தார். அவருக்கு நன்றாக நீச்சல் தெரியும் என்பதால், மனைவியும், பிள்ளைகளும் இதுபற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. எனினும், சில நிமிடங்களாக அவர் மேலே வராததால், பதற்றமடைந்தவர்கள் கூக்குரல் எழுப்பினர். பக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த சிலர் விரைந்துவந்து நீரில் மூழ்கித் தேடினர். கடைசியாக அவரைக் கரையேற்றி வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ச)


# சேவை நலன் பாராட்டு

## திரு.சின்னத்தம்பி இராஜேஸ்வரன்

SLPS-1 (பிரதிக் கல்விப் பணிப்பாளர், நிர்வாகம்)




முல்லை கல்விப் புலத்தினிலே - எல்லை
கடந்து பணிசெய்தோன் - நல்ல
சேவை பலபுரிந்து நாமுயர வழி செய்தோன்
சின்னத்தம்பி பெற்றெடுத்த இராஜேஸ்வரப் - பெருந்தகையர்

துணுக்காயிலே வலயமொன்று துளிர்விட்ட அந்நாளில்
தேர்ந்தவருள் ஒருவராக சீரியரும் வந்துசேர்ந்தார்
கோட்டத்தின் அதிகாரி, உதவிக் கல்விப் பணிப்பாளர்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி, நிர்வாகம்

என்ற பல பாத்திரங்கள் ஏற்று இவர் இயங்கிநின்றார்
எங்கெல்லாம் தேவையுண்டோ அங்கெல்லாம் - இவரிருப்பார்
இடம்பெயர்ந்த அந்நாளில் எங்களுக்குப் பெருந்தோழர்
சம்பளமும் ஆறுதலும் தந்த எங்கள் தந்தையிவர்

கலகலப்பும் கண்டிப்பும் இவரிடத்தில் நிறையவுண்டு
எங்கிருந்து வந்தாலும் இருக்கவைத்துக் கதைபேசி
பசியோடு நாம்போக ஒருநாளும் விடமாட்டார்
பக்தியுள்ள உழைப்பாளி பணிக்கென்றே - தனைத்தந்தோன்

பன்னிரண்டு ஆண்டுகாலம் கனத்தபணி இங்குசெய்து
நாங்களும் பிள்ளைகளும் மனமெல்லாம் நிறைந்து நிற்க
சுகமாக ஓய்வுபெறும் சுந்தரனே எங்களையா
சோர்வின்றி எந்நாளும் நிலைபெற்று நீடு வாழ்க!

வாழ்த்தி வழங்குவோர்: அதிபர்கள் சங்கம், துணுக்காய் வலயம்.

**சேவை ஆரம்பம்: 01.08.1971**

**துணுக்காய் வலயத்தில் சேவை விவரம்**

1. துணுக்காய் கோட்டக்கல்வி அதிகாரி 03.03.1999 - 31.05.1999
2. பிரதிக் கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி 01.06.1999 - 30.07.2008
3. பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிர்வாகம் 01.08.2008 இன்றுவரை

**சமூக சேவை**

1. சமாதான நீதிவான்
2. முல்லை மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுச் செயலாளர்
3. முல்லை மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க பொருளாளர்
4. இணைப்பாளர், ஆதரிக்கும் கரங்கள், துணுக்காய் வலயம்
5. இணைப்பாளர் வன்னித் தமிழ் சமூக கலாசார அமையம், கனடா, முல்லை மாவட்டம்
6. இணைப்பாளர் யுனிசெவ் செயற்திட்டம், *PSI* செயற்திட்டம்

# ஈழத்தமிழர் மீதான தொடர் தாக்குதல் குறித்து மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு செல்க!

## முதல்வர் ஜெயலலிதாவிடம் தமிழக ஆளுநர் ரோசய்யா வலியுறுத்து



இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாவது குறித்து முதல்வர் ஜெயலலிதா, மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் - என்று தமிழக ஆளுநர் ரோசய்யா வலியுறுத்தியுள்ளார்.

நெல்லூர் மாவட்டம், காவலி அடுத்த முசுனூரு என்ற இடத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில், தமிழர்கள் தாக்குதலுக்குள்ளாவது குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா, மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று பேச்சு நடத்த வேண்டும். தங்களுக்கு அநியாயம் நடந்தது என எவரேனும் எனது கவனத்துக்குக் கொண்டு வந்தால் அதற்குத் தீர்வுகாண மாநில அரசுக்கு ஆலோசனை வழங்கத் தயாராக உள்ளேன்.

தமிழகத்தில் வாழும் தமிழர்களுடன், தெலுங்கு தாய் மொழியாக கொண்டவர்களுக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆளுநராக பொறுப்பு வகித்து வரும் எனக்கு அனைவரும் சமமானவர்கள்தான். சில விடயங்களில் மாநிலங்களிடையே சரியான புரிந்துணர்வு இருப்பது மிகவும் முக்கியம். இரு மாநிலத்தவர்களும் பக்கத்து மாநிலங்களின் தேவையை அறிந்து கொள்ள வேண்டும் - என்றார் ரோசய்யா.

# சென்னையில் 7 இடங்களில் இன்று மறு வாக்குப் பதிவு

சென்னை மாநகராட்சிக்கு 7 மையங்களில் மறுவாக்குப்பதிவு இன்று 20 ஆம் திகதி நடைபெறும் என்று மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது

முதல் கட்ட உள்ளூராட்சித் தேர்தல் திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் சென்னையில் பல வாக்குச்சாவடிகளில் முறைகேடுகள் நடைபெற்றன என தி.மு.க., தே.மு.தி.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் மாநிலத் தேர்தல் ஆணையர் சோ.அய்யரிடம் முறைப்பாடு தெரிவித்தன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக சென்னை மாநகராட்சி ஆணையர் டி.கார்த்திகேயன் மற்றும் தேர்தல் பார்வையாளர்கள், வாக்குச்சாவடி அலுவலர்களிடம் சோ.அய்யர் ஆலோசனை நடத்தினார். வாக்குச்சாவடி ஆவணங்களையும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வுக்குப் பின்னர் 7 மையங்களில் மறுவாக்குப்பதிவு நடைபெறும் என்று அறிவித்தார்.

# கூடங்குளம் அணுமின் நிலைய உற்பத்தி நவம்பரில் ஆரம்பம்

## அணுசக்தி ஆணையத் தலைவர் தெரிவிப்பு

டில்லி, ஒக். 20

கூடங்குளம் அணுமின் நிலையம் இப்போதைய திட்டத்தின் படி அடுத்த மாதம் மின் உற்பத்தியைத் தொடங்கிவிடும் என்று அணுசக்தி ஆணையத்தின் தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி தெரிவித்தார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டம் குறித்து பொதுமக்களிடம் போதிய விழிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அணுமின்திட்டங்கள்குறித்து பரவலாக சில கருத்துகள் இருந்தாலும், அவற்றை அமைப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள் ஏராளமானவை. அவை குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது

கூடங்குளம் திட்டத்துக்கு எதிரான போராட்டம் நடைபெற்றிருக்காவிட்டால், செப்ரெம்பரிலேயே மின் உற்பத்தி தொடங்கியிருக்கும். அணுமின் திட்டம் குறித்து, பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்படுவது உண்டு. அண்மையில் ஜப்பானில் ஆழிப் பேரலை தாக்கியதை அடுத்து, புகுஷிமா அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தால் கூடங்குளம் மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

புகுஷிமா அணுமின் நிலையம் மிகப் பழைய நிலையம். கிட்டத்தட்ட மூடப்படவேண்டிய நிலையில் இருந்தது. அதேசமயம் இந்த விபத்துக்குப் பின் ஜப்பானில் இதர அணுமின் நிலையங்கள் மூடப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

கூடங்குளம் அதிநவீன பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கொண்டதாக அமைக்கப்படுகிறது.

இப்போது மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சத்துக்கு போதிய விழிப்புணர்வை அணு சக்தித் துறையினர் ஏற்படுத்தாததும் ஒருகாரணம். விபத்து நேரிட்டால், அப்பகுதியில் வசிப்போர் எப்படி பாதுகாப்பான இடத்துக்குச் செல்லவேண்டும் என்பதை உணர்த்துவதற்கான சில மாதிரிச் செயல்பாடுகள், மக்களிடையே பீதியை ஏற்படுத்திவிட்டிருக்கிறது. இதனால்தான், எதிர்ப்புப் பலமாகிவிட்டது.

உலகம் முழுவதும் அணுமின் திட்டத்தின் மூலம் மின்சார உற்பத்தித் தேவை ஈடு செய்யப்படுகிறது - என்றார் பானர்ஜி.

# நீதிமன்றில் ஆஜராவதை தாமதம் செய்வதா? ஜெயலலிதாவுக்கு உச்ச நீதிமன்று கண்டனம்

டில்லி, ஒக். 20


பாதுகாப்புக் காரணங்களைக் காரணம் கூறி பெங்களூர் நீதிமன்றில் ஆஜராவதிலிருந்து தாமதப்படுத்துவது சரியல்ல - என்று முதல்வர் ஜெயலலிதாவுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, முதல்வர் ஜெயலலிதாவுக்கு விமான நிலையம் முதல் நீதிமன்றம் வரை சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என கர்நாடக அரசு பதில் அளித்துள்ளது.

பெங்களூர் தனி நீதிமன்றில் பல காலமாக நிலுவையில் உள்ள சொத்துக் குவிப்பு வழக்கில் முதல் முறையாக ஜெயலலிதா இன்று 20 ஆம் திகதி நேரில் ஆஜராகவுள்ளார். உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்தே நேரில்வரச் சம்மதித்தார் முதல்வர் ஜெயலலிதா.

இதையடுத்து ஜெயலலிதாவின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தனி நீதிமன்றத்தையே தற்காலிகமாக இடம் மாற்றி கடந்த திங்கட்கிழமை தனிநீதிமன்ற நீதிபதி மல்லிகார்ஜுனய்யா உத்தரவிட்டார். 20 ஆம் திகதியன்று பரப்பான அக்ரஹாரத்தில் உள்ள மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறும் என்று நீதிமன்று அறிவித்துள்ளது.

இந்த நிலையில் திடீரென ஜெயலலிதா தரப்பில் உச்சநீதிமன்றத்தில் புது மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. எனவே, தன்னால் அங்கு போக முடியாத நிலை உள்ளது. எனவே, போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் வரை நேரில் ஆஜராவதிலிருந்து தனக்கு விலக்குஅளிக்க வேண்டும் என்று ஜெயலலிதா கோரியிருந்தார்.



ஆனால் இதை விசாரித்த உச்சநீதிமன்றம், இதுதொடர்பாக புதன்கிழமைக்குள் ஜெயலலிதாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு குறித்த விவரங்களை தெரிவிக்க வேண்டும் என்று கர்நாடக அரசின் சட்டத்தரணிக்கு உத்தரவிட்டது.

நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது கர்நாடக அரசின் சார்பில் பதில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அதில், முதல்வர் ஜெயலலிதா இசட் பிளஸ் பாதுகாப்பு வளையத்தின் கீழ் இருப்பதால் அவருக்கு அந்தப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விமான நிலையம் முதல் நீதிமன்றம் வரை சிறப்புப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்துள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து பாதுகாப்பு காரணத்தைக் காட்டி நீதிமன்றில் ஆஜராவதிலிருந்து தாமதம் செய்வது சரியல்ல என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து பேசிய ஜெயலலிதா சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், முதல்வர் ஜெயலலிதா இசட் பிளஸ் பிரிவு பாதுகாப்பின் கீழ் உள்ளார். அவரது பயணத்தை 96 மணி நேரத்திற்கு முன்பே திட்டமிட வேண்டும். எனவே, தற்போது உடனடியாக பெங்களூர் நீதிமன்றில் ஆஜராவது இயலாத காரியம் - என்றனர். இதற்கும் நீதிபதிகள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

# காங்கிரஸ் தோல்வி எழுதப்பட்ட முடிவு

## பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி சாடல்

நாக்பூர், ஒக். 20


காங்கிரஸ் கட்சியின் தோல்வி என்பது எழுதப்பட்ட முடிவு. எனவே, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் முடிவுக் காலம் நெருங்கி விட்டது - என்று பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அத்வானி வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிராக இந்தியா முழுவதும் ரதயாத்திரை மேற்கொண்டுள்ள அத்வானி நாக்பூரில் மேலும் கூறியவை வருமாறு -

மகாராஷ்டிரா, ஆந்திரா, அரியானா ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ்தான் ஆட்சியில் உள்ளது. ஆனால், அங்கு நடந்த இடைத்தேர்தல்களில் அக்கட்சி தோல்வியடைந்துள்ளது. ஊழல் மற்றும் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட மக்களின் கோபத்தின் வெளிப்பாடுதான் தேர்தல் முடிவாக வந்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தோல்வி என்பது எழுதப்பட்ட முடிவு. எனவே, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் முடிவுக் காலம் நெருங்கி விட்டது. இப்போதைய அரசு இன்னும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கும் என, சிலர் கூறுகின்றனர். ஒரு சிலர் இந்த அரசு நீடிக்க வாய்ப்பில்லை என்கின்றனர்.

ராஜீவ் பிரதமராக இருந்த போது அவரது அரசை முடிவுக்குக் கொண்டு வர வி.பி.சிங் இருந்தார். தற்போதைய காங்கிரஸ் அரசை முடிவுக்குக் கொண்டுவர எதிர்க்கட்சிகளாலும் முடியாது. இன்று வி.பி. சிங்கும் கிடையாது. நல்ல வேளையாக தற்போது, தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி இருக்கிறார். உச்ச நீதிமன்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டமும் இருக்கின்றன. இதன்



மூலம், அரசைக் கண்டிக்க முடிகிறது.

நாங்கள் ஆட்சியில் இருந்த போது சுவிட்ஸர்லாந்தில் உள்ள வங்கிகளில் பதுக்கப்பட்ட கறுப்புப் பணம் குறித்த விவரங்களைப் பெற முடியாத அளவுக்கு, விதிமுறைகள் கடுமையாக இருந்தன. ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார சிக்கலினால் ஜேர்மன் அரசு கொடுத்த நிர்பந்தத்தால் சுவிஸ் வங்கிகளில் கணக்கு வைத்துள்ளவர்களின் விவரம் வெளியிடப்பட்டது.

இந்தப் பட்டியலில், 2 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. இந்தப் பட்டியலில் உள்ள விவரங்களைப் பெற்ற மத்திய அரசு, அது குறித்து விடயங்களை வெளியிட மறுத்து விட்டது.

ஊழல் என்ற பலவீனத்தின் பிடியில் காங்கிரஸ் மட்டுமல்ல, எங்கள் கட்சியும் சிக்குண்டுள்ளது. இந்தப் பலவீனத்தை நாங்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. நிலப் பேர ஊழலில் சிக்கிய கர்நாடக முதல்வராக இருந்த எடியூரப்பாவை எச்சரித்தோம்.

லோக் ஆயுக்தா அறிக்கை அளித்தபோதே, அவர் முதல்வர் பதவியை இராஜினாமாச் செய்திருக்க வேண்டும். கட்சியில் சிலர் செய்யும் தவறுகளால், கட்சி தலைமைக்கு சங்கடம் ஏற்படுகிறது. தவறு நடப்பது சகஜமானதுதான்.

எனவேதான், கட்சியில் உள்ள ஒவ்வொருவரும் விழிப்புணர்வோடு செயற்படும்படி அறிவுறுத்தியுள்ளோம். ஊழலில் ஈடுபட்ட எந்த கட்சியும் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியாது என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

ஐக்கிய முற்போக்கு அரசின் ஊழலால், மக்கள் அதிகமாகவே பாதிக்கப்பட்டு விட்டனர். இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் அதிக அளவில் ஊழல் செய்தது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தான். நான் ரதயாத்திரை மேற் கொள்வது நாட்டுக்காகத் தான். கட்சிக்காக அல்ல - என்றார் அத்வானி.

உதயன்
20 ஒக்ரோபர் 2011 வியாழக்கிழமை

# உயர்தர மாணவர்களுக்கு பொதுத் தகவல் தொழில் நுட்பம்

**ஒக்டோபர் 22 இல் நாடளாவிய ரீதியில் நடைபெறும் க.பொ.த உயர்தரப் பொதுத்தகவல் தொழில்நுட்பம் (G.I.T) பரீட்சை சம்பந்தமான விழிப்புணர்வுக்காக மாகாணக் கல்வித்திணைக்கள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விருத்திப்பிரிவின் வழிப் படுத்தலுடன் இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

ஏறத்தாழ எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் இளைஞர் யுவதிகளிடம் காணப்பட்ட தகவல் தொழில்நுட்ப அறிவானது ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகத் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்பட்டது. மூன்று தசாப்தமாக நீடித்து வந்த உள்நாட்டுப் போர் ஒரு முக்கிய காரணமாக கருதப்பட்டாலும் அதனை ஒத்த வேறொரு முக்கியமான காரணமும் காணப்பட்டது.

2002 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டங்களில் தகவல் தொழில்நுட்பமானது ஒரு பாடமாக உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. பல்கலைக்கழக நிலைகளில் மட்டுமே அந்தக் காலத்தில் தகவல் தொழில்நுட்பமானது போதிக்கப் பட்டு வந்தது. மேலும் போதிய வளங்கள் காணப்படாமையாலும் இந்த துறை தொடர்பான நிச்சயமற்ற ஒரு நிலை காணப்பட்டதாலும் இந்தப் பாடநெறியைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. எனவே அந்தக் காலத்தில் இலங்கைப் பொது மகன் ஒருவர் உள்நாட்டில் அடிப்படைக் கணினி அறிவினைப் பெற விரும்பினாலும் கூட பதினெட்டு வயதுவரை காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்பட்டது. இந்த வயதெல்லையானது மற்றைய உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது மிக உயர்வானதாகும்.

இந்தப் பிரச்சினையானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கியமான பாதிப்பினை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் பலமாகவே தென்பட்டன. இந்த ஆபத்தினை துரித கதியில் உணர்ந்து கொண்ட இலங்கையினுடைய கல்வி அமைச்சானது 2002 ஆம் ஆண்டில் பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் தகவல் தொழில்நுட்பத்தினை ஒரு பாடமாக அறிமுகப்படுத்தியது.

இலங்கையின் மாணவர் சமூகத்துக்கு அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப அறிவினைப் புகட்டும் மிக முக்கிய நோக்கத்துடன் க.பொ.த உயர்தர வகுப்பின் அனைத்து பாடத்துறையினருக்கும் பொதுவான ஒரு பாடமாகத் தரம் 12 மாணவர்களுக்கு உரியதாக இந்தப் பாடமானது வடிவமைப்புச் செய்யப்பட்டு ''பொதுத் தகவல் தொழில் நுட்பம்'' (General Ingormation Technology) என்னும் பெயரில் அறிமுகம் செய்யப் பட்டது.

நீண்டகால வடிவமைத்தல் செயற்பாட்டைக் கொண்டும் தகவல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சி பெற்ற வல்லுனர்களை உள்ளடக்கியும் தயாரிக்கப்பட்ட பொதுத்தகவல் தொழில்நுட்பமானது அறிமுகப்படுத்தப்பட்ட காலங்களில் மிகப் பெரிய சவால்களை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

பாடத்திட்ட வடிவமைப்பில் எந்த வித குறைபாடுகள் காணப்படாவிடினும் இந்தப் பாடத்தினை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் போது மிகப் பெரிய சவாலாக ஆசிரியர் ஆளணிப் பிரச்சினை காணப்பட்டது. அதாவது பொதுத் தகவல் தொழில்நுட்பத்தினை பாடசாலைகளில் தரம் 12 இற்கு கற்பிப்பதற்கு பொருத்தமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பெருமளவிலான பாடசாலைகளில் காணப்படாமையானது இதற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. கல்வி அமைச்சின் இந்தப் பாட அறிமுகமானது ஆரம்பத்தில் விமர்சனத்துக்கு உரியதாகக் காணப்பட்டமையும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

அதாவது பாடசாலைகளில் ஆளணிப் பிரச்சினை காணப்படும் போது இந்தப் பாட அறிமுகம் தேவைதானா? என்ற விமர்சனக் கேள்விக்கு அமைச்சினால் பின்னர் தகுந்த பதிலும் செயல் ரீதியில் வழங்கப்பட்டது. முதற் கட்டமாக பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப் பட்ட ஆசிரியர்களுக்கு இந்தப் பொதுத் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான பயிற்சிகள் கிரமான முறையில் வழங்கப்பட்டன. இந்தப் பயிற்சிகளின் மூலம் ஆசிரியர்கள் தங்களுடைய தகவல் தொழில்நுட்ப அறிவினை விருத்தி செய்து கொள்ள முடிந்ததுடன் மாணவர்களுக்கு போதிய பயிற்சிகளை வழங்கவும் முடிந்தது.

இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடத்தின் முதலாவது பிரிவிற்கான பரீட்சையானது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் முதன் முதலாக 2005 இல் நடத்தப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரையான காலப்பகுதியில் மாணவர்களின் சித்தி வீதமானது குறிப்பிடத்தக்க அளவில் காணப்படாமை வேதனை தரும் ஓர் விடயமாகும். அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இந்தப் பாடத்தின் சித்தி வீதம் குறைவாக இருந்தமைக்கு ஆசிரியர் பற்றாக்குறை, கணினி வளங்களின் பற்றாக்குறை மற்றும் பாடப்புத்தகங்கள் இல்லாமை போன்ற ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் பின்னர் வந்த காலங்களில் நடத்தப்பட்ட பரீட்சைகளிலும் மாணவர்களின் பெறுபேறுகள் வீழ்ச்சி நிலையிலேயே காணப்பட்டமைக்கு முன்னர் கூறிய அதே காரணங்களைக் கூற முடியாது என்பதை யாவரும் அறிவர். எனவே இந்த ஆரோக்கியமற்ற போக்கிற்கு என்ன காரணம் என சீர்தூக்கிப் பார்த்தல் அவசியமாகின்றது.

தரம் 12 வகுப்பிற்கு உரியதான இந்தப் பாடம் ஒரு வருட கால அளவினைக் கொண்டமைந்ததாகும். க.பொ.த உயர் தரத்தின் விஞ்ஞான, கணித, வர்த்தக, கலை ஆகிய நான்கு பிரிவுகளிற்கும் பொதுவான ஒரு பாடமாகும். வாரம் தோறும் 40 நிமிடங்களைக் கொண்ட 2 பாட நேரத்தைக் கொண்டமைந்ததாகும். மொத்தமாக 60 பாடவேளைகளைக் கொண்ட (40 மணித்தியாளங்கள்)ஒரு வருட கற்கை நெறியாகும். இந்தப் பாடம் அறிமுகம் செய்யப்பட்டதன் நோக்கம் மாணவர்களைத் தகவல் தொழில்நுட்ப உலகில் வல்லுநர்களாக உருவாக்குவதற்கல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்வது அவசியமாகும். மாறாக அனைத்து மாணவர்களுக்கும் இன்றி அமையாத அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப அறிவினை வழங்குவதே இந்தப் பொதுத் தகவல் தொழில்நுட்பப் பாடத்தின் பிரதான நோக்கமாகும். இந்தப் பாடத்திட்டத்தினை எடுத்து நோக்கினால் பின்வரும் அடிப்படையான இலகுவான பகுதிகளையே காணலாம்.

1.தகவல் தொழில்நுட்ப அறிமுகம் - Introduction to Information Technology

2.எண்தொகுதிகள் -Number Systems

3.தர்க்கப்படலைகள்-Logic Gates

4.அடிப்படை இணைய, மின்னஞ்சல் பாவனை-Internet & Email

5.இயங்குதள அறிமுகம், பாவனை-Operating System (Windows)

6.சொல் செயலாக்கி மென்பொருள் பிரயோகம்-Word Processor (MS Word)

7.வேலை விரிதாள் பிரயோகங்கள்-Spread Sheet application (Ms Excel)

8.தரவுத்தள அடிப்படைகள்-Data basics (Access)

9.முன்வைப்பு மென்பொருள் பிரயோகம்-Presentation (Ms Power point)

10.செயற்றிட்ட நிரலாக்க மொழி-Computer Programming Language (Pascal)

11.தகவல் தொழில் நுட்பமும் சமூகமும்-IT&Society

பொதுவாக க.பொ.த உயர்தர மாணவர்கள் அனைவரும் தமது உயர்தரப் பரீட்சை முடிவடைந்த பின்னர் மேற்கூறப்பட்ட பகுதிகளை உள்ளடக்கிய கணினிக் கற்கை நெறிகளை பெரும் பணச் செலவில் குறுங்காலமாகத் தனியார் கணினிக் கற்கை நிலையங்களில் கற்பதைக் காண முடிகின்றது. ஆனால் அதே கற்கை நெறிகளை இலவசமாக பாடசாலைக் காலத்திலேயே பொது தகவல் தொழில்நுட்பப் பாடத்தை கற்று வலிதான பரீட்சையையும் அதன் மூலமான பெறுமதியான பெறுபேற்றையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மாணவர்கள் உணர்ந்து கொள்ளாதது வருத்தத்துக்குரியதே.

ஆரம்ப காலங்களில் இந்தப் பாடமானது அதிகளவான எழுத்துப் பகுதிகளைக் (Theory) கொண்டமைந்து காணப்பட்டமையானது மாணவர்களின் இந்தப் பாடம் சார் ஆர் வமின்மைக்கு ஓர் காரணமாகக் கூறப்பட்டது. எனவே இந்த எழுத்துப் பகுதிகளைக் குறைத்து செய்முறைப்பகுதிகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதன் மூலமாக மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்க முடியும் என்னும் ஓர் ஆக்க பூர்வமான கருத்து பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டது. இதன் விளைவாக இந்தப் பொதுத்தகவல் தொழில் நுட்பப்பாடமானது 2009 ஆண்டு முதல் முறையாக மீள் வடிவமைப்புச் செய்யப்பட்டது. இதனை வேறொரு வகையில் கூறுவதாயின் ஏற்கனவே காணப்பட்ட பாடத்திட்ட மானது இலகுபடுத்தப்பட்ட ஓர் பாடத் திட்டமாக மாற்றம் செய்யப்பட்டது எனலாம். எவ்வாறாயினும் சித்தி வீதத்தை எடுத்து நோக்கும்போது பெரும் முன்னேற்றம் காணப்படாமை தொடர்ந்து ஏமாற்றம் அளிக்கின்றது. மாணவர்களின் பெறுபேறு வீழ்ச்சியடைவதற்கு அல்லது இந்தப் பாடம்சார் அக்கறை ஏற்படாமைக்கு பின்வருவனவற்றை காரணங்களாக முன்வைக்கலாம்.

1. பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர், கணனி வளங்களின் பற்றாக்குறை.

2.கடந்த ஆண்டு வரை பொதுத் தகவல் தொழில்நுட்பப் பாடத்தின் பெறுபேறுகள் மிகத் தாமதமாகவே வெளிவருதல்.

3. மாணவர்களினுடைய க.பொ.த. உயர்தர பெறுபேற்றுச் சான்றிதழில் இந்தப்பாடத்தின் பெறுபேறுகள் உள்ளடக்கப்படாமை.

4.இந்தப் பாடத்தின் பெறுபேறுகள் எங்குமே எதற்குமே செல்வாக்கற்றவை என்ற மாணவர் மட்டத்திலான தப்பபிப்பிராயம்.

5.மாணவர்கள் இந்தப்பாட நேரங்களில் பொதுத் தகவல் தொழில்நுட்பத்தினை கற்காது வேறுவிடயங்களில் ஈடுபடும் அலட்சியப்போக்கு.

எல்லாவற்றிற்கும் மேலாகக் கடந்த காலங்களில் பொதுத்தகவல் தொழில்நுட்ப இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்படுகின்றமையை புள்ளி விவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. எனவே இந்த நிலமையை மாற்றி பாடசாகைளில் க.பொ.த. உயர் தரத்தில் பயிலும் அனைத்து மாணவர்களையும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றச் செய்வது இந்தப்பாடசாலையின் அதிபர், தகவல்தொழில் நுட்ப ஆசிரியர் ஆகியோரின் தலையாய கடமையாகும்.

பொதுத் தகவல் தொழில்நுட்பவியல் இறுதிப் பரீட்சையானது வினாத்தாள் 1, வினாத்தாள் 2 என்னும் இரு வினாத்தாள்களினை கொண்டமைந்ததாகும். வினாத்தாள் 1 ஆனது 40 பல்தேர்வு வினாக்களினை உள்ளடக்கியதாகவும், வினாத்தாள் 2 ஆனது 6 கட்டமைப்பு வினாக்களினை கொண்டமைந்ததாகவும் காணப்படுகின்றது. இந்த ஆறு கட்டமைப்பு வினாக்களிலிருந்து 4 வினாக்களினைத் தெரிவு செய்து விடையளித்தல் போதுமானதாகும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் 100 ஆனது வினாத்தாள் இரண்டிற்கு வழங்கப்படும். வினாத்தாள் 1 ற்கும் (40X2.5)100 புள்ளிகள் வழங்கப்பட்டு இறுதிப் புள்ளியானது 200/2=100 ஆக அமைந்திருக்கும் மிக இலகுவாகத் தயார் செய்யப்படும் இந்த வினாத்தாள்களில் மாணவன் ஒருவன் சித்தி பெறுவது மிகச் சுலபமானது. குறிப்பாக வினாத்தாள் 2இல் தெரிவு செய்யப்பட வேண்டிய 4 வினாக்களில் MS Word,MS Excel, Number System & Logic Gates போன்ற இலகுவில் விடயளித்து முழுமையான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வினாக்கள் உள்ளடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது வடமாகாணத்தைப் பொறுத்தவரை அனைத்து க.பொ.த. உயர்தரம் கற்பிக்கப்படும் பாடசாலைகளிலும் கணினிகள் காணப்படுகின்றன. தேவையான அளவு இல்லாவிட்டாலும் கூட போதுமான கணினிகள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளாக இலங்கையின் பல்கலைக்கழகங்கள் ஊடாக வெளியேறுகின்ற பட்டதாரிகள் அனைவரும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறிகளைத் தமது பல்கலைக்கழக கற்கையில் பெற்றே வெளியேறுகிறார்கள். இந்தப் பட்டதாரி ஆசிரியர்கள்தான் பாடசாலைகளில் பெரும்பாலும் உயர்தரத்துக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களாக இருக்கின்றனர். எனவே இந்த ஆசிரியர்களே பொதுத் தகவல் தொழில்நுட்ப பாடத்தையும் சிறது தேடலுடன் கற்பிக்க முடியும் என்பதை அதிபர்களும் புரிந்துகொள்ளலாம். இதன்மூலம் ஆசிரியர்களும் மேம்பாடு அடைவதுடன் மாணவர்களும் பயன் பெறலாம்.

இந்த வருடம் எதிர்வரும் ஒக்டோபர் 22 ஆம் திகதி நடைபெற இருக்கும் பொதுத் தகவல் தொழில்நுட்பவியல் பரீட்சைக்கு சிறப்பம்சம் உண்டு. இதுவரை காலமும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பிரதான பெறுபேற்றுச் சான்றிதழில் சேர்க்கப்படாத இந்தப் பரீட்சைப் பெறுபேறானது இந்த வருடம் முதல் பிரதான பெறுபேற்றுச். சான்றிதழில் இடம்பெறப்போகின்றது. எனவே இந்தப் பெறுபேறுகள் உரிய நேரத்திற்கு வெளியிடப்படும் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. கடந்த காலங்களில் இந்தப் பரீட்சை மீது முன்வைக்கப்பட்ட இரு குறைபாடுகள் இந்த வருடம் முதல் களையப்பட இருக்கின்றன.

**சி. கௌசிகன்,**
ஆசிரியர்,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

இந்தப் பொதுத்தகவல் தொழில்நுட்பவியல் இறுதிப் பரீட்சையில் சித்தியடைவதன் மூலம் தகவல் தொழில்நுட்பம் சார் உயர் கல்வியினைப் பெறக் கூடிய சந்தர்ப்பம் மாணவர்களுக்குக் கிடைக்கின்றது. குறிப்பாகத் தேசிய கல்வியில் கல்லூரிகளில் நடத்தப்படும் நூலகமும் தகவல் தொழில்நுட்பமும் கற்கை நெறிக்கும், உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடத்தப்படும் உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDIT) கற்கை நெறிக்கும் உள்வாங்கப்படும் மாணவர்கள் க.பொ.த. (உயர்தர) பொதுத்தகவல் தொழில்நுட்பவியல் பாடத்தில் சித்தியடைந்திருப்பது அவசியமாகும். இவற்றை விட அரச, தனியார்துறைகளில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் இந்தப் பாடத்தில் காணப்படும் சித்தியானது பெரிதும் உதவுகின்றது. மேலும் வங்கித்துறையில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு பொதுத் தகவல் தொழில்நுட்பத்தில் சித்தியடைந்திருப்பதும் முக்கியமானதாகும்.

இறுதிப் பரீட்சையானது நெருங்கிவிட்ட நிலையில் கடந்த ஒரு வருட காலமாக மாணவர்கள் கற்று வந்த விடயங்களை மீண்டும் ஒரு முறை மீட்டிப்பார்க்கும் வகையில் ஆசிரியர்கள் மேலதிக வகுப்புக்களை நடத்தி மாணவர்களைத் தயார் செய்வது அவசியமாகும். இவற்றினை விட பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து தேவையான பயிற்சிகளை வழங்குவது இந்த இறுதிக்காலத்திற்கு மிகப் பொருத்தமானதாக அமையும். இந்த விடயத்தில் மாணவர்களும் அதிக அக்கறை காட்ட வேண்டிய அவசியம் என்பதுடன் இறுதிப் பரீட்சைக்குத் தவறாது தோற்றி தங்களது எதிர்காலத்தினை பிரகாசம் நிறைந்ததாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்புமாகும்.

# 477 பலஸ்தீன கைதிகள் விடுதலை காசாவில் மக்கள் உற்சாக வரவேற்பு

காசா,ஒக்.20

இஸ்ரேல், பலஸ்தீனம் இடையிலான ஒப்பந்தப்படி, ஹமாஸ் பிரிவினரின் பிடியில் இருந்த இஸ்ரேல் வீரர் கிலாத் ஷாலித் விடுவிக்கப்பட்டதையடுத்து பலஸ்தீனக் கைதிகள் 477பேர் இஸ்ரேலில் இருந்து விடுவிக்கப்பட்டனர். அவர்களை காசா மற்றும் ரமல்லா பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்று உற்சாகமாக வரவேற்றனர்.

கடந்த 2006 இல் இஸ்ரேல் எல்லையில் ஹமாஸ் பிரிவினர் நடத்திய தாக்குதலில் இஸ்ரேல் வீரர் கிலாத் ஷாலித் பிடித்துச் செல்லப்பட்டார். அவரை விடுவிப்பதற்காக இஸ்ரேல், ஹமாஸுடன் பேச்சு நடத்தியது. அவருக்குப் பதிலாக இஸ்ரேல் சிறைகளில் உள்ள, 1,027 பலஸ்தீனக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என ஹமாஸ் நிபந்தனை விதித்தது.

அதை ஒப்புக்கொண்ட இஸ்ரேல் கடந்த 16ஆம் திகதி தான் விடுவிக்க உள்ள பலஸ்தீனக் கைதிகளின் பட்டியலை வெளியிட்டது. இதையடுத்து நேற்று முன்தினம் ஹமாஸ் பிரிவினர், இஸ்ரேல் அதிகாரிகளின் முன்னிலையில் எகிப்திய அதிகாரிகளிடம் ஷாலித்தை ஒப்படைத்தனர். ஷாலித் உடல் நலத்தைப் பரிசோதித்த இஸ்ரேல் அதிகாரிகள், அவரை, அவரது குடும்பம் இருக்கும் இஸ்ரேலின் மத்திய பகுதியில் உள்ள டெல் நாப் என்ற இடத்துக்கு விமானத்தில் அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து இஸ்ரேலின் மத்திய பகுதியில் உள்ள டெல் நாப் என்ற இடத்தில் கிலாத் ஷாலிதை குடும்பத்துடன் இணைக்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ் விழாவில் பேசிய பிரதமர் பெஞ்சமின் நெடான் யாஹூ, ''ஷாலித்தின் விடுதலைக்கு இஸ்ரேல் மிக அதிக விலை கொடுத்துள்ளது. எனினும் தனது ஒரு வீரரை மீட்பதற்குக் கூட இஸ்ரேல் எந்தத் தியாகத்தையும் செய்யும்-என்றார்'



அதேநேரம் விடுவிக்கப்பட்ட பலஸ்தீனக் கைதிகள் மீண்டும் தீவிவாதச் செயல்களில் ஈடுபட்டால் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்'' என, எச்சரிக்கையும் விடுத்தார்.

ஷாலித் விடுவிக்கப்பட்டது உறுதியானதை அடுத்து, இஸ்ரேலில் பல சிறைகளிலும் இருந்து 477 பலஸ்தீனக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இவர்களில், 295 பேர் காசா பகுதிக்கும் 40 பேர் கத்தார் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் மீதமுள்ளவர்கள் மேற்குக் கரை தலைநகர் ரமல்லாவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

ரமல்லாவில், கைதிகளை வரவேற்றுப் பேசிய அதிபர் மஹ்மூத் அப்பாஸ்,''இவர்கள் விடுதலைப் போராட்டவீரர்கள். மேலும் பல கைதிகள் விடுவிக்கப்படுவர் என நம்புகிறோம்'' என்றார்.

இரண்டாம் கட்டமாக 550 கைதிகள் அடுத்த மாதம் விடுவிக்கப்படுவர். (ந)

## அமெரிக்காவில் கொண்டாடப்பட்ட களிமண் திருவிழா



அமெரிக்காவின் மிக்சிகன் மாநிலத்தில் வருடாந்த களிமண் திருவிழா கொண்டாடப்பட்டது.

இதன் போது அங்குள்ள மிகப்பெரிய ஏரி ஒன்றில் சிறுவர்கள், வயது வந்தவர்கள் எனப் பாகுபாடு பாராது எல்லோரும் தங்கள் உடலில் களிமண்ணை வாரி இறைத்தும் களிமண்ணில் உருண்டு புரண்டும் திரு விழாவை சந்தோசமாகக் கொண்டாடினார்கள்.

குறித்த திருவிழாவுக்காக களிமண்ணுடன் 20000 கொள்கலன் தண்ணீர் இறைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

## முஸ்லிம் மதத்துக்கு எதிராகப் பேசியவருக்கு சிறைத் தண்டனை

முஸ்லிம் மதத்துக்கு எதிராகப் பேசியதற்காக பாகிஸ்தானைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

குறித்த ஆசியரான இவர் மதத்துக்கு எதிராகப் பேசியதாகவும் அவருக்குக் கூடுதல் தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி அமீர் அலி மேன் முறையீட்டுமனுதாக்கல் செய்திருந்தார். இதை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறியது. (ந)



அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டனை, லிபிய தேசிய இடைக்காலக் கவுன்சில் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீல் வரவேற்றார்.

## ஏமன் போராட்டத்தில்: 12 பேர் சுட்டுக்கொலை

ஏமன் தலைநகர் சனாவில், அந்தநாட்டு அதிபர் அலி அப்துல்லா சலே, பதவி விலகக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது அந்தநாட்டு இராணுவத்தினர் நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

போராட்டத்தை அடக்க முயன்ற அரச படையினர், அவர்கள் மீது கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியும் இயலாததால், துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இதனால் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் 12 பேர் உயிரிழந்தனர், 70க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை சலேயின் அரசை கவிழ்க்க ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் உதவ வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். மேலும் அவர் உள்நாட்டு போரை ஏற்படுத்தி மக்களைக் கொன்றதாகவும் புகார் எழுந்துள்ளது. இதனால் சலே மீது சர்வதேச அளவில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. (ந)

## முன்னறிவிப்பு இன்றி ஹிலாரி லிபியாவுக்கு திடீர் பயணம்

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், முன்னறிவிப்பு எதுவுமின்றி நேற்றுமுன்தினம் லிபியத் தலைநகர் திரிபோலிக்கு திடீர் பயணம் மேற்கொண்டுள்ளார்.

லிபியாவில் இருநாள்களுக்கு முன் கடாபி எதிர்ப்பாளர்கள் வலுவான தாக்குதல் தொடுத்ததையடுத்து, பானி வாலித் நகரின் பெரும்பகுதிகள் அவர்கள் வசம் வந்தன. சில பகுதிகளில் மட்டும் கடாபி ஆதரவாளர்கள் உடனான சண்டை தொடர்கிறது.

இந்தநிலையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் , முன்னறிவிப்பு எதுவுமின்றி லிபியாவுக்குத் திடீர் பயணம் மேற்கொண்டு, தேசிய இடைக்காலக் கவுன்சில் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீல், பிரதமர் மஹ்மூத் ஜிப்ரீல், நிதியமைச்சர் அல்தர் ஹவுனி ஆகியோரைச் சந்தித்து பேசியுள்ளார்.

அவரது இந்தப் பயணம் இருதரப்பு உறவை வலுப்படுத்தவும், தேசிய இடைக்காலக் கவுன்சிலுக்கு அமெரிக்காவின் ஆதரவை தெரியப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ந)

## சீனாவில் பெண்துறவி தீக்குளித்து மரணம்

பீஜிங்,ஒக்.20

சீனாவின் பிடியில் இருந்து திபெத்தை விடுவிக்கும் போராட்டத்தின் தொடர்ச்சியாக, புத்த மதத்தைச் சேர்ந்த ஒரு பெண் துறவி, தீக்குளித்து இறந்துள்ளார்.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில், திபெத் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. கடந்த மார்ச் மாதம் தொடங்கி, இந்தப் பகுதியில் உள்ள கீர்த்தி மடாலயத்தைச் சேர்ந்த ஏழு துறவிகள், தீக்குளித்தனர். இந்நிலையில், அபா பகுதியைச் சேர்ந்த பெண் துறவி டென்ஜின் வாங்மோ, நேற்று முன்தினம் தீக்குளித்து, சம்பவ இடத்திலேயே உயிர் விட்டார்.

இதேவேளை அபா பகுதியில், திபெத் விடுதலை கோரி ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருவதாகவும், அதில் ஈடுபட்ட இரு திபெத்தியர்கள், சீனப் பொலிஸாரால் சுடப்பட்டனர் எனவும், லண்டனில் இயங்கும், 'திபெத் விடுதலை' அமைப்பு கூறியுள்ளது. (ந)

## திடீரென உடைந்தது நாற்காலி தரையில் விழாது தப்பினார் கிலானி

இஸ்லாமாபாத்,ஒக்.20

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி உட்கார்ந்த நாற்காலியின், கால் ஒன்று திடீரென உடைந்தது. எனினும், அவருக்குப் பின்னால் இருந்த உதவியாளர் தாங்கிப் பிடித்துக் கொண்டதால் தரையில் விழாமல் தப்பித்தார்.

இஸ்லாமாபாத்தில் உள்ள, தேசிய அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில் நடந்த விழாவில் கலந்து கொண்ட அதிபர் கிலானி உட்கார்ந்திருந்த நாற்காலியின் ஒரு கால் திடீரென உடைந்தது. கீழே விழ முற்பட்ட வேளை அவரை உதவியாளர் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

இதனையடுத்து விழாவில் பங்கேற்றவர்கள், பலவீனமான நாற் காலி பிரதமருக்கு அளிக்கப்பட்டது குறித்து ஆச்சரியப் பட்ட தோடு, இது நல்ல சகுனமாகத் தெரியவில்லை என வருத்தமும் தெரிவித்தனர். (ந)

## பிரிட்டனில் ஈவரின் சொத்துக்கள் முடக்கம்

லண்டன், ஒக்.20

அமெரிக்காவுக்கான சவுதி அரேபியத் தூதுவரை கொலை செய்ய ஈரான் சதித்திட்டம் தீட்டிய விவகாரம் தொடர்பாக ஈவரின் சொத்துக்களை பிரிட்டன் முடக்கியுள்ளது. வட ஆபிரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போதே வில்லியம் ஹேக் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நட்பு நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளும் குறித்த நபர்களுக்கு எதிராகத் தடைகளை விதிப்பது குறித்து கலந்துரையாடி வருவதாகப் பிரிட்டன் பாதுகாப்புச் செயலாளர் மேலும் கூறியுள்ளார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டு மது நாட்டை களங்கப்படுத்தும் பிரசாரமென ஈரான் அதனை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

## இந்தியா செல்லும் மக்களுக்கு அமெ. எச்சரிக்கை

தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக இந்தியா செல்லும் மற்றும் இந்தியாவில் இருக்கும் அமெரிக்கர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தியாவில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தும் வாய்ப்பு இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. எனவே இந்தி யாவுக்கு செல்லும் மற்றும் அங்கு தங்கியிருக்கும் அமெரிக்கர்கள் எப்போதும் உச்சநிலை விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# தேசிய மட்ட மினி ரெனிஸ் போட்டியில் சென். பற்றிக்ஸ் அணி வென்றது

யாழ்ப்பாணம்,ஒக்.20

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட மினி ரெனிஸ் போட்டியில் சிவப்பு பந்து போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலாமிடத்தைப் பெற்று சம்பியன் ஆனது.

நீர்கொழும்பு சென். மேரிஸ் கல்லூரி அணிக்கும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற செற்



கணக்கில் வெற்றி பெற்றது. செம்மஞ்சள் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி நான்காமிடத்தைப் பெற்றுள்ளது. (23)

# நட்பு ரீதியில் இடம்பெற்ற போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.20

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரிக்கும் இடையில் 14, 16 வயது பிரிவு அணிகளுக்கான நட்பு ரீதியில் இடம் பெற்ற உதைபந்தாட்ட போட்டியில் 14 வயது பிரிவு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. 16 வயது பிரிவு ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

14 வயது பிரிவுகளுக்கான ஆட்டத்தில் இரு அணியினரும் எதுவித கோல்களைப் பெறாமையினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

16 வயது பிரிவினருக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(23)

# குருநகர் பாடும் மீன் வென்றது

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# றக்பிக்குத் தெரிவான மாணவருக்குச் சீருடைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.20

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய றக்பி விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றுவதற்காக கிழக்கு மகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாலமுனை ஹிக்மா வித்தியாலத்தின் றக்பி அணியினருக்கான சீருடை வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை பாடசாலை அதிபர் ஐ.எம்.பாஹிம் தலைமையில் பாடசாலையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும் மாவட்ட சாரண உதவி ஆணையாளருமான எஸ்.எஸ் முனாஸ் தனது சொந்த நிதியிலிருந்து றக்பி அணி வீரர்களுக்கு பரிசில்களையும் விளையாட்டு அணிக்கான சீருடைகளையும் வழங்கினார்.

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய றக்பி போட்டியில் கலந்து கொள்வதற்காக கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவாகியுள்ள மூன்று அணிகளில் பாலமுனை ஹிக்மா வித்தியாலய அணியும் ஒன்றாகும். (23)

# றக்பி விளையாட்டு அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.20

பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தில் றக்பி விளையாட்டை அறிமுகப் படுத்தும் நிகழ்வும் பயிற்சி முகாமும் நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)



யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள சர்வதேச சதுரங்கப் போட்டியில் பங்கு கொள்வதற்காக வீர வீராங்கனைகளைத் தெரிவு செய்யும் முகமாக யாழ் மாவட்ட சதுரங்க சங்கம் நடத்திய சதுரங்கப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தீஸ்வரா கல்லூரியில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் வீரர்கள். (ம-23)

# தாச்சிக் கழகங்களின் கலந்துரையாடல்

கைதடி, ஒக்.20

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள தாச்சி விளையாட்டுக்கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்றை யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்தவுள்ளதாக யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் எஸ்.சண்முகலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலில், கலந்து கொள்ளும் விளையாட்டுக் கழகங்களே எதிர்வரும் காலங்களில் போட்டிகளில் பங்குபற்றவோ, நடத்தவோ உரித்துடையவர்கள் எனவும் எனவே, தவறாது இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

(த-288)

# பெண்களுக்கான கரப்பந்தாட்டம் வென்றது கிளிநொச்சி செயலக அணி

யாழ்ப்பாணம்,ஒக்.20

கிளிநொச்சி மாவட்ட செயலக நலன் புரி சங்கம் நடாத்தும் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி வெற்றி பெற்றது.

கரைச்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

(23)

# நல்லூர் கோட்ட உதைபந்தாட்டத்தில் மூன்று பிரிவிலும் யாழ். இந்து வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.20

நல்லூர் கோட்டமட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் 14, 16, 18 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணி மூன்று பிரிவுகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

14 வயது பிரிவு யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் 1:0 என்ற கோல் கணக்கில் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

16 வயது பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் 3:1 என்ற கோல்கணக்கில் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

# பெண்கள் அணியின் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.20

கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகம் வடமராட்சிப் பகுதிக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட பெண்கள் அணிகளுக்கிடையே 6 பேர் பங்கு கொள்ளும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (23)



இலங்கை கராத்தே சம்மேளனத்தால் வடமாகாணத்துக்கான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய எஸ். ஓ. எஸ். சிறுவர் கிராம பெண்கள் அணியினர் பயிற்றுநர் சென்சேய் கே. எஸ் விஜயராஜுடன் உள்ளனர். (ம-23)

# தடம் பதிக்கும் பாகிஸ்தான் தடுமாறும் இலங்கை



இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 259 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. அந்த அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய ரபீக் உமர் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதன் மூலம் இலங்கை அணியைவிட 62 ஓட்டங்களால் பாகிஸ்தான் முன்னிலை பெற்றுள்ளது. முன்னதாக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 197 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் அபுதாபியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஷ்பா உல் ஹக் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கடும் போராட்டத்தின் மூலம் 197 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மஹேல ஜெயவர்தன 28 ஓட்டங்களையும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பரணவிதாரன 37, திரிமன்னே 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார்.

இறுதியில் இலங்கை அணி 74.1 பந்து பரிமாற்றங்களில் 197 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் மித வேகப் பந்து வீச்சாளரான யுனைட் கான் 5 இலக்குகளைச் சரித்தார். உமர்குல், சயிட் அஜ்மல் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு நேற்று முன்தினம் தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணி ஆட்ட நேர முடிவில் 27 ஓட்டங்களை இலக்கு நஷ்டமின்றி பெற்றிருந்தது. ஹபீஸ் 17, உமர் 8 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமாகியது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், இலங்கையின் பந்து வீச்சை இலகுவாக சமாளித்து ஆடியது. இருப்பினும் மெதுவாகவே ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டது. மதிய போசன இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்படும் போது 115 ஓட்டங்களை இலக்கு இழப்பின்றி பெற்றிருந்தது. மதிய போசன இடைவேளை முடிந்து ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்தில் முதலாவது இலக்கை பறிகொடுத்தது. மொஹமட் ஹபீஸ் 75 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹேரத்தின் சுழலில் சிக்கினார். பாகிஸ்தான் 118 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே முதலாவது இலக்கை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய அஷார் அலி, ரபீக் உமர் இணைந்து சிறப்பாக ஆடினார். மிகச் சிறப்பாக நிதானமாக துடுப்பெடுத்தாடிய உமர் தனது சர்வதேச டெஸ்ட் அரங்கில் 259 பந்துகளில் 6 ஆவது சதம் கடந்தார். மறு முனையில் துடுப்பெடுத்தாடிய அஷார் அலியும் அரைச்சதம் கடந்தார்.

இறுதியில் நேற்றைய ஆட்டநேர முடிவின் போது 98 பந்து பரிமாற்றங்களில் 259 ஓட்டங்களை பாகிஸ்தான் அணி பெற்றுக் கொண்டுள்ளது. ஒரு இலக்கினை மாத்திரம் இழந்துள்ளது. ரபீக் உமர் 109, அஷார் அலி 60 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளனர். இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாளாகும். (15)

# நான் ஓய்வு பெறவில்லை அழைத்தால் வருவேன்

நான் ஒருபோதும் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறவில்லை என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சயிட் அப்ரிடி கூறியுள்ளார். அதேவேளை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதையடுத்து தான் பாகிஸ்தான் தேசிய அணியில் விளையாடத் தயார் எனவும் அப்ரிடி அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்காக மீண்டும் விளையாடலாம் என்று நான் தீர்மானித்துள்ளேன். நான் ஒருபோதும் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவில்லை. கிரிக்கெட் சபையின் முந்தைய நிர்வாகத்தின் கீழ் விளையாட விரும்பவில்லை என்று மாத்திரமே நான் கூறினேன். இப்போது சபைக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். நான் மீண்டும் பாகிஸ்தானுக்காக விளையாட விரும்புகிறேன், என்று கராச்சியில் செய்தியாளர்களைச் சந்தித்த அப்ரிடி கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக கடமையாற்றிய வக்கார் யுனிஸுடன் ஏற்பட்ட மோதலால் அப்ரிடி, ஒரு நாள் போட்டிகளுக்கான அணித்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதையடுத்து அவர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து கடந்த மே மாதம் விலகியமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவராக விளங்கிய இஜாஸ் பட்டின் 3 வருட பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து அந்தச் சபையின் புதிய தலைவராக ஸாகா அஷ்ரப் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இப்போது கிரிக்கெட் சபைக்கு புதிய தலைவர் உள்ளார். அணி முகாமைத்துவமும் மாறியுள்ளது. எனவே இது நான் மீண்டும் எனது நாட்டிற்காக விளையாட முயற்சிக்க வேண்டிய தருணம் எனக் கருதுகிறேன். இன்னும் சில வருடங்கள் என்னால் கிரிக்கெட் விளையாட முடியும், என்று 31 வயதான அப்ரிடி தெரிவித்துள்ளார். (15)

# கட்சி மாறிய தந்தை

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனியின் தலைமைத்துவத்தை மிகவும் ரசிப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் குக்கின் தந்தை கிரஹாம் தெரிவித்துள்ளார்.

டோனியின் பொறுமை தன்னை மிகவும் கவர்ந்துள்ளதாகக் கூறிய அவர் அணியின் சூழ்நிலைகளுக்கேற்ப வீரர்களை கையாள்வதில் டோனி திறமையானவர் என்று புகழாரம் சுட்டியுள்ளார்.

மேலும் எந்த பதற்றமடையாமல் விளையாடும் முறையும் சக வீரர்களை ஊக்கப்படுத்துவதும் டோனியின் சிறப்பு அம்சங்கள் என்று குக்கின் தந்தை தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவில் அலெஸ்டர் குக் விளையாடுவதை ஊக்குவிப்பதற்காக வருகை தந்த கிரஹாம் டோனியின் தலைமைத்துவத்தை கண்டு ரசிப்பதாக கூறியுள்ளார்.

மேலும் டோனியின் தீவிர ரசிகராக மாறிவிட்டதாகவும் பெருமிதத்துடன் கிரஹாம் தெரிவித்துள்ளார். (15)

# வாட்டுகின்றது தொடர் தோல்விகள்

தொடர்ச்சியாக இரண்டு ஆட்டத்தில் மோசமாக தோற்றது கவலை அளிக்கிறது. எனினும் அடுத்து வரும் ஆட்டங்களில் சிறப்பாக விளையாடி வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளதாக குக் தெரிவித்துள்ளார்.

எங்கள் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் பெரிய இலக்கை அடிக்கத் தவறி விட்டனர். ஆனால் இந்திய அணியில் கம்பீர், ஹோக்லியின் ஆட்டம் அபாரமாக இருந்தது. கொஞ்சமும் வாய்ப்பு கொடுக்காமல் வெற்றியை பறித்து விட்டனர். இந்திய அணி இங்கிலாந்தில் தடுமாறியது போல நாங்களும் இங்குள்ள சுழலுக்கு ஏற்ப விளையாட முடியாமல் திணறுகிறோம். கணிசமாக இலக்கு குவிப்பதுடன் களத்தடுப்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்துள்ளோம் - என்றார். (15)

## சாத்வீகப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது கூறியதாவது:

வடக்கில் மட்டுமல்ல தென்பகுதியிலும் புழக்கத்தில் உள்ள சட்டவிரோத ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று ஆரம்பம் முதல் நாம் கோரிக்கை விடுத்தே வந்துள்ளோம். இதனை அரசு செவிமடுக்கவில்லை.

நாம் தமிழீழத்தை மறந்து விட்டாலும் அரசும் படையினரும் இன்னும் மறந்துவிடவில்லை.

கடந்த 16 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மாணவர் தலைவன் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் சட்டவிரோதக் கும்பலினால் தாக்கப்பட்டுள்ளார். அந்த மாணவரைத் தாக்கியவர்கள் ''தமிழீழம் வேண்டுமா?'' என்று கேட்டே தாக்கி உள்ளனர். அப்படியானால் இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருப்பவர்கள் யார்?

கடந்த கால வரலாற்றைச் சற்றுத் திரும்பிப்பாருங்கள். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிதான் அவர்களை ஆயுதம் தூக்க வைத்தது என்பதை மறந்து விடக் கூடாது.

இது மட்டுமல்ல கடந்த 17 ஆம் திகதி வவுனியாவில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினோம்.

எமது அமைதிப் போராட்டத்துக்கு சட்ட பூர்வமான அனுமதியும் பெறப்பட்டிருந்தது. அப்படி இருந்தும் பொலிஸார் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தினர். வீதித்தடைகளை ஏற்படுத்தி மக்களை உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளவிடாமல் தடுத்தனர்.

அமைதிவழிப் போராட்டத்துக்கு தொடர்ந்தும் தடை விதித்தார்களேயானால் அதன் விளைவு விபரீதமாகவே இருக்கும் என்றும் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

அதேவேளை இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்திருந்தால் பாரதலக்ஸ்மனின் கொலையையும் அவர்கள் மீது போட்டுவிட்டு குற்றவாளிகள் தப்பித்திருப்பார்கள் என்று கூறினார் வினோ. (ஒ-02)

## கூட்டமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த வடக்கு மக்களின் காணிப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

வடக்கு , கிழக்கு மக்களுக்கு எவ்விதப்பாதிப்பும் ஏற்படாத வகையிலேயே காணிப் பதிவை அரசு மேற்கொள்ளும் என்பதை தெளிவாகக் கூறிக்கொள்ளவிரும்புகின்றேன்.

அரசின் நோக்கம் என்னவென்று சரியாக புரியாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தக் காணிப்பதிவு நடவடிக்கைக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.இதனை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது - என்றார்.

## சர்வதேசப் பிடிக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரத நாடகத்தை அரங்கேற்றினர்.

- இவ்வாறு விமர்சித்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

''பிரபாகரனின் தமிழீழக் கனவை நனவாக்கும் நோக்குடன் அரசியலுக்கு பிரவேசித்துள்ளவர்களின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல், அரசு தனக்கு என்னவெல்லாம் தோன்றுகின்றதோ அவற்றை வடக்கு, கிழக்கில் துணிகரமாக முன்னெடுக்கவேண்டும். தெற்கில் காணி இல்லாமல் தவிக்கும் எம்மவர்களை அரசு வன்னியில் குடியமர்த்தவேண்டும். அதற்கான உரிமையும் எமக்குண்டு - என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

முக்கிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வவுனியாவில் முன்னெடுத்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக 'உதயனு'க்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் எந்தவொரு பிரதேசமும் எவருக்கும் என எழுதிவைக்கவில்லை. யார் வேண்டுமானாலும் எங்கும் வாழலாம். அதற்கான உரிமை நாட்டில் உள்ளது என்பதை தேசத்துக்கு எதிராகச் செயற்படுபவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

நாட்டில் நிர்வாகத்தைச் சீராக முன்னெடுப்பதற்கே அரசு காணிப்பதிவை முன்னெடுக்கின்றது. அதற்கான அதிகாரம் அரசுக்கு உண்டு. இதற்கு எதிராக ஏன் உண்ணாவிரதம்? வடக்கு, கிழக்கை எவரும் யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை என்பதைப் புரிந்து செயற்படவேண்டும்.

இலங்கை அரசுக்கு மேன்மேலும் சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்தவே கூட்டமைப்பு முயற்சி செய்கின்றது. அதன் காரணமாகவே இலங்கைக்கு எதிரான நாடுகளுக்கு அது விஜயம் செய்கின்றது.

அதுமட்டுமின்றி, உள்நாட்டில் தமக்குப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன போன்றதொரு மாயையை தோற்றுவிக்கவே இந்த உண்ணாவிரத நாடகம்.

இதற்கு அடிபணிந்து அரசு காணிப்பதிவை நிறுத்தக்கூடாது. தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டும்.

தெற்கில் காணி, வீடுகள் இல்லாமல் இருக்கும் எம் சமூகத்தினரையும் அரசு வன்னியில் குடியேற்றம் செய்யவேண்டும். இதனைத் தடுக்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை - என்றார். (த-சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொத்மலை, பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் **175** புள்ளிகள் பெற்ற

**செல்வன்**

**சுபேஸ்வரன் சந்தோஸ்**

அவர்களை மனதாரப் பாராட்டுவதுடன் இவர் கல்வியில் மேன்மேலும் பல்வேறு சித்தி பெற்று சாவகச்சேரி சிந்தாமணி முருகன் அருள் பெற்று நீடூழிகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: செந்தில்நாதன், கலாமணி (தாத்தா, அம்மம்மா )மற்றும் அத்தை மாமா குடும்பத்தினர்.

சங்கத்தானை, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### திருமதி இராமலிங்கம் திரவியம்



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமா கவும் கொண்ட இராமலிங்கம் திரவியம் கடந்த (12.10.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சம்பந்தர் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்குபதி, கந்தையா மற்றும் சின்னம்மா, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வமலர், செல்வராஜா(ஆஸ்திரேலியா), சச்சிதானந்தன் (நீர்பாசனத்திணைக்களம்-வவுனியா), சந்தாணமலர், இராமநாதன்(கனடா), ஞானசம்பந்தர் (ஆஸ்திரேலியா), யோகமலர்(சுவிஸ்), யோகலிங்கம் (ஜேர்மனி),காந்தமலர் (ஆஸ்திரேலியா), புஸ்பமலர் (பிரான்ஸ்) காலஞ்சென்ற அன்பழகன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் குலநாயகி (ஆஸ்திரேலியா), கலைச்செல்வி, கோபாலசிங்கம், காஞ்சனா (கனடா), மதியரசி (ஆஸ்திரேலியா), திருமுருகானந்தர் (சுவிஸ்), தனலக்சுமி (ஜேர்மனி), குகன் (ஆஸ்திரேலியா), உதயசெல்வன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும். சற்சொரூபன், பகீரதன், கிரிதரன், அன்புருவன், ஜீவகரன், ஜெயகரன், கிரிதரன், டினேஸ்கரன், சசிகரன், பிரசாந், சங்கீத், கவிதன், நீதுசிகா, கனிசியன்,வினோத், விதுஜா, அனுசிகா, அன்ஜா, ஆரூஜன், ஆரூஜா, கெவின், பிரவீன், அஸ்வின், ரேதுசன், சுகாசன்,பிரசாந்தி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சபிசாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2011) வியாழக்கிழமை மு.ப 10மணிக்கு ஆஸ்திரேலியாவில் நடைபெறும் மிஞ்சம் பெரி பைன் குறூவ் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தெய்வேந்திரம் பகீரதன்,
பேரன்-C.S.K
(மருந்துக்கடை, கல்வியங்காடு)

78,சட்டநாதர் வீதி,
நல்லூர்.

## பேசாலையில் எரிபொருள்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உங்களால் 17 ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப் படுத்த முடியாவிட்டால் அதற்கு மாற்றீடாக ஆளும்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் இணைந்து செயற்படுத்தக் கூடிய பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டும் என்று ஆலோசனை ஒன்றை முன்வைத்தார் ரணில் விக்கிரமசிங்க.

17 ஆவது திருத்தச் சட்டத்தை கைவிட்டதுதான் தவறு என்று கூறுகின்றனர். ஆனால் இந்தச் சட்டத்தின்படி எதிர்க்கட்சிகளின் சார்பில் ஓர் உறுப்பினரை நியமிக்காமல் பத்து விடயங்கள் இழுத்தடித்தனர் ஐக்கிய தேசியக் கட்சியினர். இதனால்தான் 18 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது என்று எதிர்க்கட்சியினரின் பக்கமே திருப்பி அடித்தார் பிரதமர்.

இதனை மறுத்தனர் எதிர்க்கட்சியினர் அதாவது 17 ஆவது திருத்தத்துக்கு அமைய நாங்கள் பிரதிநிதி ஒருவரை சிபார்சு செய்தோம். ஆனால் அன்று ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா அம்மையார் அதனை வெளியிட்டு அங்கீகரிக்காமல் இழுத்தடிப்புச் செய்தார் என்று சுட்டிக்காட்டினார் எதிர்க்கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர.

**இன்னும் ஒரு பாரதலக்ஷ்மன் உயிர் இழக்க கூடாது**

அரசாங்கத்துக்குள் இருக்கும் போட்டிக் குழுக்களினால் இப்பொழுது ஒரு பாரத லக்ஷ்மனின் உயிர் இழந்து விட்டார். இன்னும் ஒரு பாரத லக்ஷ்மன் உயிர்போகக் கூடாது என்பதே எனது பிரார்த்தனை.

அரசியல்வாதிகளிடமும் சட்ட விரோத கும்பல்களிடமும் பெருமளவிலான ஆயுதங்கள் இருக்கின்றன. வடக்கில் இருந்து கடத்தப்படும் ஏ.கே. 47 துப்பாக்கி இங்கே ஒரு லட்சம் ரூபா முதல் ஒன்றரை லட்சம் ரூபா வரை விற்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. அரசு உரிய நட்வடிக்கை எடுக்காவிட்டால் மேலும் பல உயிர்களை இழக்கும் ஆபத்து ஏற்படும் என்ற அபாய அறிவிப்புடன் உரையை முடித்துக்கொண்டார் தயாசிறி ஜயசேகர.

## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

நெல்லியடி, நெல்லை சில்க் இன்று (20.10.2011) வியாழக்கிழமை தனது 9 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும் இந்த நன்நாளில் எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறும் இவ்வேளையில்



திரு. செ.சேதுராஜா
(அதிபர்)



திருமதி சிவரஞ்சினி சிவராஜா
(ஆசிரியை)

சிறந்த அதிபருக்கான விருதைப் பெற்ற யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. செ.சேதுராஜா அவர்களையும் சிறந்த ஆசிரியருக்கான விருதைப் பெற்ற திருமதி சிவரஞ்சினி சிவராஜா அவர்களையும் பாராட்டி மகிழ்கின்றோம்.

சி.அகிலதாஸ் குடும்பம்,
**உரிமையாளர், நெல்லை சில்க்,**
பழைய மாணவன்: யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வன்**
**வசந்தராஜன்**
**கயூரங்கன்** (அருண்)



முல்/யோகபுரம் மகாவித்தியாலய மாணவனும் முன்னாள் பனங்காமம் பற்று ப.நோ. கூ. சங்க கொள்வனவு உத்தியோகத்தர் வசந்தராஜன்-விஜிதா தம்பதியரின் அன்பு மகனுமாகிய கயூரங்கன் (அருண்) 2011ஆம் ஆண்டு தரம் 05 புலமைத் தேர்வில் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். கயூரங்கனின் இக்கல்வி உயர்வுச் சாதனையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேன்மேலும் இவர் சாதனைகள் படைக்க யோகபுரம் யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் அருள் புரிவாராக. இவரின் இச்சாதனைக்கு உந்துசக்தியாக விளங்கிய ஆசிரியர்கள் திரு. S. செந்தூர்ச்செல்வன், செல்வி. இ.ரமாஞ்சனா அவர்களுக்கும் நன்றி கலந்த பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
ஐயா, அம்மம்மா,
அண்ணன்மார்:
சாரங்கன், பிரியங்கன்.

சோதிடர்
சி.தா.விநாயகமூர்த்தி,
307, பாரதிநகர் மல்லாவி.

---

**பருத்தித்துறை நகரின் புகழ்பெற்ற கல்வி நிறுவனமும் ஆண்டு தோறும் பல மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்புகின்றதுமான**

# N.C.A கல்வி நிலையத்தின்

## வாணி விழாவும் பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும்

**இடம்:** கல்வி நிறுவன மண்டபம்
**காலம்:** 22.10.2011 சனிக்கிழமை
**நேரம்:** பி.ப. ஒரு மணி

**தலைவர்**

திரு. சிவ. முகுந்தன் (B.A) பிரபல தமிழாசிரியர்
(பிரதேச செயலக உத்தியோகத்தர், பருத்தித்துறை)
(நகரசபை உறுப்பினர், பருத்தித்துறை)

**பிரதம விருந்தினர்கள்**

திரு. வன்னிமரம் அரவிந்தன்
திருமதி அரவிந்தன் சுமீரா
(பிரபல அளவையியல், அரசறிவியல் ஆசிரியர்)
B.A. (Hons) 2nd Upper Political Science Special
M.A. (R) Publice Administration

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு. தி. கார்த்திகேயன் - கலாசார உத்தியோகத்தர் (B.A., M.A.)
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, மருதங்கேணி
செல்வி. சுகுணா - கலாசார உத்தியோகத்தர் (B.A., M.A.)
பிரதேச செயலகம், பருத்தித்துறை

**பரிசில் வழங்குநர்**

திருமதி அரவிந்தன் சுமீரா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகி;
மாணவர்கள்.

---

## பணியாளர்கள் தேவை

1.கணக்காளர் (ஆண்)
2.பாரஊர்தி மேற்பார்வையாளர் (ஆண்)

நேரில் சமூகம் தரவும்.

தொடர்பு: சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்.
இல.55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், மாட்டீன் ஒழுங்கையில் இலக்கம் 10 இல் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சுற்றுமதில், கிணறு, மலசலகூடம், அத்திபாரம் உண்டு. தரகர் தேவையில்லை.

**தொடர்பு: 0779414256**

## மணப்பெண்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 7 இல் செவ்வாயுடைய கனடா மற்றும் பிரான்ஸில் PR உடைய 95 மற்றும் 113 கிரக பாவமுடைய இரு மணமகன்களுக்குப் பொருத்தமான மணப்பெண்களை உள்ளூரிலும் வெளியூரிலும் பெற்றோர் தேடுகின்றனர்.

**தொடர்பு: 0750391806**

## மணமகன் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம், 1972 ஆம் ஆண்டு (புனர்பூசம்) பாவக்கிரகம் 32, பிறந்த B.A. ஆசிரியை மணமகளுக்கு மணமகன் தேவை.

**தொடர்பு: 0776042253, 0773238015**

---

# ST. ANTONY'S COLLEGE, KAYTS

FELICITATION OF THE ALL ISLAND
PHYSICAL TRAINING (P.T) CHAMPIONS 2011

*Chief Guests*

**HON. G.A. CHANDRASRI,**
(Governor, Northern Province)

*and*

**HON. K.N. DOUGHLAS DEVANANDA,**
(Minister of Traditional Industries and Small Enterprise)

**DATE:** Friday, the 21st October 2011
**TIME:** 9.00 a.m.

*You are cordially invited*

*Rector, Staff & Students.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர்

**திரு.சி.வசந்தரூபன்**

(MA,BA,DiP in F.Sc SPI . Trd F. Sc)

06.10.2011 இல் நடைபெற்ற யாழ்ப் பாணப் பல்கலைக்கழக 27ஆவது பட்டமளிப்பு விழாவில் *முதுகலைமாணி* பட்டம் பெற்றமைக்குப் பாராட்டு வதுடன் மேலும் கல்வி உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள்,
மு/பாரதி வித்தியாலயம், வள்ளுவர்புரம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 27 ஆவது பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்ற

செஞ்சொற் செல்வர்

**ஆறு.திருமுருகன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"கௌரவ கலாநிதியாய்"
பட்டம் பெறும்
எங்கள் கலைத் தூதரே
நூற்றாண்டு இடைவெளியின் பின்
சைவத் தமிழுக்கு
மெல்லத் திசை காட்டும்
ஆறுமுக நாவலரின் வாரிசே

சைவம் தழைத்தோங்க
தமிழும் திழைத்தோங்க
எங்கள் இளையோர் ஒழுக்கத்திலோங்க
இன்னும் உங்கள் சேவை
இந்த சமூகத்துக்குத் தேவை
தொடரட்டும் உங்கள் பணி

மருதடியான் அருள் பெற்று வாழ்.

வாழ்த்துவோர்:
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினரும், வழிபடுவோர் சங்கத்தினரும்.

## கண்ணீர் அஞ்சலி



**தேவனே தேவரானாய்!**

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவனும், புவியியல் ஆசிரியரும், கல்லூரியின் ஒவ்வொரு துறைகளிலும் தடம் பதித்த'*

**வை. மகாதேவன்**

*தேவரான போது, அமரர் கல்லூரி அன்னையை வளர்த்தமையை நினைத்துப் பார்க்கின்றது. அவரிடம் கற்று பேராசிரியர்களாகவும், நிர்வாக சேவையிலும், ஏனைய துறைகளிலும் மிளிர வைத்த அன்பரை நினைத்துப் பார்க்கிறது. 16.10.2011 அன்று 341, ஸ்ரீசங்கபோ வீதி, கவுடான, தெஹிவளையில் அமரத்துவம் எய்திய அவரது ஆத்மா சாந்தியடைய கல்லூரி சிவஞானவைரவப் பெருமானை வேண்டுவதுடன் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்.

*யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி*

## மரண அறிவித்தல்

### *நன்னித்தம்பி அருளம்பலம்*

(ஓய்வுபெற்ற அதிபர்)



இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி அருளம்பலம் கடந்த 17.10.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி- சிவகாமிப்பிள்ளை சாத்திரம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற செல்லப்பா- கனகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருளானந்தஸ்ரீ, திருஞானசோதி மற்றும் சச்சிதானந்தசிவம், சௌந்தரஜோதி, சண்முகவடிவேல், கலாஜோதி, பிரேமச்சந்திரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரியாசக்தி, குணேந்திரன்(பிரதம லிகிதரும், செயலாளரும் ப.நோ.கூ. சங்கம்-சுன்னாகம்), நித்தியகல்யாணி, சிவபாலன், ஸ்றெறின், மகேந்திரன், ஜெயந்தினி, மகிஞ்சளா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.*

தகவல்:
குடும்பத்தினர்.

## சட்டத்தின் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்காவில் மக்கள் சட்டத்தைக் கையில் எடுத்தனர். யாழ்ப்பாணத்தில் கிறீஸ் மனிதன் பிரச்சினையிலும், திருகோணமலையிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அம்பாறையில் இதனால் அப்பாவிப் பொலிஸ் உத்தியோகத்தரது உயிர் பிரிந்தது.

அத்துடன், தொம்பே பகுதியில் பொலிஸாரின் தடுப்பிலிருந்த சந்தேக நபர் உயிரிழந்ததை அடுத்து பொலிஸ் நிலையம் மீது அந்தப்பகுதி மக்கள் தாக்குதல் நடத்தின. அந்த சம்பவத்தில் ஒருசிலர் கைதுசெய்யப்பட்டபோதிலும் மேலும் சிலர் அரசியல்மயம் என்பதால் கைதுசெய்யப்படவில்லை. அதே போன்று மொரட்டுவப் பகுதியில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொலை செய்யப்பட்டார். ஆனால், அவர் சீருடை அணிந்திருக்கவில்லை. காரணம் மொறட்டுவ பொலிஸில் இவருக்கு சீருடை வழங்கப்படவில்லை.

தொடர்ந்து பொதுமக்கள் சட்டத்தை கையில் எடுப்பதை அனுமதிக்க முடியாது. ஏன் இவற்றை அரசியல்படுத்த முனைகிறார்கள் எனத் தெரியவில்லை. கொலன்னாவைச் சம்பவத்தில் முன்னாள் எம்.பி. பாரத பலியானார். துமிந்த சில்வா எம்.பி. படுகாயமடைந்தார். ஏன் இப்படியான சம்பவம் இடம்பெறுகிறது. கொலன்னாவை மற்றும் வெல்லம்பிட்டிய பொலிஸார் தங்களது கடமைகளை சரிவர நிறைவேற்றி இருந்தால் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றிருக்காது.

இது அரசுக்குள் ஏற்பட்டுள்ள சம்பவமாக இருந்தாலும் உலகம் எம்மை என்னவாக நினைக்கும்? இதேவேளை, முல்லேரியா சம்பவம் தொடர்பில் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல விசாரணை நடத்துகிறாராம். இதுகுறித்து விசாரணை நடத்துவதற்கு அவர் யார்? பொலிஸார் விசாரணை செய்து அறிக்கைவிடும்போது அதை ஏற்கலாம். ஆனால், இதனை ஏற்கமுடியாது.

அத்துடன், அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை குற்றப்புலனாய்வு அதிகாரிகள் விசாரித்துள்ளனர். அமைச்சரை அல்ல லக்ஷ்மன் ஹுலுகல்லவையையே விசாரிக்க வேண்டும். நாடாளுமன்றத்திற்கு என்ன செய்யமுடியும் என மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மை ஏற்பட்டு வருகின்ற வேளையில், முல்லேரியா சம்பவம் குறித்து அமைச்சர் ஒருவருடன் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேல்மாகாண சபை அமைச்சர் ஒருவரது வீடு விசேட அதிரடிப் படையினரால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி சோதனையிடப்பட்டுள்ளது. யார் விசேட அதிரடிப்படையை அனுப்பி வைத்தது? அவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்றேல் அவர்கள் வீணாக அங்கு சென்றிருக்கமாட்டார்கள். இந்த நிலையில் அண்ணனும், தம்பியும் அங்கு சென்று அவரைக் கட்டித் தழுவினர்.

எனவே, சட்டம், நீதித்துறை, லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் அரசு மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை. அதனால் 17ஆவது அரசமைப்பை நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் சட்டம் அரசு மீது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப சிறந்த பொறிமுறையொன்றை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார். (த-சி)

## ஆஸி.தொலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவம் ஏவிய ஏவுகணைகள் தொடக்கம் கடலில் நின்ற இலங்கைக் கடற்படையினர் தம் மீது தாக்குதல் நடத்தியது தொடக்கம் இவர் விவரித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் கடற்படை தளபதி தற்போது ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராக இருக்கிறார். இவருக்கு எதிராகவும் இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய இரட்டைக் குடியுரிமை பெற்ற பாலித கோகன்னவுக்கும் எதிராகவும் ஆஸ்திரேலியா விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் அவர் அந்த நாட்டு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆஸ்திரேலிய சமஷ்டிப் பொலிஸார் இந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது அவர் கொடுத்த முறைப்பாட்டை விசாரிக்கவும் அவர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர். இந்த நிலையிலேயே ஆஸ்திரேலியாவின் தேசிய தொலைக்காட்சி 9 நிமிட நிகழ்ச்சி ஒன்றையும் நடத்தியுள்ளது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி

**குகனேஸ்வரன் வர்ணிகா**

(யா/புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை)

எமது கழக உறுப்பினரின் மகள் செல்வி. கு.வர்ணிகா அவர்கள் 2011 தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் அவரை ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோரையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
புத்தூர் ஸ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம்,
கருகப்பை ஈஸ்வரன் தேவஸ்தானம்,
மகாத்மாஜி சனசமூக நிலையம்,
மகாத்மாகாந்தி சனசமூக நிலையம்,
அறிவொளி ஐக்கிய சன சமூக நிலையம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்- (வ-து)

### *மீதிகளை உறுதிப்படுத்தல்*

**கணக்காய்வுக்-காலம்- 01.01.2010 - 31.12.2010**

*எமது சங்கத்தின் 2010 ஆம் நிதி வருடத்துக்குரிய கணக்காய்வு நடைபெற்று வருகின்றது. குறித்த நிதியாண்டு காலங்களில் எமது சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்ட நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள் மற்றும் எமது சங்கத்தின் கூட்டுறவுக் கிராமிய வங்கியில் சேமிப்பு, நிலையான வைப்புக்களை பேணிவருபவர்கள், கடன் பெற்றவர்கள் ஆகியோர் 2010.12.31 திகதியில் உள்ளவாறான வருமதி சென்மதி மீதிகளை 2011.10.30 ஆம் திகதிக்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மீதிகளை உறுதிப்படுத்தாத சந்தர்ப்பங்களில் சங்க கணக்கு புத்தகங்களின் படி கணக்குகள் முடிவுறுத்தப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.*

க.தேவேந்திரன்,
தலைவர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
*03.02.1950*

இறைவன் அடியில்
*06.09.2011*



**திருமதி ஜோர்ஜ் சந்திராதேவி**

'வாழ்வில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதிருங்கள்'

*கடந்த 06.09.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி திருமதி ஜோர்ஜ் சந்திராதேவி அவர்களது ஆன்ம இளைப்பாற்றுக்காக உடுவில் செபமாலை மாதா ஆலயத்தில் இன்று [20.10.2011] வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் தேநீர் உபசரணையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

ஆர்க்லேன்,
*உடுவில், சுன்னாகம்.*

R.ஜோர்ஜ்(கணவர்).

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் கந்தையா சிவஞானம்



தோற்றம்: *26.08.1942*
மறைவு: *22.09.2011*

கடந்த 22.09.2011 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரத்தை அச்சிட்டு வெளியிட்டோருக்கும் மலர் வளையங்கள் வைத்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (20.10.2011) கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், நாளை மறுநாள் (22.10.2011) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

*86, ஐயனார் வீதி, சுன்னாகம்.*

குடும்பத்தினர்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி
கணிதமும் புள்ளிவிவரவியலும்
பரீட்சைகளுக்கான 1st Com, Part I,Part IIற்கானகணித புள்ளிவிவரவியல் கடந்தகால வினாத்தாள்கள் மீட்டல் வகுப்புகள் நடைபெறும்
தொடர்புகளுக்கு:-0754164564

B.A பேராதனை பல்கலைக்கழகம்
(வெளிவாரி)
G.A.Q 2010 ஆம் ஆண்டு பரீட்சை எடுத்து சித்தியடைந்த மாணவர்களுக்கான கலைமாணி இறுதியாண்டு (B.A) விரிவுரைகள் ஆரம்பம் 29.10.2011 காலை 8 மணி.
குறிப்பு:- சிங்களப் பரீட்சைக்கான பேச, எழுத, வாசிக்கக்கூடிய வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பம். 29.10.2011 (பி.ப. 2 மணி)
விவரங்களுக்கு:- S. அருள்தங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## 39ஆவது வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

**அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் - வ/து**

தபாற் கந்தோரடி, வட்டுக்கோட்டை 182/1, விசுவமடு

ஆரம்பம்: 22.08.1957 - பதிவு இல. 5/154 பதிவுத்திகதி 26.03.1964 சகல அங்கத்தவர்களுக்கும் மேற்படி சங்கத்தின் நிகழ்கால, எதிர்கால, செயற்பாடுகள் சம்பந்தமாக தங்களுடன் கலந்தாலோசித்து, அவசரமாகவும், அவசியமாகவும் ஒர் தீர்க்கமான முடிவை மேற் கொள்ளவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்:- யா/ சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்.
காலம்:- 23.10.2011, ஞாயிற்றுக்கிழமை.
நேரம்:- காலை 8.30 மணி.

தகவல்:
இ.ஆனந்தராசா- நிர்வாகி

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சபாரத்தினம் (சபா அண்ணன்)



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சபாரத்தினம் நேற்று (19.10.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான முத்துக்குமாரு- பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், திருச்செல்வம், திருட்செல்வி, அருட்செல்வன், சற்குணச்செல்வி, அருட்செல்வி, கிருஸ்ணசெல்வன், கலைச்செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராணி, கண்ணன், வாசுகி, ஸ்ரீஸ்கந்தராசா, குமரதாஸன், மைத்திரிக்கா ஆகியோரின் அன்பு மாமனும், யோகி, டினோ, நர்த்தகி, பிரணவன், வைஸ்ணவி, இரட்ணங்கி, கஜானனி, தர்சிகன், சிந்துஜன், தர்சிகா, சானுஜன், தர்சனா, சங்கீதா, டிலக்சன், அபிலேஷ், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## அமெ. காங்கிரஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினர் அங்கிருந்து ஹெலி மூலம் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடைந்தனர். பின்னர் இந்தக் குழுவினர் வாகனம் மூலம் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். யாழ். செயலக வாசலில் நிறைகுடம் வைத்து இந்தக் குழுவினருக்கு 'அமோக' வரவேற்பளிக்கப்பட்டது. அரச அதிபர் இவர்களை வரவேற்றார்.

அதன் பின்பு யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக இவர்களுக்கு அரச அதிபரால் கூறப்பட்டது.

மாவட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மீள் குடியேற்ற நடவடிக்கைகள், வழங்கப்பட்ட உதவித்திட்டங்கள், மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்கள் என்பன தொடர்பாக இந்தக் குழுவுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மீன் பிடித்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன் மக்களின் வீட்டுத் தேவைகள் அதிகம் இருக்கின்ற போதிலும் சிறிய அளவிலேயே வீட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென அரச அதிபர் இதன்போது தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர். அத்துடன் இங்குள்ள முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாகவும் இவர்கள் கேள்வியெழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அரச அதிபர் மாதாந்தம் 2 லட்சம் சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் வந்து செல்வதாகவும் அவர்களில் தென்பகுதியைச் சேர்ந்தவர்களும் அடங்குவதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் ஒரு மணி நேரம் இடம்பெற்றது.

இதேவேளை கடந்த மாதம் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வரவேற்பு எதுவுமின்றி யாழ். செயலகத்துக்குள்நுழைந்தமை குறிப்பிடத்தக்கது. (த-15)

## யாழ். மாணவத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கத்தை பார்வையிட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் சஞ்சீவ பண்டார, 'நாம் இலங்கையர்' அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களான லலித் குமார, உதுல் பிரேமரட்ன ஆகியோர் யாழ்ப்பாணம் சென்று அவரிடம் சுகம் விசாரித்துள்ளனர். அத்துடன், யாழ். பல்கலைக்கழக மாணவர்களிடம் கலந்துரையாடிய அவர்கள் குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக கேட்டறிந்துள்ளனர்.

(த-சி)

காணி விற்பனைக்குண்டு
ஊர்காவற்றுறை, கரம்பொன் கிழக்கில் இரண்டு கிணறுகள் கொண்ட 24 பரப்பு, மேடான வீடு கட்டவும் உகந்த புகையிலைத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு *உறுதி. தெரு எல்லைக் கோட்டுச் சான்றிதழ், நில அளவைப் படம், காணி உரிமைச் சான்றிதழ் என்பன உண்டு*
தொடர்புகளுக்கு- 0778998147

பொதுத் தகவல் தொழில்நுட்பம்
GIT - 2011
மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன், விற்பனையாகின்றன Selva
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்

வெளிநாடு செல்ல விரும்புகின்றீர்களா?
படிக்கவா? வியாபாரத்துக்கா? தொழில் தேடியா?
* வழிவகைகள் எவை?
* படிவங்கள் எவை?
* தேவையான ஆங்கில வகுப்புகள் எங்கே?
இவற்றுக்கான நியாயமான தீர்வுக்காக எம்மை நாடி வாருங்கள்.
திசைகாட்டி
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்.
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0214914527
யாழ். நகரில் இருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை.

## மரண அறிவித்தல்

### கதிரவேலு ஆறுமுகம்



மூளாய் தெற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஆறுமுகம் (இளைப்பாறிய அதிபர்) நேற்று (19.10.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், (இளைப்பாறிய உப அதிபர்), முருகநேசன் (முன்னாள் பெரதேனியா பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர்), செல்வநேசன், (பொறியியலாளர், கனடா), நேசமலர் (ஆசிரியை- விக்ரோறியாக் கல்லூரி), நேசானந்தி (ஆஸ்திரேலியா), நேசராணி(ஆசிரியை- விக்ரோறியாக் கல்லூரி), Dr.காந்தநேசன்(யாழ். போதனா வைத்தியசாலை), நேசரஜனி (கணக்காளர்-ஆஸ்திரேலியா), நேசபவாணி(பிரதேச செயலகம்-உடுவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தாரணி, மரியதாஸ் (மாநகர சபை- யாழ்ப்பாணம்), நவரஞ்சன், தனபாலசிங்கம்(பிரதேச சபை- நல்லூர்), Dr.ரதினி(யாழ். போதனா வைத்தியசாலை), Dr.சிவன்ராஜரட்ணம், தியாகச் சந்திரன்(மோகன்-MOH அலுவலகம்- தெல்லிப்பழை) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.

தகவல்:
Dr.A.காந்தநேசன்,

(நிபந்தனைகள் எதுவும் இன்றி) சிறந்த உத்தரவாதமும் சிறந்த விற்பனையின் பின் முற்று முழுதான இலவச சேவை
தீபாவளியை
நளினின் கணணியுடன் கொண்டாடுங்கள்
NALIN இன் Special offer
இனிய தீபத்திருநாளை முன்னிட்டு ஓர் புத்தம் புதிய கணணி / மடிக்கணினியை நளின் நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்.
15 வகையான புத்தம் புதிய Laptop கள்
Computer,Laptop வாங்க நம்பகரமான இடம்.


பெறுமதி மிக்க கணினி பரிசில் பொருட்களை அள்ளிச் செல்லுங்கள்.
இவை அனைத்தும் கணினி/ மடிக்கணனி வாங்குபவர்களுக்கு
Free
Hp/Canon In Jet Printer Head Phone/Webcam
Samsung Laser Printer இலவசம்
E177 Huawi Dongle அத்துடன் Webcam Head Phone இலவசம்
Free இலவசம் Free இலவசம் Free இலவசம்
இலவசமாக வழங்கப்படும் அனைத்தும் பொருட்களுக்கும் 1 வருட உத்தரவாதம் உண்டு
எந்த விதமான மறைமுக கட்டணமும் இல்லை [Service Charge]

எமது நிறுவனம் ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறக்கப்படும்.
Nalin City Showroom
365, Luxan Plaza, Kasthuriyar Road, Jaffna.
0212220838 / 0777667974
NALIN Information Technologies Pvt Ltd.
Nalin information Technologies
195/4, parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1166, 0777667975

1.UK London Student Visa
2011 இல் A/L எழுதிய மாணவர்களா நீங்கள்?
உங்கள் பரீட்சை முடிவுகள் வருவதற்கு முன் London இல் கல்வி கற்க விசேட சந்தர்ப்பம்!
O/L இல்லாத மாணவர்களும் Visa பெறமுடியும்!
Bank Sponsor செய்து கொடுக்கப்படும்
2011இல் Visa பெற்ற மாணவர்களில் சிலர்

Sharmila Jaffna
S.Jasotharan (Pointpetro)
Thanushya Jaffna
Kesavan Jaffna
Thaskumar Jaffna
Suthagaran Thellippalai
2. UK Visit Visa
* London இல் உங்கள் உறவுகள் இருக்கின்றனரா?
* நீங்கள் தனிநபர் or கூட்டு வியாபாரச் சான்றிதழ் வைத்திருக்கின்றீரா? நீங்கள் புதுமணத்தம்பதியினரா?
* அரச உத்தியோகத்தரா?
கவலையை விடுங்கள் ஒருமுறை நேரில் சந்தியுங்கள்!!!
இன்று [20.10.2011] வியாழன் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை
Branch: SEC Visa Tech,
620, K.K.S. Road, Jaffna.
(நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக)
Hot Line: 0771022984, 0777887181
"நம்பிக்கையும் விடா முயற்சியும் வெற்றிக்கு உரம்"

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.